

# செங்காந்தள் - நெடுநல்வாடை

முனைவர் த. மகேஸ்வரி

புத்தகக்குறிப்பு

9 788198 300553



# செங்காந்தள் - நெடுநல்வாடை

முனைவர் த. மகேஸ்வரி

# Title Verso

**Title of the Book**: **Chenkaantal - Nedunalvadai**

**புத்தகத்தலைப்பு**: **செங்காந்தள் - நெடுநல்வாடை**

| | | |
|---|---|---|
| **Editor** | : | **Dr. D. Maheswari** |
| **First Edition** | : | 2024 |
| **Pages** | : | 125 |
| **Price** | : | 350 |
| **ISBN Number** | : | 978-81-983005-5-3 |

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu, India.

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu, India.

**பதிப்புரிமை / Copyright © 2024 கட்டுரையாளர்களுக்கு / Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# செங்காந்தள் புத்தகப் பகுதி

## Editorial Board / ஆசிரியர் குழு


**முனைவர் ஜெ. கவிதா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,

கோயம்புத்தூர் - 641004, தமிழ்நாடு, இந்தியா.

**மின்னஞ்சல்:** kavithamahendiran1973@gmail.com

**முனைவர் தி. பரிமளா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,

மதுரை – 625004, தமிழ்நாடு, இந்தியா.

**மின்னஞ்சல்:** jeyamadhan05@gmail.com

**முனைவர் செ. சாந்தி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,

சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.

**மின்னஞ்சல்:** shanthi_sf607@anjaconline.org

**முனைவர் ஆ. மகாலட்சுமி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,

பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.

**மின்னஞ்சல்:** mahalakshmia83@gmail.com

**முனைவர் நா. குமாரி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி,
வேலூர்-6, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** jeevikumarioct31@gmail.com

**முனைவர் சீ. விமல்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரைக்கல்லூரி
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** vimal.vanji2015in@gmail.com

**முனைவர் ப. சசிரேகா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி,
சென்னை – 600042, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் முகவரி: sasirekatamil05@gmail.com

**முனைவர் த. மகேஸ்வரி**,
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் – 626001, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** dmakesh88@gmail.com

**முனைவர் மு. சுமதி**,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** sumathisanjay67@gmail.com

**பொன். கனகா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வ. உ. சிதம்பரம் கல்லூரி,
தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** pon9514425928@gmail.com

## ஆசிரியர் குழு பணி விவரம்

இந்த ஆசிரியர் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

## Editorial Work Flow Details

This Editorial committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

# மதிப்புரை

சங்க இலக்கியத்தில் அகம் சார்ந்த காதல் நிலைகளைப் பல்வேறு விதங்களில் அழகுற விளக்கும் நூல் நெடுநல்வாடை. இந்நூலில் கலைகளின் நுட்பமும் பொதிந்து காட்சியளிப்பதைப் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் எடுத்தியம்புகின்றன. சமுதாயத்தின் வளர்ச்சியில் கலைகள் முக்கியப்பங்கு வகிக்கிறது. கூதிர் காலத்தில் மக்கள், விலங்கு, பறவை முதலியன குளிரால் வருந்தும் நிலை, அரண்மனை அமைப்பு, அரசமாதேவி துயில் கொள்ளும் அந்தப்புரம், வட்டக் கட்டில் சேர்க்கை ஆகியவற்றின் இயல்புகள், ஆற்றாமை, ஆற்றுவித்தல் பாசறைக்கண் அரசனின் நிலை, செயல் ஆகியவை தொடர்பான செய்திகளை நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. அதற்கு இணையாக கலைகள் சார்ந்த செய்திகளும் அதிகமாகவே காணப்படுகின்றன.

சங்க இலக்கியப் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடை தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நக்கீரரால் இயற்றப்பட்டது. நெடுநல்வாடை தலைவிக்கு நீண்ட நெடிய வாடையாகவும் தலைவனுக்கு நல் வாடையாகவும்

விளங்கிய செய்தியும், நெடுநல்வாடையில் கட்டிடக்கலை சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை ஆகியன சிறந்து விளங்கி இருந்தமையையும் **நெடுநல்வாடையில் கலை நுணுக்கம்** எனும் ஆய்வுக்கட்டுரையின் வாயிலாகத் தெளிவுற அறியமுடிகிறது.

இசைக்கலையில் சங்கத் தமிழர்கள் சிறந்த வல்லுனர்களாக இருந்திருக்கின்றனர் என்பதை நெடுநல்வாடையில் மகளிர் இசைப் பண்கள் இசைப்பதைக் கொண்டும், அரண்மனையில் சித்திர மாடம் இருந்ததையும், ஓவியங்கள் வரையப் பட்டிருப்பதையும் நெடுநல்வாடையில் காணமுடிகிறது. தந்தங்களால் செய்யப்பட்ட கட்டிலும், இரும்பால் செய்யப்பட்ட விளக்குகளும் அவர்களுடைய உலோக வேலைப்பாட்டிற்கான சான்றாக விளங்குகின்றன. இவை தவிர நெசவுக் கலையிலும், நகை வேலைபாடுகள் செய்வதிலும் கைதேர்ந்தவர்களாகச் சங்கத் தமிழர்கள் காணப்படுகின்றனர் என்பதையும் **நெடுநல்வாடையில் கலைநயம்** எனும் ஆய்வுக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

நெடுநல்வாடையில் மாடங்களும், அரண்மனை வாயில்களும், வீடுகளும் மாண்புற அமைத்திருக்கப் பட்டிருப்பதைக் காணமுடிகிறது. கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஒப்பனைக்கலை, நடனக்கலை மற்றும் இலக்கியக்கலை சார்ந்த அனைத்து செய்திகளையும் **நெடுநல்வாடையில் கலைகள்** எனும் ஆய்வுக்கட்டுரை விளக்குகிறது.

கட்டடங்களின் அழகியலைச் சிற்பங்களும் ஓவியங்களும் பன்மடங்கு உயர்த்திக் காட்டுவதோடு அவற்றின் அழகியலையும் **நெடுநல்வாடையில் கட்டிடக்கலை** ஆய்வுக்கட்டுரை வெளிக்காட்டுகிறது. பழந்தமிழரின் பண்பாடு, வாழ்வியல், நாகரீகம், வாழ்வியலை உணர்ந்து கொள்ளும் நோக்கோடும் கலை உணர்வை அறிந்து கொள்ளும் நோக்கோடும் இதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் நேர்த்தியான ஆய்வியல் முறைகளில் அமைந்துள்ளன.

**நன்றி**

**முனைவர் த. மகேஸ்வரி**

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | நெடுநல்வாடையில் கலை நுணுக்கம்<br>முனைவர் செ. சாந்தி | 1-25 |
| 2. | நெடுநல்வாடையில் கலைநயம்<br>முனைவர் ச. நாகராணி | 26-53 |
| 3. | நெடுநல்வாடையில் கலைகள்<br>முனைவர் க. மங்கையர்க்கரசி | 54-93 |
| 4. | நெடுநல்வாடையில் கட்டிடக்கலை<br>முனைவர் கு. லிங்கமூர்த்தி | 94-125 |

# Artistic Eminence in *Nedunalvadai*

**Dr. S. Santhi**, Associate Professor of Tamil,
Ayya Nadar Janaki Ammal College, Sivakasi.
ORCiD: https://orcid.org/0000-0001-7579-9302
**DOI: 10.5281/zenodo.14580222**

## Abstract

*There is much evidence that Tamil architecture, sculpture, painting, music, drama and the arts of singing were excellent in the Sangam period. "Nedunalvadai" is one of the poignant books from "Patthuppattu" written by Nakkhirarar. The poet sings jubliantly about the brave Tamil king Thalayananganathu Seruvendra Pandya Nedunchezhiyan in this book. "Nedunalvadai" is also known as Sirpappattu and was a long poem for the wife and a good poem for the poet. The purpose of this chapter paper is to poetically examine the artistic techniques employed by Nakkhirarar who poetically wrote down the artistic techniques of astronomy, architecture, sculpture, painting, etc. in this work.*

**Keywords:** Artistic, Eminence, *Nedunalvadai*.

## References

[1] Govindanar, Pulavar Ka. *Manaiyurai Purakkal*. (Nedunalvadai – Vilakkavurai), Ezhilakam Publication, Thiruvatthipuram (Seiyar), 1991.
[2] Kovaivanan. *Sangam Ilakiya Meyyiyal*. New Century Book House, Chennai, 2013.
[3] Chidambaranar, Sami. *Palamthamilar Valvum Valarchyum*. Naam Tamilar Pathipagam, 2012.

 ISBN Number: 978-81-983005-5-3

[4] Subramanian, N. *Sangakala Valzhviyal*. New Century Book House, Chennai, 1986.
[5] Poundurai, Rasu. *Tamilagak Kovirkattadakkalai Marabu Mayan Ariviyal Thozhilnutpam*. Meiyappan Pathipagam, Chidambaram, 2004.
[6] Puliyurkesikan, (U.A.). *Manimekalai*. Saradha Pathipagam, Chennai, First Edition – 2007.
[7] Narayana Velupillai Vidhuvan. *Patu Pattu* (Moolamum Thelivuraiyum) Part Two. Mullai Nilayam, Chennai, First Edition – December 1995.
[8] Rasamanickanar, M. *Tamilagak Kalaigalum Kalvetukkalum*. Pavai Publications, 2011.
[9] Ramakrishnan, A. *Tamilaga Varalarum Panbadum*. Sarvodaya Ilakkiya Pannai, Madurai. 2015.
[10] Vaithiyalingan, C. Sirpakkalai. Meiyappan Pathippagam, Chidambaram, 2016.
[11] Vaiyapuripillai, S. *Tamilar Panbadu*. Pari Nilayam, Chennai, First Edition – 2010.
[12] Venkatasamy, Mayilai Seeni. *Pazhangalath Thamilar Vanigam*. Poompuhar Pathippagam, Chennai, First Edition – May 2006.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.


ISBN Number: 978-81-983005-5-3

# நெடுநல்வாடையில் கலை நுணுக்கம்

**முனைவர் செ. சாந்தி,** இணைப்பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.
**ORCiD: https://orcid.org/0000-0001-7579-9302**
**DOI: DOI: 10.5281/zenodo.14580222**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்ககாலத்தில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை நாடகக்கலை, கூத்துக்கலை ஆகியன சிறந்து விளங்கியமைக்குச் சான்றுகள் பல உண்டு. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடை தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நக்கீரரால் இயற்றப்பட்டது. சிற்பப் பாட்டு என்றழைக்கப்படும் நெடுநல் வாடை தலைவிக்கு நீண்ட நெடிய வாடையாகவும் தலைவனுக்கு நல் வாடையாகவும் விளங்கியது. வானியல் சாத்திரங்கள், கட்டடம், சிற்பம், ஓவியம் முதலான கலை நுணுக்கங்களைக் கவித்துவத்தோடு இலக்கியம் செய்த நக்கீரரின் கலை நுணுக்கங்களைக் கவித்துவத்தோடு ஆராய்வதே இப்புத்தகப்பகுதியின் நோக்கமாகும்.*

.

**குறிப்புச்சொற்கள்:** கலை, மாண்பு, *நெடுநல்வாடை.*

**முன்னுரை**

மனிதனுடைய மனதில் உணர்ச்சியை எழுப்பி அழகையும் இன்பத்தையும் தரவல்லன கலைகளாகும். இவை கண்களால் கண்டு, காதினால் கேட்டு, உள்ளத்தால் இன்புறத்தக்கன. மொத்தம் அறுபத்து நான்கு கலைகள் இருந்தன என்றாலும் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, காவியம் என்ற ஐந்தும் அழகுக்கலைகள் என்றழைக்கப்பட்டு மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளன. இதற்கு இன்கலை, கவின்கலை, நற்கலை என்ற வேறு பெயர்களும் உண்டு. வானியல் சாத்திரங்கள், கட்டடம், சிற்பம், ஓவியம் முதலான கலை நுணுக்கங்களைக் கவித்துவத்தோடு இலக்கியம் செய்த நக்கீரரின் கலை நுணுக்கங்களைக் கவித்துவத்தோடு ஆராய்வதே இப்புத்தகப்பகுதியின் நோக்கமாகும். மனிதனின் நல்வாழ்விற்கு உதவும் தொழில்களும் கூட கலைநயம் மிக்கவையே என்றால் மிகையாகாது.

> **கலைகள் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கொண்டு அக்கால மக்களின் அழகியல் உணர்வை அறியலாம். மக்கள் தங்கள் வாழ்வில் பயன்படுத்திய அடையாளங்களும் முறைகளுமே கலைகளாக மாறியிருக்க வேண்டும். (சங்க இலக்கிய மெய்யியல், ப. 51)**

**கலையாற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம், கண்ணைக் கவரும்**

 ISBN Number: 978-81-983005-5-3

> **ஓவியமாக வெளிப்படலாம், சிற்பமாக உருக்கொள்ளலாம், கண்ணையும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் அழகிய கட்டடமாகவும் வெளிப்படலாம், பிறவாகவும் தோன்றிக் காட்சி அளிக்கலாம் (தமிழகக் கலைகளும் கல்வெட்டுகளும், ப. 3)**

என்பார் டாக்டர் மா.இராசமாணிக்கனார். படித்தறிந்தோ, படிக்காமல் கண்ணால் பார்த்து உள்ளத்தால் உணர்ந்து கையால் செய்யக் கற்றுக் கொண்டோ இயற்றப்படும் தொழில்கள் அனைத்தும் கலைகள் என்றழைக்கப்படும். இக்கலைகளை நிகழ்த்துபவர்கள் கலைஞர்கள் என்றழைக்கப்பட்டனர்.

**கலையும் பண்பாடும்**

சங்ககால மக்களின் பண்பட்ட வாழ்க்கையைக் குறிக்கும் பண்பாட்டில் கலைகளும் சிறப்பிடம் பெறுகின்றன.

> **கலைகளை நிலைக்கலைகள் என்றும் சலனக் கலைகள் என்றும் இரு கூறுபடுத்துகிறார்கள். சிற்பம், சித்திரம், வாஸ்து வித்தை ஆகிய மூன்றும் நிலைக்கலைகளாம், வாஸ்து வித்தை 'Architecture' என்றும் சிற்பத்தை 'Sculpture' என்றும் சித்திரத்தை Painting என்றும் ஆங்கிலத்தில் கூறுவர். இசை, கவிதை, நாடகம்**

 ISBN Number: 978-81-983005-5-3

**அல்லது கூத்து என்பவற்றைச் சலனக் கலைகள் என்பர். (தமிழர் பண்பாடு, ப. 27)**

வடமொழியில் கலைகள் அறுபத்து நான்கு என வரையறுக்கப் பட்டிருக்கின்றன. இக்கலைகளைப் பெரும்பாலும் பெண்களே கற்று வந்தனர். அவர்களுள்ளும் வேசியர்களே ஆர்வமுடன் கற்றனர். வேசியர் தெருவை வருணிக்கும் போது இளங்கோவடிகளும் “எண்ணெண் கலையோர் இருபெரு வீதி” என்று சிலம்பில் சுட்டப்பட்டிருப்பது எண்ணிப் பார்க்கத்தக்கது ஆகும்.

**கட்டடக் கலை**

ஒரு நாட்டின் நாகரிகத்தையும் வளர்ச்சியையும் பறைசாற்றுபவை அந்நாட்டில் அமைந்திருக்கும் கட்டடங்களாகும். கட்டிடங்களின் அமைப்பு முறை, நுண்ணிய வேலைப்பாடுகள் அவர்தம் அறிவு, முயற்சிக்கு அடையாளமாக விளங்கக் கூடியவைகளாகும். கட்டடக்கலை என்பது நம்மைச் சுற்றியுள்ள கலை, அறிவியல் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை ஒரு கண்கவர் துறையாகும். கட்டடங்களின் கட்டுமானப் பணி, அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்கள் எழுப்பப்பட்ட காலம், ஆட்சி முறை போன்றவைகள் கணிக்கப்பட்டுள்ளன என்பார் நீலகண்ட சாஸ்திரியார். மாட மாளிகைகளைக் கோபுரங்களை

 ISBN Number: 978-81-983005-5-3

வெறுமனே அழகுக்காக மட்டும் ஏற்படுத்தாமல் அவற்றைப் பாதுகாப்புக் கவசங்களாவும் பயன்படுத்திய பண்டைத் தமிழரின் கலை நுட்பம் அறிந்து நோக்கத்தக்கது ஆகும். இதனை “முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்” என்ற தொல்காப்பிய நூற்பா உறுதிசெய்கிறது. பாதுகாப்பு அரண்கள் யானை முதலிய படைகள் தங்கள் கொடிகளுடன் அரண்மனைக்குள் செல்லும் அளவிற்கு ஓங்கி உயர்ந்து கட்டப்பட்டிருந்தன.

**வென்றுஎழு கொடியொடு வேழம் சென்றுபுகக்**
**குன்றுகுயின்று அன்ன ஓங்குநிலை வாசல்.**

**(நெடுநல்வாடை, பா. 87, 88)**

சங்க காலத்தில் கட்டடக்கலை நூல்கள் இருந்தமைக்கான செய்திகள் அறியக் கிடைக்கவில்லை எனினும் சங்க இலக்கியங்கள் வழி அக்கால மக்களின் கட்டடத் தொழில் நுட்பத்தினை உற்று நோக்கினால் கட்டடக்கலை நூல்கள் இருந்திருக்கலாம் என்றே எண்ணத்தோன்றுகிறது. பருப்பொருளாக உள்ளப்படியால் கண்ணால் கண்டு இன்புறத்தக்கது கட்டடக்கலை ஆகும்.

**வான்வழி, காற்றியக்கம், கணிதம், நேரம், காலம் பற்றிய அறிவியல் சிந்தனைகள் இருந்திருக்கின்றன என்பதைச் சங்க காலப் பாடல்கள் கூறும். அக்காலத்தில் அளவறிந்து கட்டடங்களைக் கட்டும் நெறிமுறை**


ISBN Number: 978-81-983005-5-3

**இருந்துள்ளது. அவர்கள் கட்டடக்கலை நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுநர்கள் என்பதனை நெடுநல்வாடைப் பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. (தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு மயன் அறிவியல் தொழில்நுட்பம், ப. 7)**

சங்ககாலத் தமிழரின் பருவகால அறிவும், அதற்கேற்ப அவர்கள் பயன்படுத்திய கட்டுமானப் பொருட்களும் கலை நுணுக்கமும் வியப்பைத் தருவதாய் அமைகின்றன. இடம், பண்பாடு, தட்பவெப்பம் ஆகியவற்றிற்கு ஏற்பக் கட்டடக்கலையும், கட்டடத் தொழில்நுட்பமும் மாறுபட்டிருப்பதைத் தொல்லியல் ஆய்வுகள் உறுதி செய்கின்றன. இதனை, நெடுநல் வாடையிலும் மதலைப் பள்ளி, வேனிற் பள்ளிகளை அமைத்துப் பருவகாலச் சூழலுக்கு ஏற்ப மக்கள் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்திருப்பது தமிழர்களின் தொழில்நுட்பச் சிந்தனையைப் பறைசாற்றுகிறது.

**பள்ளியறையும் கதவமைப்பும்**

சிறு காற்றுக் கூட நுழைய முடியாமல், கதவுகள் அனைத்தும் அடைத்துத் தாழிடப்பட்டிருக்கிற படுக்கையறைக்கு மதலைப் பள்ளியறை என்றும் தென்றல் காற்று வீசும் பலகணிகளால் அமைக்கப்பட்ட படுக்கை அறைக்கு வேனிற் பள்ளி என்றும்

 ISBN Number: 978-81-983005-5-3

பெயரிட்டனர். அது வானம் வரை உயர்ந்திருந்தது. தேவரூரைத் தீண்டும்படி உயர்ந்த மேன்மாடம் என்று நச்சினார்க்கினியர் பொருளுரைப்பார். தெற்கிலிருந்து வீசும் தென்றல் காற்று இன்னும் குளிர்ச்சியைத் தரும் என்பதால் வேனிற் பள்ளியின் உறுதியான கதவுகளும் கூட அடைக்கப்பட்டிருந்தன என்பதனை,

**வானுற நிவந்த மேனிலை மருங்கின்...**

**போர்வாய்க் கதவம் தாழொடு துறப்ப.**

**(நெடுநல்வாடை, பா. 60-63)**

என்பவைகளின் வழி அறியலாம். மேலும், கதவு என்பது வீட்டின் முகத்தைப் போன்றது. அந்த வீட்டின் மரபு, தகுதி, சமயம் முதலானவைகள் கதவமைப்பு முறையினால் அறியப்படுகின்றன. தொடக்க காலத்தில் கதவு என்பது பாதுகாப்பு கருதியும், அக்கதவின் அமைப்பும் அடைத்தல், திறத்தல் ஆகிய இரண்டு பணிகளுக்கு உரியதாகவும் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. இது மரம், செடி, கொடிகளாலும் மூங்கில் குச்சிகளாலும் மறைக்கும்படி அமைக்கப்பட்டு இருந்துள்ளது. இதற்குப் படல் என்றும் (தழை,செடிகளால் செய்யப்பட்டது) தட்டி என்றும் (மூங்கில் குச்சி, பிரம்பு, மரச்சட்டத்தால் செய்யப்பட்டது) பெயரிட்டுள்ளனர். பிற்காலத்தில் கதவு அல்லது கதவம் என்றும் அழைக்கப் பட்டிருக்கின்றது.

 ISBN Number: 978-81-983005-5-3

அரசனது அரண்மனைக் கதவுகள் இரும்பினால் கட்டிச் சாதிலிங்கம் வழித்து, தாழ்பாளொடு இணைத்து, உத்திரம் அமைத்து, வெண்சிறு கடுகினை அப்பிவைத்து, உயர்ந்த நிலை அமைத்து, யானைகள் சென்று புகும்படியான பெரிய வாயில்களும் கதவுகளும் அமைக்கப்பட்டிருந்தன. தீய சக்திகள் நெருங்காமல் இருக்க வெண்சிறு கடுகினை அரைத்துப் பயன்படுத்திய சங்ககால மக்களின் நம்பிக்கைகளை அறிய முடிகிறது.

**அரண்மனை வகுத்தமுறை**

நெடுநல்வாடையில் அரசனுக்குக் கோயில் அமைத்த திறம், அரண்மனை, மண்டபம் மற்றும் வாயில்கள் வகுத்த முறை கூறப்பட்டுள்ளது.

**…வில் கிடந்தன்ன கொடிய பல்வயின்**
**வெள்ளியன்ன பிளங்கும் சுதைஉரீஇ,**
**மணிகண்டன்ன மாத்திரள் திண்காழ்ச்**
**செம்புஇயன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்**

**(நெடுநல்வாடை, பா. 108-112)**

நீரமணி போன்ற கருமையும் திரட்சியும் வலிமையும் அமைந்த கருங்கல் தூண்களை அமைத்து அரசனுக்குக் கோயில் அமைத்த திறத்தை இதன்வழி அறிய முடிகிறது. மேலும், திசைகளில் நிற்கும் தெய்வங்களை வாழ்த்தி வணங்கி, அரசர்கள் வாழ்வதற்கேற்ப அரண்மனை-


ISBN Number: 978-81-983005-5-3





மண்டபம் மற்றும் வாயில்கள் வகுத்த முறை நெடுநல்வாடையில் கூறப்பட்டுள்ளது.

அரண்மனை வகுத்த முறைகளை,

**அரசர்களின் உறைவிடங்களுக்கு அரண்மனை என்று பெயர். இதனைப் பண்டைக்காலத்தில் கோயில் என்று வழங்கினர். கோ- அரசன், இல்- இல்லம், தெய்வம் உறையும் கோயில்களைக் கோட்டம் என்று அழைத்தனர். (பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், ப. 100)**

என்று சாமி சிதம்பரனார் கூறுகிறார். மேலும்,

**கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேர்ந்த கட்டிடக் கலைஞர்கள் இருந்தனர். அவர்கள் கட்டிடம் கட்டுவதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுப்பார்கள். நிலத்திலே கட்டிடங்கள் கட்டுவதற்கு அடையாளம் இட்டுக் கொடுப்பார்கள். இவ்வாறு குறியிடுவதை இக்காலத்தில் சதுரித்தல் என்று கூறுகின்றனர். பண்டைக் காலத்துச் சிற்பிகள் மனையைச் சதுரிக்கும் போது திசைகளை வணங்குவார்கள். தெய்வத்திற்குப் பலியும் இடுவார்கள். கதிரவன் ஒரு பக்கத்தில் சாயாமல் உச்சியிலே நிற்கும் நடுப்பகலிலே மனையைச் சதுரிக்கத்**


ISBN Number: 978-81-983005-5-3





**தொடங்குவார்கள். (சிதம்பரனார் சாமி., மு.கூ.நூ, ப. 99)**

என்றும் சாமி சிதம்பரனார் கூறுகிறார். இச்செய்தி,

**ஒரு திறம் சாரா அரைநாள் அமயத்து**
**நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு**
**தேயம் கொண்டு தெய்வம் நோக்கி**
**பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து.**
**(நெடுநல்வாடை, பா. 75-78)**

நெடுநல்வாடையில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மனையிடத்தை அளத்தல்**

மனை கட்டும் போது பூமியின் ஈர்ப்பு விசை, பூமியின் இயக்கம், நிலத்தின் நீள, அகல முறைகளையும் கணக்கிட்டு, கோள்களின் நிழல் சாயாதபடி சித்திரைத் திங்கள் பத்து நாட்களுக்குமேல் இருபது நாட்களுக்குள் அமைந்த நாளில் பதினைந்து நாழிகையளவில் சிற்ப நூலறிந்த தச்சரால் அறிவியல் தொழில்நுட்ப முறைப்படி வாயில்களையும் மண்டபங்களையும் அமைத்த குறிப்பு நெடுநல்வாடையில் காணப்படுகிறது.

**பனை, தழை, சணல், மருள், ஆல், ஆத்தி, இலதை ஆகியவற்றின் நாருடன் பருத்தி நூலினையும் இணைத்துப் பின்னர் விரல் நுனி அளவினில் கயிறு தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். இக்கயிறானது முப்புரிக் கயிறு என்றும் அது**


ISBN Number: 978-81-983005-5-3

> **தேவர்களுக்கும் மறையோருக்கும் மன்னவர்களுக்கும் ஆகும். (இராசு பவுன்துரை டாக்டர்., மு. கூ. நூ, ப-356)**
>
> **மனையிடத்தைப் பாகங்களாகப் பிரித்தும் அப்பாகங்களுக்குரிய இடங்களில் அவற்றிற்குரிய தெய்வங்களையும் காண்பது இந்தியக் கட்டடக்கலை மரபில் காணும் பொது நெறிமுறையாகும். (மேலது, ப. 375)**

என்பது இராசு பவுன்துரை கருத்தாகும்.

**சிற்பக்கலை**

மனிதனது கண்ணையம் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு இன்பத்தைத் தரவல்லது சிற்பக்கலையாகும்.

> **சில் என்னும் வேர்ச் சொல்லடியாகச் சிலை என்பது பிறந்தது. கல் என்னும் பொருளைக் கொண்ட சிலை என்பதன் தொடர்பாகச் சிற்பம் எனும் சொல் உருவாயிற்று. (சிற்பக்கலை, ப. 17)**

தொல்காப்பியத்தில் சிற்பக்கலை குறித்த செய்தி காணக்கிடைக்கின்றது. வீரம், மானம், கற்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கியவர்களுக்கு நடுகல் எடுக்கும் மரபு இருந்துள்ளது. கண்ணகிக்குக் கல்லில் சிலை எடுத்தமை இதனுடன் ஒப்பு நோக்கத்தக்கது. பண்டைத்தமிழர்கள் சிற்பக்கலை ஓர் ஆக்கக்கலையாகக் கருதினர். அக்கலைஞர்கள் மண்ணீட்டாளர்கள் எனப்பட்டனர்.

 ISBN Number: 978-81-983005-5-3

தமிழரது சிற்பக்கலை எளிய பானை வனையும் தொழிலிலிருந்து உருவானது என்பர். அவர்கள் சிற்பாசாரிகள் என்றும் அழைக்கப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய சுதைகள் மற்றும் வண்ணங்கள் எளிதில் அழிந்துவிடக் கூடியவைகளாக இருந்ததால் சங்ககால சிற்பங்கள் பற்றி நேரடியாக அறிய முடியவில்லை.

> **சிலைகளும் படங்களும் வடிக்கப்பட்ட அல்லது வரையப்பட்ட மூலப்பொருட்கள் எளிதில் அழியக்கூடியவை ஆதலின் அக்கலைகள் முற்றிலும் மறைந்து விட்டன. (சங்ககால வாழ்வியல், ப. 452)**

என்பார் வி.ஏ.ஸ்மித்**.**

கட்டடக்கலையைக் காட்டிலும் சிற்பக்கலை மிகவும் நுட்பமானது. பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடிகள் முதலான இயற்கைத் தோற்றங்களை உள்ளதை உள்ளவாறு படியெடுப்பது சிற்பக்கலைக்கான இலக்கணம் என்றாலும் கூடச் சிற்பி தன் மனத்திரையில் காணலாகும் புறப்பொருட்களையும் கலைப்படைப்பாகப் படிவமாக்கிச் சிற்பங்களை வடிப்பது அவனது கலை ஆர்வத்தைத் தீர்மானிக்கிறது.

**கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**

 ISBN Number: 978-81-983005-5-3

**பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன.**

**(சிற்பக்கலை, ப. 36)**

சிற்பத்திற்கு உறுப்பாகும் பத்து பொருட்களில் கல், மரம், தந்தத்தால் சிற்பங்கள் அமைப்பது அனைவரது சிந்தனைகளையும் ஈர்ப்பதாக உள்ளது. அரசனின் அரண்மனை, அந்தப்புரம், கட்டில் முதலானவற்றில் தந்தத்தால் செய்யப்பட்ட சிற்பங்கள் இருந்துள்ளன.

**தசநான்கு எய்திய பணைமருள் நோன்தாள்**
**இகல்மீக் கூறும்ஏந்து எழில் வரிநுதல்**
**பொருது ஒழிநாகம் ஒழிஎயிறு அருகு எறிந்து…**

**(நெடுநல்வாடை, பா. 115-123)**

நிலத்தில் வாழும் விலங்குகளில் மிகப் பெரியதாகவும், நாற்பத்தெட்டு ஆண்டுகள் வரை உயிர் வாழும் விலங்கு யானை மட்டுமே ஆகும். யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழியும் இவ்விலங்கின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

சங்ககால அரசரது அரண்மனைகளில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்ட யானைகளின் தந்தங்கள், அரிய போர்க்களம் புகுந்த யானை, பகைவர் வேலால் தாக்கப்பட்டு இறந்துபோனால் அல்லது யானையின் தந்தம் தானே இற்று வீழ்ந்தால் மட்டும் அதனைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது அஃறிணை


ISBN Number: 978-81-983005-5-3

உயிர்களையும் தன்னுயிர் போலப் போற்றிய சங்ககால மக்களின் பண்பட்ட மனநிலையை எடுத்துரைக்கிறது.

**தந்தச் சிற்பங்கள்**

கருங்கல், மரம், தந்தம், உலோகம் முதலான உயிரற்ற பொருள்களுக்கும் உயிரோட்டமளிக்கும் சிற்பியர் படைப்புக் கடவுளான நான்முகனுடன் ஒப்பிடத்தக்க சிறப்பினையுடையவர்கள் ஆவார்கள். யானைத் தந்தத்தின் பயனைச் சங்ககால மக்கள் உணர்ந்திருந்தனர். தந்தம் என்பதைக் கோடு என்றும் எயிறு என்றும் கூறுவர். மரத்திலோ கல்லிலோ சிற்பங்களை உருவாக்குவது எளிது. சிற்பி தன் விருப்பத்திற்கு ஏற்பவும் செதுக்க முடியும். ஆனால் யானைத் தந்தங்களைக் கொண்டு சிற்பம் செய்யும் போது யானைத் தந்தங்களுக்கு ஏற்பவே சிற்பங்களைச் செதுக்க முடியும்.

**வினைமான் பாவை**

வாணிகத்தின் பொருட்டு வந்த யவனர் துறைமுகங்களுக்கு அருகில் தங்கியிருந்தார்கள். ஏற்றுமதி இறக்குமதி முடிந்தவுடன் அவர்களில் சிலர் திரும்பி விட்ட நிலையில் சிலர் தமிழ்நாட்டிலே தங்கித் தொழில் செய்தார்கள். அவர்கள் தச்சுத் தொழிலிலும் கண்ணாடி மணிகளைச் செய்யும் தொழிலிலும் தேர்ந்தவர்களாய் இருந்ததால் “யவனத் தச்சர்” எனப்பட்டனர். மண்ணால்

 ISBN Number: 978-81-983005-5-3

செய்த அகல் விளக்கையும், இரும்பினால் செய்த விளக்கையும் சங்ககால மக்கள் பயன்படுத்தினர்.

> **யவன நாட்டிலிருந்து வந்த அன்னப் பறவையின் உருவமாக அமைக்கப்பட்ட "ஓதிம" விளக்கையும் பெண் வடிவமாக அமைத்த பாவை விளக்கையும் தமிழர் உபயோகித்தார்கள்.**
>
> **(பழங்காலத் தமிழர் வாணிகம், ப. 52)**

**யவனர் இயற்றிய வினைமான் பாவை**
**கையேந் தையகல் நிறைய நெய் சொரிந்து**
**பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்எரி**
**(நெடுநல்வாடை, பா. 101-103)**

"பாவை விளக்கின் பரூஉச் சுடர் அவிழ" (முல்லைப் பாட்டு, 85), சிலம்பு (5-154), மணிமணிமேகலை (1-45), "யவனர் ஓதிம விளக்கு" (பெரும்பாணாற்றுப்படை 316-317) இவ்வாறு பாவை விளக்கின் சிறப்பு கூறப்பட்டுள்ளது இவண் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**சுதைச் சிற்பங்கள்**

பூம்புகார் நகரைக் காணவந்த மக்கள் கண்ணைக் கவரும் சுதைச் சிற்பங்களைக் கண்டவுடன் களிப்புற்று நின்றனர் என்கிறார் சீத்தலைச் சாத்தனார். **வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ (நெடுநல்வாடை, பா. 110)** என்ற அடிகள் சங்ககாலத்திலே சுதைச் சிற்பங்கள் இருந்ததைக் கூறுகின்றன.


ISBN Number: 978-81-983005-5-3

**வெண்சுதை வித்தகர் இயற்றிய**
**கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநகர்**
**(மணிமேகலை, 3-130, 131)**

தமிழ் நாட்டில் பல கோயில்களில் விமானங்கள் சுதையினால் ஆனவை.

> **ஆலயக் கோபுரங்களும் விமானங்களும் தெய்வ உருவங்களைத் தாங்கி இருப்பினும் அவற்றிற்கு அபிடேகமோ முறையான பூசை வழிபாடுகளோ நிகழ்த்துவதில்லை. ஆனால் சுதைச்சிற்பத் திருமேனிகளுக்கு முறையான வழிபாடுகள் உண்டு. ஆனால் அபிடேகம் கிடையாது. அதற்குப் பதில் தைலக்காப்போ, புனுகுச் சட்டப் பூச்சோ புரிந்து வருகின்றனர் (சிற்பக்கலை, ப. 40)**

**அரசமா தேவியின் கட்டில்**

அரசமா தேவியின் கட்டிலைச் சார்ந்து இடப்பட்ட பொருட்கள் அரச போகத்திற்கு உரியதாக மட்டும் அமைக்கப்படாமல் அறிவியல் தொழில் நுட்பத்துடனும் அமைக்கப்பட்டிருக்கிறது. கட்டிலைச் சுற்றிலும் முத்துக்கள் தொங்கவிடப்பட்டது வெம்மையைப் போக்கிக்கொள்ளவும், சிங்கம், புலி முதலிய விலங்குகளை வேட்டையாடுவது போன்ற தகடுகளைப் பதித்தது வீரமும் அஞ்சாமையும் மிக்க அடுத்த தலைமுறை தோன்ற வேண்டும் என்பதற்காகவும், தன் துணையைத் தழுவும்


ISBN Number: 978-81-983005-5-3

அன்னத்தின் உதிர்ந்த தூவியினைச் சேகரித்துப் படுக்கை விரிப்புகள் செய்தனர். நெடுநல்வாடை தவிர, **துணையைப் புணர்ந்த காலத்து மெய்யுருகி உதிர்ந்த தூவிதானும் (கலி., 72)** இவை போன்று இன்னும் சில இலக்கியங்களிலும் இக்குறிப்பினைக் காணமுடிகிறது.

**முத்துடைச் சாலேகம் நாற்றி குத்துறுத்து**
**புலிப்பொறிக் கொண்ட பீங்கேழ்த் தட்டத்துத்**
**தோடு அமை தூமடி விரிந்த சேக்கை ...**

**(நெடுநல்வாடை, பா. 125-134)**

அன்னத்தின் தூவியது சிறப்பையும் அது பரப்பப்பட்ட அரசமா தேவியின் கட்டில் மாண்பினையும் இதன்வழி அறியலாம்.

**ஓவியக் கலை**

ஓவியக் கலை என்பது ஒரு நுண்ணிய கலை. அது கண்ணையும் கருத்தையும் கவரும் திறம் படைத்தது. வரைதற்கலை ஓவியக்கலை எனப்படும். நிகழ்வுகளை படமாக எழுதிக் காட்டுவது, வரையப்படுவது ஓவியம், வரைவோர் குழாம் ஓவியர் எனப்பட்டனர். கற்பனையும், கைத்திறமும் நுண்ணறிவும் மிக்கவர்களே சிறந்த ஓவியர்களாக முடியும். ஓவியம் வட்டிகை எனவும் ஓவியம் வரையப் பயன்படுத்தப்பட்ட பலகை வட்டிகைச் செய்தி எனவும், ஓவியம் எழுதத்துணை நின்ற கோல் துகிலிகை எனவும் வடிவு எழுதி வண்ணம் தீட்டப்படாத ஓவியம்


ISBN Number: 978-81-983005-5-3

புனையா ஓவியம் எனவும் அழைக்கப்பட்டிருக்கிறது. ஓவியத்தைச் சித்திரம் என்றும் அழைப்பர். நேர் கோடு, வளைந்த கோடு, கோணக் கோடு முதலிய கோடுகளிலும் சிவப்பு, மஞ்சள், நீலம் நிறங்களிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தில் வரையப்பட்ட ஓவியங்களை இன்றும் நாம் கோவில்களில் காண முடிகிறது. முதல் மகேந்திரவர்மன், இராஜசிம்மன் ஆகிய இருவரின் ஆட்சிக்காலத்தில் கோவில்களில் ஓவியங்கள் வரையும் வழக்கம் சிறப்பான முறையில் நடைபெற்றது. முதல் மகேந்திரவர்மனுக்குச் “சித்திரக்காரப்புலி” என்னும் விருது வழங்கப்பட்டது இங்கு நினைவுகூரத்தக்கது.

ஓவியம் என்ற சொல்லின் பழமையான வடிவம் ஓவம் என்பதாகும். ஓவம் என்ற சொல் ஒவ்வு என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். இதற்கு ஒன்றைப் பற்றியிருப்பது என்றும் ஒன்றைப் போல் இருப்பது என்றும் பொருள்.

**ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர் (பதிற்று., 88)**
**ஓவத்தன்ன இடனுடை வரைப்பின் (புறம்., 251)**
**ஓவத் தன்ன வினைபுனை நல்லில் (அகம்., 98)**

போன்ற சங்க இலக்கியங்கள் இதற்கு தக்க சான்றாக அமையும். ஓவியக்கலையைச் சிற்பக்கலைக்கு முன்னோடி எனக் குறிப்பிடுவர். அரண்மனையிலும் கோவில்களிலும் ஓவியமாடங்கள் அமைக்கப் பட்டிருந்தன. அரசனுடைய

 ISBN Number: 978-81-983005-5-3

அரண்மனைகளில் ஓவியம் வரையப்பட்ட இடத்திற்குச் சித்திர மாடம் என்று பெயர்.

**பாண்டியன் நன்மாறனின் அரண்மனையிலும் இருந்த சித்திர மாடம் பற்றி மாங்குடி மருதனார் குறிப்பிடுவர். இம்மாடத்தில் இருந்த போது இறந்தமையின் இப்பாண்டியன் சித்திரத்துத் துஞ்சிய நன்மாறன் என அழைக்கப்படுகின்றான் என்ற செய்தி பொருத்திப் பார்க்கத்தக்கது ஆகும். (தமிழக வரலாறும் பண்பாடும், பக். 116, 117)**

சங்க காலத்தில் ஓவியம் வரையும் முறை முறையாகக் கற்பிக்கப்பட்டதா என்பதற்கான குறிப்புகள் இல்லை. ஆனால் அடியார்க்கு நல்லார் ஓவிய நூல் ஒன்று இருந்ததாகச் சிலப்பதிகார உரையில் கூறியுள்ளார். அரசனுடைய அரண்மனைகள், மாட மாளிகைகள், கோவில் சுவர்களில், திரைச்சீலையில் ஓவியங்கள் எழுதப்பட்டதை "ஓவிய எழினி" என்கிறது *சிலப்பதிகாரம்.* சித்திரம் செய்கைப் படாம் போர்த்ததுவே" என்கிறது *மணிமேகலை.* ஆம்பல் மலர்கள் ஏந்திய களிறுகள் சூழ்ந்ததிரு, இயற்கைப் பொருட்களான மலர்கள், கொடிகள் போன்றவையும் வரையும் மரபும் காணப்பட்டது.

**மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்**
**செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்**


ISBN Number: 978-81-983005-5-3

**உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்**
**கருவொடு பெயரி காண்பின் நல்லில்**
**(நெடுநல்வாடை, பா. 111-114)**

நீலமணி போன்ற நிறமும் திண்மையும் திரட்சியுமுடைய பெரிய தூண்களில் மற்றும் செம்பினால் செய்தது போன்ற உறுதியான நீண்ட நெடிய சுவர்களில் அழகிய பல பூக்களையுடைய பூங்கொடி ஓவியம் பொறிக்கப் பட்டிருந்தது. மேலும், சந்திரனும் உரோகிணியும் பிரியாது நிற்கின்ற நிலை ஓவியமாக வரையப்பட்டிருந்தது. அரசனும் அரசியும் சந்திரனும் உரோகிணியும் போல பரியாமல் வாழக் கடமைப்பட்டவர்கள் என்பதனை எடுத்துரைக்கவே அரசியின் படுக்கும் மேற்கட்டிலில் ஓவியம் இவ்வாறு வரையப்பட்டது. எனவே அது கருப்பக் கிரகம் போல இருந்தது என்கிறார் நக்கீரர்.

ஓவியங்கள் வண்ணம் தீட்டப்படாமல் இருந்தால் புனையா ஓவியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. தலைவனைப் பரிந்த தலைவி ஒப்பனை செய்து கொள்ளாமல் இருப்பதை புனையா ஓவியம் என்ற உவமைவழி வெளிப்படுத்தியமை ஆசிரியரின் கவித்திறத்திற்குச் சான்றாகும். பாண்டிய மன்னன் போரின் காரணமாக அரசியைப் பிரிந்து சென்றவுடன் அரசி ஒப்பனை செய்யாமல் இருந்ததை **புனையா ஓவியம் கடுப்பப் புனைவில் (நெடுநல்வாடை, பா. 147)** என்றவாறு

 ISBN Number: 978-81-983005-5-3

குறிப்பிடப்பட்டுள்ளது. மணிமேகலை, ஆதிரையிடம் பிச்சை வாங்கச் சென்றதை, **மணிமேகலை தான் புனையா ஓவியம் போல நிற்றலும்** என்று சாத்தனார் குறிப்பிட்டது ஒப்பு நோக்கத்தக்கது ஆகும்.

**முடிவுரை**

கலைகள் மக்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வண்ணம் இருந்துள்ளன. கலைகளையும் கலைஞர்களையும் பேணிய சங்ககால மன்னர்களின் கலைநயம் நினைந்து இன்புறத்தக்கது. யானையின் தந்தங்கள், அன்னத்தின் தூவியை வைத்து கலைப்பொருட்கள் செய்தாலும் கூட அவ்வுயிர்களைத் துன்புறுத்தாத சங்ககால மக்களின் மனிதநேயம் போற்றுதற்குரியது. செம்பினால் செய்யப்பட்டது போன்ற உறுதியான சுவர்களில் அழகிய ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததை அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

[1] கோவிந்தனார், புலவர் கா. *மனையுறை புறாக்கள்.* (நெடுநல்வாடை – விளக்கவுரை), எழிலகம் வெளியீடு, திருவத்தீபுரம் (செய்யாறு), 1991.

[2] கோவைவாணன். *சங்க இலக்கிய மெய்யியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2013.

 **ISBN Number: 978-81-983005-5-3**

[3] சிதம்பரனார், சாமி. *பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்*. நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2012.

[4] சுப்பிரமண்யன், ந. *சங்ககால வாழ்வியல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1986.

[5] பவுன்துரை, இராசு. *தமிழகக் கோயிற்கட்டடக்கலை மரபு மயன் அறிவியல் தொழில்நுட்பம்*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – டிசம்பர் 2004.

[6] புலியூர்க்கேசிகன், (உ.ஆ.). *மணிமேகலை*. சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – 2007.

[7] நாராயண வேலுப்பிள்ளை வித்துவான். *பத்துப் பாட்டு* (மூலமும் தெளிவுரையும்) இரண்டாம் பகுதி. முல்லை நிலையம், சென்னை, 1995.

[8] ராசமாணிக்கனார், மா. *தமிழகக் கலைகளும் கல்வெட்டுகளும்*. பாவை பப்ளிகேஷன்ஸ், 2011.

[9] ராமகிருஷ்ணன், ஆ. *தமிழக வரலாறும் பண்பாடும்*. சர்வோதயா இலக்கியப் பண்ணை, மதுரை. 2015.

[10] வைத்தியலிங்கன், செ. *சிற்பக்கலை*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – டிசம்பர் 2016.

[11] வையாபுரிப்பிள்ளை, எஸ். *தமிழர் பண்பாடு*. பாரி நிலையம், சென்னை, முதல் பதிப்பு – 2010.

[12] வேங்கடசாமி, மயிலை சீனி. *பழங்காலத் தமிழர் வாணிகம்*. பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2006.


ISBN Number: 978-81-983005-5-3

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்[https://creativecommons.org/licenses/by/4.0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.


ISBN Number: 978-81-983005-5-3

# Artistic Style in *Nedunalvadai*

**Dr. S. Nagarani,** Assistant Professor, Manickam Ramasamy College of Arts and Science, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0008-3800-3334**
**DOI: 10.5281/zenodo.14580237**

## Abstract

*Literature is the mirror of time. Nedunalvadai is one of the Pattuppattu collections from Sangam literature. It was written by Nakkirar. Nedunalvadai is often referred to as a poem that evinces the portrayal of scenes as a painting and is evidence of the testament of Nakkhirar's epic art. The Sangam Tamils were experts in the art of music which is described as enchanting the Lord and can be seen from the vocals of the female musicians playing in Nedunalvadai. It indicates that there was a custom of playing the harp (Yazhl) in the pleasant evening. The art of dance was excellent and was performed by the dancing girls (Adal Mahalar). It is possible to see that there was a painting gallery (Chittira Madam) in the palace and the paintings were shown in Nedunalvadai. It reveals the excellence of the painters. It is possible to see that the galleries, palace gates and houses are seen in Nedunalvadai. It portrays the Tamils are skilled in architecture. The frames are made of ivory and the lamps made of iron are the evidence of their metalwork. They are also skilled in the art of weaving and jewellery. Thus, the Nedunalvadai beautifully expresses the artistic skills of the Tamils.*

**Keywords:** Art, Tamil Culture, *Nedunalvadai*.

## References


[1] Raja Manikkanar, M. *Tamilagak Kalaigal*. Chellappa Pathipagam, Madurai, 2010.

[2] Sami Chidambaranar. *Pazhanthamil Valzhvum Valarchiyum*. Poompuhar Pathipagam, 2004.

[3] Subramanian, Sa. Ve (T.A), *Nedunalvadai*. Meiyappan Pathipagam, Chidambaram, 2009.

[4] Tamilannal. *Sanga Ilakkiya Oppedu*. Meenakshi Bookstore, Madurai, 2011.

[5] Backiyameri. *Kalamthorum Tamilar Kalaigal*. Poovendhan Pathipagam, Chennai, 2005.

[6] Perumal, A. Ka. *Tamilar Kalaiyum Panbadum*. Pavai Publication, Chennai, 2015.

[7] Mallika (P.A). *Pattuppattu Aaivuraigal Desiya Karutharangam*. Postgraduate Department of Tamil. Mannar Thirumalai Nayakkar College, Pasumalai, Madurai, 2005.

[8] Mareeswari, G. *Nunkalaigal*. Naam Tamilar Pathipagam, Chennai, 2004.

[9] Yazh Chandra, S. (V.A), *Nedunalvadai*. Chellappa Pathipagam, Madurai, 2008.

[10] Velupillai, A. *Tamil Ilakkyathil Kaalamum Karuthum.* Kumaran Book House, Chennai, 2010.


**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# நெடுநல்வாடையில் கலைநயம்

**முனைவர் ச. நாகராணி,** உதவிப்பேராசிரியர், மாணிக்கம் ராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0008-3800-3334**
**DOI: 10.5281/zenodo.14580237**

## ஆய்வுச் சுருக்கம்

*இலக்கியங்களே காலத்தின் கண்ணாடியாக திகழ்கின்றன. சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் ஒன்றான நெடுநல்வாடை நக்கீரரால் எழுதப்பட்டது. நக்கீரரின் காவியக் கலைக்கு ஒரு சான்றாகவே நெடுநல்வாடை ஓவியப் பாட்டு என்று குறிப்பிடப்படுகிறது. இறைவனே மயங்குவதாக குறிப்பிடப்படும் இசைக்கலையில் சங்கத் தமிழர்கள் வல்லுனர்களாக இருந்திருக்கின்றனர் என்பதை நெடுநல்வாடையில் மகளிர் இசைப் பண்கள் இசைப்பதைக் கொண்டு அறியலாம். மாலை நேரத்தில் யாழ் கொண்டு மீட்டும் வழக்கம் இருந்ததைக் குறிப்பிடுகின்றது. ஆடல் கலை சிறப்பாக இருந்தது என்பதனை ஆடல் மகளிர் என்ற வார்த்தையின் மூலம் அறியலாம். அரண்மனையில் சித்திர மாடம் இருந்ததையும், ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதையும் நெடுநல்வாடையில் காண முடிகிறது. இது ஓவியக்*

 ISBN Number: 978-81-983005-5-3

*கலைஞர்களின் சிறப்பை வெளிப்படுத்துகிறது. கட்டிடக்கலையில் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள் என்று விளக்குவது போன்று நெடுநல்வாடையில் மாடங்களும், அரண்மனை வாயில்களும், வீடுகளும் மாண்புற அமைத்திருக்கப்பட்டிருப்பதை காண முடிகிறது. தந்தங்களால் செய்யப்பட்ட கட்டிலும், இரும்பால் செய்யப்பட்ட விளக்குகளும் அவர்களுடைய உலோக வேலைப்பாட்டிற்கான சான்றாக விளங்குகின்றன. இவை தவிர நெசவுக் கலையிலும், நகை வேலைபாடுகள் செய்வதிலும் கைதேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறு நெடுநல்வாடை தமிழர்களின் கலை நுட்பத்தை திண்ணிய முறையில் வெளிப்படுத்துகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** *கலை, தமிழ் கலாச்சாரம், நெடுநல்வாடை.*

**முன்னுரை**

மனிதனது உள்ளத்தை தன் வயமாக்கி கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பாராட்டத்தக்க நிலையை உருவாக்குவதே கலையாகும். “கலை ஆற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம்; கண்ணைக் கவரும் ஓவியமாக வெளிப்படலாம்; சிற்பமாக வெளிப்படலாம்; கண்ணையும் கருத்தையும் தன்பால் கவர்ந்து நிற்கும் அழகிய கட்டிடமாக வெளிப்படலாம்;

பிறவாகவும் காட்சியளிக்கலாம்" என்று கலை குறித்து மா.இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார். உள்ளத்திற்கு மகிழ்வையும், உணர்வுப் பெருக்கத்தையும் உருவாக்கக் கூடியது கலையாகும். கலை என்பது பல் பொருட்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். ‘கலை’ என்பது பெயர்ச்சொல்லாக இருக்கும் பொழுது இசைக்கலை, நாடகக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை எனப் பலவகைக் கலைகளைக் குறிக்கும். ‘கலை’ என்னும் சொல் வினையைக் குறிக்கும் போது ‘கலைத்துப் போடுதல்’ என்னும் பொருளில் வரும். கலை என்னும் பெயர் ‘கல்’ என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது எனலாம். ‘கல்லுதல்’ என்றால் ‘தோண்டுதல்’ என்று பொருள். மனதிற்குள் மறைந்திருக்கும் ஆடல், பாடல், ஓவியம், சிற்பக்கலை நுணுக்கங்களை வெளிக்கொணர்வது கலை எனப்படும்.

‘கலை’ என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் ‘ஆர்ட்’ (ART). ‘ஆர்ட்’ (Art) என்றால் ‘திறன்’ என்று பொருள். கலையினை ‘மனத்திறன் வெளிப்பாடு’ என்னும் பொருளில் சிலம்பு குறிக்கின்றது. மனதில் இருந்து புறப்படும் கலைகள் கண்ணால் கண்டும், காதால் கேட்டும், இன்பம் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றன. கண்ணையும் செவியையும் கவர்ந்து அவற்றின் வாயிலாக மனதிற்கு இன்பம் ஊட்டுவது கவின் கலையாகும். இசை,


ISBN Number: 978-81-983005-5-3

நடனம், ஓவியம், சிற்பம், நாடகம் போன்றவை இதன் உள்ளடங்கும். மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை உருவாக்கும் கலைகள் பயன்தரு கலைகள் ஆகும். அணிகலன்கள் செய்தல் மண்பாண்டம் செய்தல், உலோகங்கள் செய்தல், நெசவு போன்றவை இதில் சொல்லப்படுகின்றது. நெடுநல்வாடையில் கலைநயம் குறித்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையாகும்.

**நெடுநல்வாடையின் சிறப்பு**

பத்துப்பாட்டு குறித்த செய்யுளுள் எட்டாவதாக அமைந்த தொகை நூல் நெடுநல்வாடையாகும். இந்நூலை தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாராட்டும் வகையில் நக்கீரனார் 188வரிகளில் பாடியுள்ளார். இவர் குறுந்தொகையில் எட்டும், நற்றிணையில் ஏழும், புறநானூற்றில் மூன்று பாடல்களும், அகத்தில் 37 பாடல்களும், திருமுருகாற்றுப்படையும் பாடி உள்ளார். (பத்துப்பாட்டு ஆய்வுரைகள் தேசியகருத்தரங்கம், ப.117) முல்லை நிலத்தின் சிறப்புகளை முதல், உரிப் பொருட்களான கார்காலம் மாலைப்பொழுது போன்றவற்றில் காட்சிப்படுத்தினார். 'மருவினிய கோல' என நெடுநல்வாடையைச் சிறப்பிக்கும் அடைச்சொற்களே இவ்விலக்கியத்தின் மாண்பை உணர்த்துகின்றன. மருவுதல் என்பது பயிலுந்தோறும் புதிய புதிய

 ISBN Number: 978-81-983005-5-3

செய்திகளையும், கோலம் என்பது புனையப்படும் புதிய காட்சிகளையும் புலப்படுத்தும் தன்மையைச் சுட்டுகிறது. வாடையை நெடு வாடையாகவும் நல்வாடையாகவும் பிரித்து இலக்கிய மாந்தரின் அகப்புற ஒழுக்கங்களை ஆசிரியர் படம் பிடித்து காட்டியுள்ளார். தன் அரண்மனையில் வருத்தத்தால் மெலிவுற்றிருக்கும் தலைவிக்கு, தலைவன் கார்காலத்தில் திரும்பி வருவேன் என்று சொல்லியதாக இப்பாடல் அமைகிறது. இப்பாடலில் தலைவி கார்காலம் வந்துவிட்டதால், தலைவனின் வருகையை எதிர்நோக்கியதால் நெடுவாடையாகவும், அதே வேளையில் தலைவன் போரில் வெற்றி பெற்றதால் அவனுக்கு நல்ல வாடையாகவும் இருக்கின்றதாகக் குறிப்பிடப்படுகிறது. அகவொழுக்கமான முல்லைத் திணையின் உரிப்பொருளான இருத்தலை முதன்மைப்படுத்தி நெடுநல்வாடையை உருவாக்கி இருப்பினும், 'வேம்புதலை யாத்த நோன்காழ் எகம்'' எனும் ஓரடியைக் கொண்டு இந்நூல் புறத்தொழுக்கத்தின் பாற்பட்டது என்றும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் காட்டுகிறார்.

## நெடுநல்வாடையில் கலைநயம்

### காவியக்கலை

கவிஞர்களும் காவியப் புலவர்களும் கவிதைகளையும், காவியங்களையும் இயற்றுவார்கள்.


ISBN Number: 978-81-983005-5-3

சிறந்த கவிதைகள் படிப்பருக்குப் பெருமை சேர்த்திடுவது போலவே, கவிஞர்களும் காவியப் புலவர்களும் பாடித் தருகின்ற எழுத்து ஓவியங்கள் படிப்பவர் மனதை கவர்ந்து மகிழ்ச்சி அடையச் செய்கின்றன. சில சமயங்களில் சிற்ப ஓவியங்கள் தருகின்ற இன்பத்திற்கும் மேலாக கவிஞர்களின் சொல்லோவியங்கள் அளவற்றறைவை ஆகும். குறிஞ்சிப்பாட்டை ‘திணைப்பாட்டு’ என்று கூறுவதைப் போல, நெடுநல்வாடையை ‘ஓவியப்பாட்டு’ என்று குறிப்பிடுவது பொருந்தும். இப்பாட்டினுள் கோப்பெருந்தேவியை புனையா ஓவியமாகக் காட்டுவதும், மழைக்கால-கூதிர்க்கால இயற்கை நிகழ்ச்சிகளைக் காட்சி நிலைப்படுத்தியதும் நக்கீரரின் காவியத்திறனுக்கான சான்றாகும்.

**மாமேயல் மறப்ப மந்தி கூர**
**பறவை படிவன வீழக் கறவை**
**கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்**
**குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்**

**(நெடுநல்வாடை, பா. 10-14)**

பறவைகளும், விலங்கினங்களும் குளிரால் அல்லலுறுவதை நக்கீரனார் கலை நயத்தோடு காட்சிப்படுத்தியிருப்பார்.

முழுவலி மாக்கள் கள்ளை அருந்தி விட்டுக் குளிரினைப் பொருட்படுத்தாமல் பெய்யும் மழையிலே

 ISBN Number: 978-81-983005-5-3

நனைந்து கொண்டு வீதி வலம் வந்தனர். குளிரினை ஏற்றுக்கொள்ள முடியாமல் நடுங்கிக்கொண்டிருந்த கோவலரது நிலையையும்,குளிர் மழையில் நனைந்து களி கொண்ட முழு வலி மாக்களையும் முரண்பட வெளிப்படுத்திக் காட்டியதில் ஆசிரியரின் திறம் புலனாகிறது.

**இசைக்கலை**

'இசைப்பு இசையாகும்' (தொல்.சொல்., நூ. 793) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. முத்தமிழின் நடுப்பகுதி இசைத்தமிழாகும். இசைப்போரையும், கேட்போரையும் உணர்வினால் இசைவிப்பது (இணைப்பது) இசை எனப்படும். இசை கல்மனதையும் கரைந்து இருக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. கற்றோரும் மற்றோரும் இசையினால் வயப்படுவர். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பது இசையாகும். விலங்குகள், பறவைகள், செடிகள், பாம்பு முதலிய உயிர்கள் இசையால் இன்பம் அடைகின்றன. இசையின் வயப்படாதவர் அன்பின் வயப்படாதவர் என்றே கூறலாம். இசை வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கும். இசையின் அருமையும் பெருமையும் நினைத்தே தமிழர் இசைத் தமிழை முத்தமிழில் நடுநாயகமாக வைத்துள்ளனர்.

 **ISBN Number: 978-81-983005-5-3**

இசை 7 வகை அடிப்படைகளை உடையது என்று முதன் முதலில் கண்டறிந்தவர்கள் தமிழர்கள் ஆவர். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர் பெற்றன. இவற்றிலிருந்து பிறப்பன திறங்கள் எனப்பட்டன. இவ்வாறு பிறக்கும் பண்களும் திறங்களும் பல கிளைகளாக இயங்கும் வகைகளில் எண்ணிறந்த இசை வகைகள் கண்டறியப்பட்டன. இதனை தஞ்சாவூர் ஆபிரகாம் பண்டிதரின் 'சங்கீத ரத்னாகரம்' என்னும் நூலினால் தெளியலாம். தமிழ்ப் பண்களில் இருந்து தான் இராகங்கள் தோன்றின என்னும் கருத்தை உறுதிப்படுத்துகிறது. தாளத்தின் விரிவுகளை திருப்புகழ் நூல்களில் காண்பதை விட வேறு எந்த நூலிலும் காண்பது அரிது என்கின்றார். (தமிழர்கலையும் பண்பாடும், ப. 58)

தமிழ்ப்பண்கள் குறிஞ்சிப்பண், பாலைப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண் என்று பெரும்பண்கள் ஐந்தாகும். இவற்றின் வகைப்பட்ட பண்கள் பல. அவற்றில் பகற்பண்கள், இரவுப் பண்கள், காலை மாலைப் பண்கள் என அவ்வப்பொழுதிற்கமைந்த பண்களும் வழக்கில் இருந்தன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் அவற்றின் இனங்களும் இசையை அடிப்படையாகக் கொண்டவையாகும். பண் - இராகம், பாண் - பாட்டு,


**ISBN Number: 978-81-983005-5-3**

பாணகர் - பாடகர், பாடினியர் - பெண் பாடகர். பாணரும் பாடினியரும் இசைத்தமிழ்ப் புலவராவார். இவருள் சீறியாழ், பேரியாழ் என்னும் யாழ் வகைகளை இசைத்துப் பாடுவோரும் உளர். அவர்கள் முறையே சிறுபாணர் என்றும் பெரும்பாணர் என்றும் பெயர் பெற்றனர். அவர்கள் தம் கருவிகளைக் கொண்டு வள்ளல்களின் புகழைப் பாடி பரிசைப் பெற்று வாழ்ந்தனர்.

சங்க காலத்தில் ஆயிரம் நரம்பு உடைய பெரிய யாழ் இருந்தது. யாழ் பற்றிய முழு விபரங்களையும் விபுலானந்த அடிகளார் ‘யாழ் நூல்’ என்னும் நூலில் எழுதி வைத்துள்ளார். இலக்கணம் பற்றி பஞ்சமரபு என்னும் இசைநூல் அண்மையில் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது என்று கு.வெ பாலசுப்ரமணியன் வெளிப்படுத்தி உள்ளார். தமிழ் மக்களின் வாழ்வோடு இசை இரண்டறக் கலந்தமையைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. கருப் பொருள்களைக் குறிப்பிடும் பொழுது யாழினையும் பறையினையும் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

**அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**யாழின் மறைய என்மனார் புலவர் (தொல்., நூ. 33)**

யாழ் பற்றிய இலக்கண நூல் இருந்தமையை தொல்காப்பியர் நூற்பாவால் உணரலாம். சங்க காலத்தில்


ISBN Number: 978-81-983005-5-3

தோல் கருவி, தொளைக்கருவி கஞ்சக் கருவி, நரம்புக் கருவி என நால் வகை இசைக் கருவிகள் இருந்தன. ஒவ்வொரு திணைக்கும் தனித் தனி பண்கள் பகுக்கப்பட்டு இருந்தன. குறிஞ்சிக்கு குறிஞ்சிப்பண் என்றும், முல்லைக்கு சாதாரிப் பண் என்றும், மருதத்துக்கு மருதப்பண் என்றும், நெய்தலுக்கு இரங்கல் பண்ணும், பாலைக்கு பஞ்சுரப் பண் என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருந்தன. இசை தொடர்பான பழமையான கல்வெட்டுக்கள் ஈரோட்டில் அரிச்சலூரில் கிடைத்துள்ளன. தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்று இதுவாகும். நெடுநல்வாடையில் இசை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ**
**கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப**
**(நெடுநல்வாடை, பா. 69-70)**

கூதிர்க்காலத்தின் குளிரையும் பொருட்படுத்தாது, ஆடல் மகளிர் தம் யாழை மீட்ட முயன்றனர். குளிர்ச்சியால் நரம்புகள் இணையவில்லை.தம் பருத்த மார்பால் நரம்பைத் தடவி, வெம்மையூட்டி,கரிய முதுகுத் தண்டையுடைய சிறிய யாழைத் தாம் விரும்பும் பண்ணில் நிறுத்தினர். குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என்னும் நான்கும் அக்காலத்து நிலத்து இயற்கையை ஒட்டி வழங்கிய இசை வகைகள் ஆகும். அந்நிலப்பெயரே

 ISBN Number: 978-81-983005-5-3

இசைக்கும் வழங்கப்பட்டது. செவ்வழி என்பது முல்லைக்கும் நெய்தலுக்கும் உரிய மாலை பண்ணாகும். மாலை நேரத்தில் செவ்வழிப்பண்ணை ஆகுளி, முழவு என்னும் கருவிகளோடு இசைத்ததனை மதுரைக்காஞ்சி கூறுகின்றது. இதனைக் கணக்கிடும் போது நெடுநல்வாடையிலும் செவ்வரிப் பண்ணே இசைக்கப்பட்டு இருக்கும் என்பது புலனாகிறது. மேலும் தலைவியின் துயரைக் குறித்த பாடல்களாகவே செவ்வழிப்பண் அமைந்திருக்கும்.

**ஆடற்கலை**

ஆடற்கலையை கூத்துக்கலை என்றும் கூறுவர். தொல்காப்பியத்தில் நாட்டியம் என்று சொல்லாட்சி காணப்படுகிறது. 'நாட்டிய மரபின் நெஞ்சுக் கொளினல்லது' என்ற நூற்பாவின் வாயிலாக தொல்காப்பிய காலத்திற்கு முன்பே நாட்டியக்கலை வழக்கில் இருந்தமையை உணரலாம். மனதால் நினைப்பதை வாயினால் பாடுவது போல உறுப்புகளின் குறிப்பினால் கருத்துக்களை விளக்குவது நாட்டியம் எனலாம். ஆடற்கலையில் முக பாவங்கள் இன்றியமையாதது ஆகும். மகிழ்ச்சி, துக்கம், கோபம் முதலான உணர்வுகளை வெளிப்படுத்துவது ஆடற்கலையின் சிறப்பியல்புகள் ஆகும். இவ்வுணர்வுகள் மெய்யின் கண் பட்டு தோன்றுவதால் மெய்ப்பாடு எனத்


ISBN Number: 978-81-983005-5-3

தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ஆரம்ப காலத்தில் கூத்து, நடனம், நாடகம் என்ற மூன்றுமே ஒரே பொருளில் வழங்கப்படும். “ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்” (நெடுநல்வாடை, பா. 67) என்ற வரிகளில் இருந்து ஆடற்கலை சிறப்புற்றிருப்பதை அறியலாம்.

**ஓவியக்கலை**

ஓவியக்கலை என்பது ஒரு சிறந்த கலையாகும். நடந்த பல நிகழ்ச்சிகளை படமாக எழுதிக் காட்டுவதாகும். கைத்திறமும் நுண்ணறிவும் உள்ளவர்கள் சிறந்த ஓவியராக முடியும். ஓவியக்கலை கண்ணையும் கருத்தையும் கவரும் சிறந்த கலையாகும். பண்டைத் தமிழர்கள் இக்கலையை மக்களுக்கு நல்லறிவூட்டவும் நீதிநெறிகளை கற்பிக்கவும் பயன்படுத்தி வந்தார்கள் .ஒரு நிகழ்ச்சியை எழுத்தால் எழுதாமல் ஓவியங்களால் எழுதி காட்டி விடலாம். எத்தகைய நிகழ்ச்சிகளையும் வாயால் சொல்லாமல் சித்திரத்திலே அமைத்துக் காட்ட முடியும். பண்டைக் காலத்தில் கோயில் மண்டபங்களிலும் பொது இடங்களிலும் மக்களுக்கு அறிவூட்டும் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன என்ற உண்மை பரிபாடலில் சொல்லப்பட்டுள்ளது. ஆதிகாலத்தில் உலகம் முழுவதும் ஓவியத்தை சுவர்களில் எழுதினார்கள். அதனால் தான் சுவற்றை வைத்தல்லோ சித்திரம் எழுத வேண்டும் என்று


ISBN Number: 978-81-983005-5-3

கூறப்பட்டது. கட்டிடம் சிற்பம் போலவே சித்திரமும் கண்ணால் கண்டு மகிழத்தக்கது.

சித்திரம் எழுதும் கோலுக்கு துகிலுகை என்பது பெயர். நேர்க்கோடு, வளைந்த கோடு, கோணக் கோடுகளை வரைந்து சித்திரமாக எழுதப்பட்டன. கோட்டினால் வரைந்த சித்திரத்திற்கு புனையா ஓவியம் என்பது பெயர் (தமிழகக் கலைகள், ப. 19). நெடுநல்வாடையிலும் தலைவனைப் பிரிந்ததால் தலைவியின் அழகுநலம் குறைந்திருப்பதை 'புனையா ஓவியம் கடுப்ப' என்ற வார்த்தைகள் கலைநயத்துடன் எடுத்தாளப்பட்டுள்ளன. புனையா ஓவியத்தை பலவித வண்ணங்களினால் புனைந்து அமைப்பது சித்திரம் என்ற பெயர் பெறும். பழங்காலத்தில் சுவர் ஓவியங்கள் சிறப்பாக எழுதப்பட்டன. அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள் முதலான கட்டடங்களின் சுவர்களின் மேல் சித்திரங்கள் எழுதப்பட்டன. வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கறுப்பு வண்ணத்தால் புனையா ஓவியம் வரைந்து , அப்புனையா ஓவியத்தைப் பல நிறங்களினால் புனைந்து சுவர் ஓவியங்கள் எழுதப்பட்டன அரண்மனைகளிலும், கோயில்களிலும் சித்திர மாடங்களும், ஓவிய மண்டபங்களும் இருந்தன. (பழந்தமிழ் வாழ்வும் வளர்ச்சியும், ப. 84)

 ISBN Number: 978-81-983005-5-3

**வெள்ளி யன்ன விளக்குஞ் சுதையுரீஇ**
**மணிகண் டன்ன மாட்திரட் டிண்காண்**
**செம்பியன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்**
**உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்**
**கருவொடு பெயரிய காண்பின் நல்லில்**

**(நெடுநல்வாடை, பா. 110-115)**

தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அரண்மனையில் சித்திர மாடம் இருந்ததை நக்கீரர் கூறுகிறார். அரசியின் துயர் குறித்து கூறும் இடத்தில் அரண்மனையில் இருந்த சித்திர மாடம் குறித்து சொல்லப்பட்டுள்ளது. சித்திர மாடமானது வெள்ளி போன்ற விளங்கக்கூடிய சாந்தினால் பூசப் பெற்றிருந்தது.அறைகள் நீல மணி போன்ற நிறத்தை உடையெனவாக திரட்சியாக இருந்தன. அங்குள்ள திண்மையான தூண்கள் செம்பால் செய்தது போன்று நீண்ட சுவர்களால் ஆனது அச்சுவர்களில் அழகே உருவான பல வகை பூக்களையும் கொடிகளையும் ஓவியமாக வரைந்திருந்தனர். அது பார்ப்பதற்கு மிகவும் இனிமையாக அமைந்திருந்தது.

**… விண்ஊர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து**
**முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய**
**உரோகிணி நினைவவள் நோக்கி நெடிதுயிரா**

**(நெடுநல்வாடை, பா. 159-163)**


ISBN Number: 978-81-983005-5-3

தலைவனைப் பிரிந்த தலைவியின் துயர நிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசி வேலைப்பாடுகள் நிறைந்த கட்டிலின் மீது அமர்ந்திருந்த போதும், தலைவனைப் பிரிந்த மனக்கலக்கத்துடனேயே அமர்ந்திருக்கின்றாள். புதிதாக செய்யப்பட்ட மெழுகு பூசப்பட்ட கட்டிலில் உள்ள மேற்கட்டியின் உட்புறத்தில் மேட ராசி முதல் விண்ணில் செல்லும் ராசிகளையும், விண்மீன்களையும் வரைந்திருந்தனர். அதில் திங்களுடன் உரோகிணியைச் சேர்த்து வரைந்திருந்தனர். சந்திரனும் உரோகிணி நட்சத்திரமும் பிரியாது நிற்கின்ற தன்மையில் ஓவியம் ஆக்கப்பட்டிருந்தது. கணவனும் மனைவியும் சந்திரனும் உரோகிணியும் போல் பிரியாமல் வாழக் கடமைப்பட்டவர்கள் என்பதை நினைவூட்டவே படுக்கும் கட்டிலின் மேற்கட்டில் இத்தகைய ஓவியம் வரையப்பட்டிருந்தது. இதனைக் கண்ணுற்ற அரசி துயரே உருவாக அமர்ந்திருந்தாள். கலை உணர்வுகளை இதமாக வெளிப்படுத்தக் கூடியது.

இன்பத்தை இரண்டு மடங்காகக் காட்டுவது போன்று, துன்பத்தையும் இரண்டு மடங்காக காட்டக்கூடிய வல்லமை கலைக்குண்டு. எனவேதான் தலைவனது எண்ண அலைகளால் மிதந்து கொண்டிருந்த தலைவி ஓவியத்தை பார்த்த அளவில் இன்னும் துயரக் கடலில் விழலானாள்.அதே போன்று போர்வையின் மேல்


ISBN Number: 978-81-983005-5-3

அரிமான் வேட்டையாடுவது போன்றும், கட்டடத்தில் முல்லை போன்று பலவகை மலர்கள் மலர்ந்துள்ளதையும் வரைந்திருந்தனர்.

**கட்டிடக்கலை**

ஒரு நாட்டின் சிறந்த நாகரிகத்தைக் காட்டுவது, அந்நாட்டில் அமைந்திருக்கும் கட்டிடங்களாகும். கட்டிடங்களின் அமைப்பும், வேலைப்பாடும் அந்நாட்டு மக்களின் அறிவுக்கும் முயற்சிக்கும் அடையாளமாகும். கட்டிடக்கலையிலே பண்டைத்தமிழர்கள் கை தேர்ந்தவர்கள். அவர்கள் பெரிய பெரிய நகரங்களை அமைத்திருந்தனர். அந்நகரங்களிலே மாடமாளிகை, கூடக் கோபுரங்களை அமைத்திருந்தனர். நகரைச் சுற்றி மதில், அகழி முதலிய பாதுகாவல்களை ஏற்படுத்தியிருந்தனர். **“மாடம் ஓங்கிய மல்லல் புதூர்”** என்று நெடுநல்வாடையில் மாடங்கள் உயர்ந்து நிற்கின்ற வளம் உடைய பழைய ஊர் என்று கட்டிடக்கலையின் சிறப்பு கூறப்படுகின்றது. அதுபோன்றே **“ஆறு கிடந்தன அகல் நெடுந்தெரு”** என்று குறிப்பிட்டு நீண்ட தெருக்களையும் உடையது என்பதையும் விளக்குகின்றது.

கோட்டைச்சுவரை முற்றுகையிடுவதும் போரின் ஒரு பகுதி என்பதால் கோட்டைச் சுவர் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்தது. வெற்றிக் கொடியோடு யானைகள் செல்லும்படி உயர்ந்த பெரிய


ISBN Number: 978-81-983005-5-3

அரண்மனைவாயில் மலையைக் குடைந்து செய்தது போன்றிருந்தது.

**வென்றுஎழு கொடியொடு வேழம் சென்றுபுகக்**
**குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்**

**(நெடுநல்வாடை, பா. 87-88)**

நகரத்தின் கோட்டை வாசல்கள் பெரிதாகக் கட்டப்பட்டிருந்தன. அவ்வாசல்களுக்கு வன்மையான கதவுகள் அமைக்கப்பட்டிருந்தன. யானை முதலியவைகள் அம்பாரியுடன் புகுந்து செல்லும்படியான அகன்ற உயரமான வாசல்களாக இருந்த இத்தகைய கோட்டை வாயிலைப் பற்றி நெடுநல்வாடையில் காணப்படுகிறது.

**தாழொடு குயின்ற போரமை புணர்ப்பின்**
**கைவல் கம்மியன் முடுக்கலின் புரைதீர்ந்த**
**ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை**

**(நெடுநல்வாடை, பா. 84-86)**

உட்புறம் தாழ்போடும் படி வேலைத்திறமை மிகுந்த தச்சனால் பொருந்த இணைத்து இடுக்கில்லாமல் நன்றாகச் செய்யப்பட்ட கதவுகள் உயர்ந்த வாசல்கள் இருந்தன. அது வெண் சிறுகடுகும், எண்ணெயும் பூசி விளங்கும் தெய்வ வடிவத்தைக் கொண்டது.

அரசர்கள் வாழ்வதற்கான பெரிய அரண்மனைகள் எப்படி கட்டப்பட்டன அக்கட்டிடங்கள் எத்தகைய தோற்றத்துடன் இருந்தன என்ற செய்திகளும்

 ISBN Number: 978-81-983005-5-3

நெடுநல்வாடையில் காணப்படுகிறது. அரசர்களின் உறைவிடங்களுக்கு அரண்மனை என்று பெயர். இதனை பண்டைய காலத்தில் கோயில் என்று வழங்கினர். ‘கோ’ – அரசன், ‘இல்’ - இல்லம். தெய்வம் உறையும் கோயில்களைக் கோட்டம் என்று அழைத்தனர். தற்காலத்தில் கட்டிடக்கலை வல்லுனர்கள் பெரிய கட்டிடங்களை கட்டுவதற்கு திட்டமிடுகின்றனர். அதனைப் படமாக எழுதி தருகின்றனர் அதை வைத்துக்கொண்டு கட்டிடக்கலையில் தேர்ந்தவர்கள் கட்டிடங்கள் கட்டுகின்றனர். இதைப் போலவே பண்டைத் தமிழகத்தில் கட்டிடக்கலையை கற்று அறிந்து தேர்ந்தவர்கள் இருந்தனர். அவர்கள் பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுப்பார்கள். அவர்கள் நிலத்திலே கட்டிடங்களை கட்டுவதற்கு அடையாளம் இட்டுக் கொடுப்பார்கள் இவ்வாறு குறியிடுவதை இக்காலத்தில் ‘சதுரித்தல்’ என்று கூறுகின்றனர் (நுண்கலைகள், ப. 35). பண்டைக்காலத்து சிற்பிகள் மனையை சதவிக்கும் போது திசைகளை வழங்குவார்கள் தெய்வத்திற்கு பலியும் இடுவார்கள்.

**... நூல் அறி புலவர் நுண்ணிதில் கயிறு இட்டுத்**
**தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கிப்**
**பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து**

**(நெடுநல்வாடை, பா. 75-79)**

 **ISBN Number: 978-81-983005-5-3**

எல்லாத் திசைகளிலும் தன் விரிந்த கதிர்களைப் பரப்பும் அகன்ற இடத்தை உடையது கதிரவன் மண்டலமாகும். கதிரவன் இயக்கத்தை அறிந்து இரு கோள்களை நடும்போது அதன் நிழல் சாயாது, மேற்குத் திசையில் எழுகின்ற உச்சிப் பொழுதில் (இது சித்திரைத் திங்கள் பத்தாம் நாளுக்கு மேல் இருபதாம் நாளுக்குள் நிகழும் என்பது கருத்துப் போலும்) சிற்ப நூல் வல்ல புலவர் தெளிவாக உணர்ந்து நூலை நேரே பிடித்துத் திசைகளைத் தெரிந்து கொள்வார். பின்பு அதற்குரிய தெய்வங்களை வழிபட்டு முடியரசர்களுக்கு மனைவகுப்பார். மனை வகுக்கும் விதிகளின்படி வாயில்கள், மண்டபங்கள் இவற்றை ஒரு சேர அகப்பட வளைத்து எடுத்துக் கொண்டு, அவற்றை ஓங்கிய மதிலகத்தில் அமைப்பர்.

**பருஇரும்பு பிணித்துச் செவ்வரக்கு உரீஇ**
**துணைமான் கதவம் பொருத்தி இணைமாண்டு**
**(நெடுநல்வாடை, பா. 80-81)**

ஆணிகளும் பட்டங்களுமாகிய பருத்த இரும்பால் சேர்த்து, சாதிலிங்கம் வழித்து, வேலைப்பாடுகளால் மாட்சிமைக்கப்பட்ட இரட்டைக் கதவை பொருத்தி இருந்தனர். மேலே உத்தரக்கட்டை அமைத்திருந்தனர். அது சிறந்த மரத்தால் செய்யப்பெற்றது. குவளை போன்ற மலர் வடிவங்கள் அதில் இருந்தன. கதவுகளுக்குப் புதிய பிடிகள் தாழ்ப்பாளோடு பொருத்தியிருந்தனர்.

 ISBN Number: 978-81-983005-5-3

பொத்துவாய் நன்கு சேருமாறு சேர்த்திருந்தனர். இவற்றைக் கைத்தொழில் வல்ல கம்மியன் முடுக்கிக் கடாவை இடைவெளியின்றி செய்திருந்தனர். **“வரைகண்டன்ன தோன்றல”** என்று கட்டிடக்கலை நயத்தினால் மலை போன்று கம்பீரமான தோற்றத்துடன் அரண்மனை காணப்படுவதாக *நெடுநல்வாடை* குறிப்பிடுகிறது.

**உலோகங்கள் செய்தல்**

பண்டைத் தமிழர்கள் இரும்பு, பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோக வகைகளைக் கொண்டு பல கருவிகளை செய்து வந்தனர்.

**தசநான்கு எய்திய பணைமருள் நோன்தாள்**
**இகல்மீக் கூறும் ஏந்துஎழில் வரிநுதல்**
**பொருதுஒழி நாகம் ஒழிஎயிறு வரிநுதல்**
**சீரும் செம்மையும் ஒப்ப வல்லோன்**

**(நெடுநல்வாடை, பா. 115-119)**

நாற்பது வயதான, முரசு போன்ற வலிமையான கால்களையும், போரில் வல்லமையும் உடைய யானை, போரில் இறந்த பின்பு இயல்பாக வீழ்ந்த அதன் தந்தங்களைக் கொண்டு செய்த கட்டில் என்று இப்பாடலில் கட்டிலின் உருவாக்கமும், சிறப்பும் கூறப்படுகிறது. இப்பாடலானது கம்மியர்களின் கலைநயத்தை மதிப்பிடுவதாக அமைகிறது.

 ISBN Number: 978-81-983005-5-3

**மடைமாண் நூணிழை பொலியத் தொடைமாண்டு**
**முத்துடைச் சாலேகம் நாற்றி,குத்துறுத்து,**
**புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்**
**தகடுகண் புதையக் கொளீஇத் துகள்தீர்ந்து**

**(நெடுநல்வாடை, பா. 124-127)**

கட்டிலை தந்தத்தால் உருவாக்கம் செய்தவர்கள் அதனை எவ்வாறு எல்லாம் அழகுபடுத்தினர் என்பதை இப்பாடலில் காணலாம். மூட்டுவாய் மாட்சியுடன் நுண்ணிய இலை பொருந்திய நூலை அழகாகக் கோர்த்து சுற்றிலும் முத்துமாலைகளை தொங்க விட்டிருந்தனர். “**இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ**” என்ற அடிகளில் விளக்குகள் இரும்பால் செய்யப்பட்டது புலனாகிறது. பொன் முதலிய உயர்ந்த உலோகங்களினால் பண்டைய மகளிர் அணியும் சிறந்த பொன்னடிக்கல், வளையல்கள் சிலம்பென்னும் ஆபரணம் பலவற்றை செய்தனர். பண்டைத் தமிழர்கள் உலோகங்களைக் கொண்டு படைகள், பாத்திரங்கள், அணிகலன்கள் செய்தனர் என்ற உண்மைகளை அறியலாம்.

**வாயுறை அழுத்திய வறிதுவீழ் காதின்**
**பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை**
**வலம்புரி வலையொடு…**

**(நெடுநல்வாடை, பா. 140-143)**


ISBN Number: 978-81-983005-5-3

தலைவனைப் பிரிந்த தலைவி அலங்கார வேலைபாடுகள் எதுவும் செய்யாமல் இருப்பதை பாடலில் வெளிப்படுத்தி இருப்பர். இருப்பினும் அவர்களுடைய காதணிகளும் வளையணிகளும் சொல்லப்பட்டிருக்கும். மிக்க ஒளியுடன் கூடிய காதணிகள் எதுவுமின்றி தழும்பு மட்டும் காணப்பட்டது. கைகளில் சங்கு வளையும் காப்பு நூலும் இணைந்து இருந்தன. வாளை மீனின் பிளந்த வாய் போன்ற வடிவுடைய சிவந்த நிறத்தை உடைய மோதிரம் இன்றி விரல்கள் இருந்தன. இதில் மோதிரத்தின் அழகிய வடிவம் சொல்லப்படுகின்றது. மேலும், அணிகலன்கள் கலைநயத்தோடு இருந்தமைப் புலனாகிறது.

**நெசவுக்கலை**

பண்டைத் தமிழர்கள் நெசவுத்தொழிலில் சிறந்து விளங்கினர். பருத்தி நூல் ஆடைகளையும், பட்டாடைகளையும், மிகவும் மெல்லிய ஆடைகளை நெய்வதிலும் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். ஆடைகளிலே பூ வேலைகள் செய்தனர். அழகழகான கறைகள் போட்ட உடைகளை நெய்தனர்.

**துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி**
**இணையணை மேம்படப் பாயணை இட்டுக்**
**காடிகொண்ட கழுவுறு கலிங்கத்துத்**
**தோடுஅமை தூமடி விரித்த சேக்கை**

**(நெடுநல்வாடை, பா. 132-135)**


ISBN Number: 978-81-983005-5-3

அன்னங்கள் புணரும் போது உதிர்ந்த மென்மையான தோலை சேர்த்து அணையாக விரித்து அதன் மேல் தலையணை, சாயணை போன்றவற்றை இட்டிருந்தனர். போர்வையின் மென்மைத்தன்மை வியக்கத்தக்கது.

**பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்**

**அம்மாசு ஊர்ந்த அவிர்நூல் கலிங்கமொடு"**

**(நெடுநல்வாடை, பா. 80-81)**

பூக்களால் செய்த அழகிய வேலைப்பாடமைந்த, மென்மையான ஆடையைப் பற்றிய பதிவு இப்பாடலடிகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**முடிவுரை**

கலைகள் மனிதனின் மன எழுச்சியைத் தூண்டி அழகுக் காட்சியையும், இன்ப உணர்ச்சியும் தந்து மகிழ்விக்கக் கூடியதாகும். கலைகள் மனித நாகரீகத்தின் பண்பாடாக விளங்குகின்றன. உலகம் எங்கும் நாகரிகம் பெற்று மனிதர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் கலைகள் வழங்கப்பட்டுள்ளன. கலைகளின் அடிப்படையான தன்மை எல்லா மக்களுக்கும் பொதுவாக இருந்த போதிலும் கலைகள் ஒரே விதமாக இல்லாமல் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாக வளர்ந்துள்ளன. கலைகளின் அடிப்படையான நோக்கம் கற்பனையும் அழகையும் இன்பத்தையும் தருவதாக இருந்தாலும் அவை வெவ்வேறு

 ISBN Number: 978-81-983005-5-3

விதமான தன்மையில் வளர்ந்திருப்பதன் காரணம் என்னவென்றால் அந்தந்த நாடுகளின் தட்பவெப்ப நிலை, இயற்கை அமைப்பு, சுற்றுச்சூழல், பழக்கவழக்கங்கள், போன்றவற்றால் மாறலாம். தமிழர்கள் கலைகளில் வல்லவர்கள். அவர்களின் நுட்ப அறிவால் இசைக்கலை, ஆடற்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக் கலைகள் போன்றவை வளர்ச்சி பெறும். வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாத உணர்வுகளை பிரதிபலிக்கும் சிறந்த கருவி கலையாகும். மனித நாகரீகத்தின் வளர்ச்சி நிலைகளே கலைகளின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. மக்களின் தனித்திறனை வெளிப்படுத்த கலைகள் வாயில்களாக அமைகின்றன. நெடுநல்வாடையில் காப்பியக் கலை, இசைக்கலை, ஆடற்கலை, ஓவியக்கலை, கட்டிடக்கலை போன்ற கவின் கலைகளோடு உலோகங்களை உருவாக்குதல், ஆடை ஆபரணங்கள் செய்தல் போன்ற பயன்தருக்கலைகளும் இடம் பெற்றுள்ளது ஒப்புநோக்கத்தக்கது. கலைகள் அறுபத்து நான்கு என்று சொல்லப்படுகின்றன. கலைகளில் இத்தனை வகைகளா என்று ஆராய நினைத்தோம் என்றால் எந்த ஒரு செயலையும் சிறப்பாகக் கண்ணைக் கவரக்கூடிய விதத்தில் செய்யும்போது அது கலையாகும் என்பதை உணரலாம். அந்தக் கலை உணர்வு மக்களின் இன்பத்தை அதிகரிக்கும் விதமாகவும் கற்பனை


ISBN Number: 978-81-983005-5-3

உணர்வுக்கு கை கொடுக்கும் வகையிலும் அமைந்திருக்கின்றது குறிப்பிடத்தக்கது. கலை உணர்வு இல்லாதவன் மனிதனாக இருந்திருத்தல் இயலாது. எனவே கலை உணர்வோடு மனிதன் வாழ்வதும், கலை நயத்தை பற்றி அறிந்து கொள்வதும் அவனது தேவையாகின்றது என்பது கருத்தில் கொள்ள தக்கதாகும்.

## குறிப்புகள்


[1] இராச மாணிக்கனார், மா. *தமிழகக் கலைகள்.* செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2010.

[2] சாமி சிதம்பரனார். *பழந்தமிழ் வாழ்வும் வளர்ச்சியும்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை-108, 2004.

[3] சுப்பிரமணியன், ச.வே (தெ.ஆ), *நெடுநல்வாடை.* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.

[4] தமிழண்ணல். *சங்க இலக்கிய ஒப்பீடு.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2011.

[5] பாக்கியமேரி. *காலந்தோறும் தமிழர் கலைகள்.* பூவேந்தன் பதிப்பகம், சென்னை, 2005.

[6] பெருமாள், அ. கா. தமிழர் கலையும் பண்பாடும். பாவை பப்ளிகேஷன், சென்னை, 2015.

[7] மல்லிகா (ப.ஆ). *பத்துப்பாட்டு ஆய்வுரைகள் தேசிய கருத்தரங்கம்.* முதுகலை தமிழ்த்துறை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை, 2005.


 ISBN Number: 978-81-983005-5-3

[8] மாரீஸ்வரி கௌ. *நுண்கலைகள்.* நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2004.

[9] யாழ் சந்திரா, சு. (வி.ஆ), *நெடுநல்வாடை.* செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2008.

[10] வேலுப்பிள்ளை, ஆ. *தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்.* குமரன் புத்தக இல்லம், சென்னை, 2010.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-81-983005-5-3

# Arts in *Nedunalvadai*

**Dr. G.Mangaiyarkkarasi**, Assistant Professor, Agurchand Manmull Jain College, Meenambakkam, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0895-0460**
**DOI: 10.5281/zenodo.14580262**

## Abstract

*"Nedunalvadai" is one of the books of "Pattuppattu" books from Sangam literature. This book is a mixture of verses on internal and external life. It was composed by Madurai Kankkayanar's son Nakkiranar. This book consists of 188 verses. The book is based on the story of the Sevilithai (The mentor of the Beloved (Thalaivi)) who prays to the king to overcome the enmity and return soon to relieve the grief of the princess who is separated from the Pandyan Neduncheliyan. The book describes the conditions of people, animals, birds, etc. suffering from cold during the Koodir (Winter) period, the structure of the palace, the Andhapuram where the Queen sleeps, the appearance of the vattakkatil (Round Shaped Cot), the incompetence, the arson and the status and actions of the king in the barracks. Among them, this chapter article will examine the news that is related to architecture, painting, sculpture, music, makeup, dance and literature found in "Nedunalvadai".*

**Keywords:** Arts, Sangam Literature, *Nedunalvadai*.

## References

[1] Alice (U.A). *Patitrupattu Moolamum Uraiyum*. NCBH, Chennai, 2004.

 ISBN Number: 978-81-983005-5-3

[2] *Sivakasindamani*. Second Volume, Varthamanan Publishing House, Chennai, 2010.
[3] Jeyapal. Ira. (U.A). Akananuru *Moolamum Uraiyum*. NCBH, 2004.
[4] Balasubramanian, K. V. (U.A) Purananooru *Moolamum Uraiyum*. NCBH, Chennai, 2004.
[5] Mahamagopadhyaya. *Perungathai Part I Unchaik Kandam*. U. V. Saminathaiyar Library, 1968.
[6] Mayilai Seenivenkatasamy. *Nunkalaigal*. Saratha Manickam Publishing House, Chennai, 2010.
[7] Mayilai Seenivenkatasamy. *Tamilar Alagukkalaigal*. Saratha Manickam Publishing House, Chennai, 2010.
[8] Mohan, I. Pathupattu, *Moolamum Uraiyum*. NCBH, Chennai, 2004.
[9] Viswanathan, A. Kalithokai *Moolamum Uraiyum*. NCBH, Chennai, 2004.
[10] Sri Chandran, J. *Manimekalai Moolamum Thelivuraiyum*. Tamil Nilayam, Chennai, 2012.
[11] Sri Chandran, J. *Silappathikaram Moolamum Thelivuraiyum*. Tamil Nilayam, Chennai, 2012.



**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.


ISBN Number: 978-81-983005-5-3

# நெடுநல்வாடையில் கலைகள்

**முனைவர் க. மங்கையர்க்கரசி,** உதவிப்பேராசிரியர், அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0895-0460**
**DOI: 10.5281/zenodo.14580262**

## ஆய்வுச்சுருக்கம்

*சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு நூல்களில் நெடுநல்வாடையும் ஒன்று. அகமும்,புறமும் கலந்த இந்நூலை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் இயற்றினார். இந்நூல் 188 அடிகளைக் கொண்டது. பகை முடிப்பதற்காக போர் மேல் சென்ற பாண்டிய நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் பிரிவுத் துயரை நீக்குவதற்காக செவிலித் தாய், அம்மன்னன் பகையை வென்று விரைவில் வருக என கொற்றவையை வேண்டுவதாக இந்த நூல் அமைந்துள்ளது. கூதிர் காலத்தில் மக்கள், விலங்கு, பறவை முதலியன குளிரால் வருந்தும் நிலை, அரண்மனை அமைப்பு, அரசமாதேவி துயில் கொள்ளும் அந்தப்புரம், வட்டக் கட்டில் சேர்க்கை ஆகியவற்றின் இயல்புகள், ஆற்றாமை, ஆற்றுவித்தல் ஆகியவையும், பாசறைக் கண் அரசனின் நிலை, செயல் ஆகியவையும் இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளன என்றாலும், கலைகள் தொடர்பான*

 ISBN Number: 978-81-983005-5-3

*செய்திகளையும் நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. அவற்றுள் கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஒப்பனைக்கலை, நடனக்கலை, இலக்கியக்கலை குறித்து இக்கட்டுரையில் ஆராய்வோம்.*

**குறிப்புச்சொற்கள்:** கலை, சங்க இலக்கியம், *நெடுநல்வாடை.*

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு நூல்களில் நெடுநல்வாடையும் ஒன்று. அகமும்,புறமும் கலந்த இந்நூலை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் இயற்றினார். இந்நூல் 188 அடிகளைக் கொண்டது. பகை முடிப்பதற்காக போர் மேல் சென்ற பாண்டிய நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் பிரிவுத் துயரை நீக்குவதற்காக செவிலித் தாய், அம்மன்னன் பகையை வென்று விரைவில் வருக என கொற்றவையை வேண்டுவதாக இந்த நூல் அமைந்துள்ளது. கூதிர் காலத்தில் மக்கள், விலங்கு, பறவை முதலியன குளிரால் வருந்தும் நிலை, அரண்மனை அமைப்பு, அரசமாதேவி துயில் கொள்ளும் அந்தப்புரம், வட்டக் கட்டில் சேர்க்கை ஆகியவற்றின் இயல்புகள், ஆற்றாமை, ஆற்றுவித்தல் ஆகியவையும், பாசறைக் கண் அரசனின் நிலை, செயல் ஆகியவையும் இந்த நூலில்


ISBN Number: 978-81-983005-5-3

விளக்கப்பட்டுள்ளன என்றாலும், கலைகள் தொடர்பான செய்திகளையும் நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. அவற்றுள் கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஒப்பனைக்கலை, நடனக்கலை, இலக்கியக்கலை குறித்து இக்கட்டுரையில் ஆராய்வோம்.

**கலை**

நுண்கலை, பயன்கலை, பருண்மைக்கலை, கவின் கலை நிகழ்த்துக்கலை என்று பகுப்பர்.

**நுண்கலை:** நுண்மையான உறுப்புகளையும், நுண்ணிய திறன்களையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது நுண்கலையாகும். கவிதை, இசை, ஆடல், ஓவியம் ஆகிய கலைகள் இந்த நுண்கலைகளுள் அடங்கும்.

**பயன்கலை:** பயன்களை முக்கிய நோக்கமாகக் கொண்டது பயன்கலை. இலக்கியம், கட்டடக்கலை இந்த பயன்களில் அடங்கும்.

**பருண்மைக்கலை:** பருப்பொருளாலான ஊடு பொருள்களைக் கொண்டு அமைவது சிற்பக்கலை இதனுள் அடங்கும்.

**கவின் கலைகள்:** அழகான தோற்றத்தை நோக்கமாகக் கொண்டு அமைவது. இதில் ஓவியம், கற்பனை அடங்கும்.

**கலை என்பது குறித்தப் பதிவுகள்**

உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை ஒருங்கிணைத்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலை


ISBN Number: 978-81-983005-5-3

ஆகும். ‘கலை’ என்னும் சொல் ‘கல்’ என்னும் வேர்ச்சொல் ‘ஐ’ என்னும் தொழிற்பெயர் விகுதியொடு சேர்ந்து தொழிற்பெயராக அமைந்துள்ளது. ‘உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ள அழகுணர்வுகளை அகழ்ந்து எடுத்து வெளிப்படுத்துவதாகக் கலை அமைகிறது என்பர். (பத்துப்பாட்டு ஆய்வுக்கோவை, ப. 205) இதைத் தொல்காப்பியம் ‘கலைஎன் காட்சி உழைக்கும் உரித்தே’ (மரபு நூ. 46) கலை என்பது மரபு வழியாகக் காலம் காலமாக நம் தமிழரிடையேப் பரவிவந்துள்ளது.

**கலைகளின் வகைகள்**

கலையானது நிலைக்கலைகள், இயங்கு கலைகள் என்று இரு வகைப்படும். காலம் என்னும் அளவில்லாத ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள் **நிலைக்கலைகள்** எனப்படும். காலம் என்னும் அளவு உடைய இசை முதலிய கலைகள் **இயங்கு கலைகள்** எனப்படும்.

**நுண்கலைகள்**

பயன்பாட்டைக் குறித்துக் கவனம் கொள்ளாத ஓர் அறிவார்ந்த தூண்டலாகவும், அழகின் வெளிப்பாடாகவும் அமைந்த கலை வடிவமாகும். நுண்கலைகள் மனிதனுக்கு மனநிறைவை அளிக்கின்றன. மனிதனுடைய மனதில் உணர்ச்சியை எழுப்பி அழகையும், இன்பத்தையும் அளிக்கிற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு. மனிதன் தன்னுடைய அறிவினாலும், மனோபாவத்தினாலும்,

 ISBN Number: 978-81-983005-5-3

கற்பனையினாலும் கவின் கலைகளைப் படைத்துக், கலைகளின் மூலமாக உணர்ச்சியைப் பெற்று அழகையும், இன்பத்தையும் காண்கிறான். அழகுக் கலைகள் மனிதனின் மன எழுச்சியைத் தூண்டி மகிழ்விப்பதனாலே, உலகத்திலே நாகரிகம் அடைந்துள்ள மக்கள் நுண்கலைகளைப் போற்றுகின்றனர். (நுண்கலைகள் 44வது பக்கம்) அழகுக் கலை நற்கலை, இன்கலை, கவின் கலை என்றும் கூறப்படும். காதினால் கேட்டும், மனதினால் உணர்ந்தும் மகிழ்கிறோம். கலைகளை மயிலை சீனிவேங்கடசாமி கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, இலக்கியக்கலை என்று ஐந்து வகையாகப் பிரிப்பர். அவற்றுள் இலக்கியக் கலையே சிறந்தது என்பர்.

**கட்டடக்கலை**

கட்டடத்தை வடிவமைக்கக்கூடிய கலையேக் கட்டடக்கலையாகும். கலைகளுக்கெல்லாம் தாய் போன்றது கட்டடக்கலை. இது ஒரு சமூக கலையாகும். கட்டடக்கலை மண், செங்கல், மரம், உலோகம், சுண்ணாம்பு, களிமண் போன்றவற்றைக் கொண்டு பழங்காலக் கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. மன்னனது அரண்மனை, மக்கள் வழிபடும் கோயில்கள் யாவும் கட்டடக்கலையைக் கொண்டிருந்தன. அக அமைப்பு, புற அமைப்பு என கட்டடக்கலைக்கு இரு பிரிவுகளும்

 ISBN Number: 978-81-983005-5-3

உள்ளன. இரண்டு பிரிவிலும் அழகு செய்ய பல வழிகள் இருந்தன. கட்டடக்கலைக்கு மூன்று கூறுபாடுகள் தேவைப்படுகின்றன. ஒரு கட்டடம் எதற்காகக் கட்டப்படுகிறது. அதற்கான சமூகத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். பயன்படு பொருட்கள், கட்டமைப்பு ஆகியன உறுதியாகவும், பொருத்தமாகவும், நீடித்திருப்பவையாகவும் இருக்க வேண்டும். அதன் பின் கலையாகவும் இருக்க வேண்டும்.

64 கலைகளுள் இருவகை கலைப் பெயர்கள் கட்டடம் சார்புடையனவாய் வருகின்றன. கட்டடத்திற்கான மனையைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, ஒவ்வொரு நுணுக்கமான செய்திகளையும், மனையடி சாஸ்திரம் கூறுகிறது. கட்டடக்கலை தனி ஒரு பகுதித் திறனுக்கு உரியது என்றால், நகரமைப்பு முழுமையான திறனுக்கும் உரியதாகும். கட்டடங்கள், தெருக்கள் முதலியன சீராக அமைந்தால்தான், நகர அமைப்பு அழகாக இருக்கும். கட்டப்படுவன அனைத்துமே கட்டடம் தான். ஆனால் நுண்ணிய கலைத்திறத்தாலும், கலைக் கருத்தாலும், கலைத்தரத்தினாலும் உயர்ந்த அத்தகு கட்டட வேலைப்பாடு கட்டடக்கலையாகும். கட்டடக்கலை என்பது வெறும் புறத்தோற்றம், அக அழகு மட்டும் இல்லை. அதன் மூலம் தூண்டப்படும் மக்களின் மனநிலை, உணர்வுகள், குணங்கள், விழிப்புணர்ச்சி

 ISBN Number: 978-81-983005-5-3

ஆகியவற்றையே அறிய முடியும் என்கிறார் அஜய பரத்வாஜ் என்கிற பேராசிரியர். கோயில்களையும், அரண்மனைகளையும், மண்டபங்களையும், மாட மாளிகைகளையும், உயர்ந்த மாடங்களில் அடுத்து வீடுகளையும், நிலா முற்றங்களையும், தங்கள் கலைத்திறன் தோன்றப் படைத்தனர் என்பதை நெடுநல்வாடை மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஒரு கட்டடத்துக்கு மனை, மரம், திசை, நாள், கோள் ஆகிய அனைத்தும் அறிந்து தேர்ந்து கொண்டு செய்யப்படும் திறனைத் தமிழர் பெற்றிருந்தனர். கட்டடக்கலை மரபு வெற்றியே, தமிழகத்தில் பல்வேறு நூல்கள் தோன்றிச் சிறந்துள்ளன. அரண்மனைகளை அவற்றுக்குரிய உட்பிரிவுகளுடன் வகுத்த மைக்கும் வல்லமையும், திறனும் தமிழர்க்கு இருந்துள்ளன. கோட்டைக் கொத்தளம், அகழி முதலியவற்றைப் பாதுகாப்புப் படை வளத்துக்கேற்ப செம்மையாகத் தமிழர்கள் அமைத்துள்ளனர். அரண்மனையில் ஓவியம், சிற்பம் முதலிய துணை நுண்கலைகளையும் இணைத்து அழகு சேர்த்துள்ளனர். கட்டிய கட்டடங்கள் உள்ளணி செயல் (Interior Decoration) எனப்படும் சுவர்களையும் அழகு செய்தல், திரைச்சீலை, ஓவியங்களை வரைதல், முத்துமாலைகள் தோரணங்களால் அலங்கரித்தல் ஆகிய ஒப்பனைக் கலைகளிலும் சிறந்து விளங்கினர்.


ISBN Number: 978-81-983005-5-3

கட்டடத்தை வடிவமைக்கக்கூடிய கலையேக் கட்டடக்கலையாகும். கட்டடத்தின் முக்கியப்பகுதிகளான கூரை, வளைவுகள், சுவர்கள், கதவுகள் மற்றும் சன்னல்களாகும். மனை அமைத்த முறையில் "திருமுளைச்சாந்து" என்ற சடங்கினைச் செய்வர்.

**விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்**
**இரு கோல்குறிநிலைவழுக்காது குடக்கு ஏர்பு**
**ஒரு திறம் சாரா அரை நாள் அமையத்து**
**நூல் அறிபுலவர் நுண்ணிதின் கயிறுஇட்டு**
**தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி,**
**பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து**
**(நெடுநல்வாடை, பா. 72-77)**

அரண்மனைக் கட்டப்பட்ட முறையை அது கால்கோள் செய்யப்பட்ட நாள் முதலாகக் கூறப்பட்டுள்ளது. அரண்மனைவாயில், முற்றம், அந்தப்புரத்தின் அமைப்பு, அரசி படுத்திருக்கும் வட்டக்கட்டில், விதானம், படுக்கையின் விரிப்புயாவும் சிறப்பாக நெடுநல்வாடையில் கூறப்பட்டு உள்ளது. கட்டடக் கலையின் கூறுகளில் முக்கியமானது முன்புறத்தோற்றமாகும். அந்தப்புரத்தின் முன்புற மதிலின் தோற்றம் கலை நேர்த்தியுடன் இருந்தது.

**வரை கண்டன்ன தோன்றல, வரை சேர்பு,**
**வில் கிடந்தன்ன கொடிய, பல்வயின்,**

 ISBN Number: 978-81-983005-5-3

**வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ,**
**மணி கண்டன்ன மாத்திரள் திண்காழ்,**
**செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடுஞ்சுவர்**
**உருவப் பல்பூ ஒரு கொடி வளைஇ,**
**கருவொடு பெயரிய காண்இன்நல் இல்**

**(நெடுநல்வாடை, பா. 108-113)**

தமிழர் மரபில் வீடுகளோ, அரண்மனைகளோ அமைக்கும்போது நிலை என்பது மிகவும் முக்கியமானது. 27 விண்மீன்களில் ’உத்தரம்’ என்ற விண்மீனின் பெயரைக் கொண்ட கற்பலகை, வாயிலின் இரு கதவுகள் அமைந்துள்ள நிலைக்கு மேல் செருகப்பட்டிருக்கும். இப்பலகையில் குவளையின் புதிய மலர்களை உயர்த்தித் தங்கள் துதிக்கைகளால் ஏந்திய பிடிகளின் உருவங்களும், அவற்றின் நடுவில் திருமகள் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

நிலாமுற்றம் என்னும் பகுதியிலிருந்து மழை நீரை வெளியேற்றும் குழாய், கலை நயத்துடன் மகரமீனின் வாய் போல, வடிவமைக்கப்பட்ட வழியின் மூலம் வெளியேறியது.

**நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண்முற்றத்து**
**கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய**
**கலிந்து வீழ் அருவிப் பாடுவிறந்து அயல**

**(நெடுநல்வாடை, பா. 95-97)**


ISBN Number: 978-81-983005-5-3

உயர்ந்ததாக மதில் இருந்தது. நகரத்தின் கோட்டை வாசல்கள் பெரியதாகவும், அவ்வாசல்களுக்கு உறுதியான கதவுகளும், யானை முதலியன அம்பாரியுடன் புகுந்து செல்லும்படியான அகன்ற பெரிய உயரமான வாசல்களையும் உடைய கோட்டை வாயில்கள் இருந்தன.

**தாழொடு குயின்ற போர் அமை புணர்ப்பின்**
**கைவல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்ந்து**
**ஐயவி அப்பிய நெய்அணி நெடு நிலை**
**வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக,**
**குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்**
**(நெடுநல்வாடை, பா. 84-88)**

ஆழமான அகழி, உயர்ந்த மதில்கள், தாழ்ப் போடும் படி கதவுகள், யானை செல்லும் அழகு வாசல், எனப் பெரிய அழகிய கட்டடங்களாக இருந்தன. கட்டட வல்லுநர்கள் நுட்பமாக நூல்ப் பிடித்துப் பார்த்துத் திசைகளைத் தெரிந்து, திசைக்குரிய தெய்வங்களையும் கருத்தில் கொண்டு, மன்னர்குரிய அரண்மனையைக் கட்டினர்.

**நூல்அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு**
**தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி**
**பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து**
**(நெடுநல்வாடை, பா. 76-78)**

 ISBN Number: 978-81-983005-5-3

அரண்மனையைக் கட்டுவது, நல்ல நாளில் தொடங்கப்பட வேண்டும் ஆதலால் அதற்கு ஏற்ப சித்திரை மாதத்து இடைப்பத்து நாளில் ஏற்றதான ஒரு நாளில், பகலில் நடுபோதில் 'முளைப் பிடிப்பு' சடங்கு செய்தனர். நூலறி புலவர் என்பது கட்டடக்கலை திறன் பெற்ற வல்லுனர்கள் இருந்துள்ளனர் என்பது தெரிய வருகிறது.

மாடங்கள் உயர்ந்து விளங்கும் வளமையான மூதூர். அங்கே ஆறு கிடப்பது போல் அகன்ற நீண்ட தெருக்கள்.

**மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்**
**ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்**
**(நெடுநல்வாடை, பா. 29-30)**

காவலையுடைய அகன்ற வீடு. வானத்தைத் தீண்டுமாறு உயர்ந்த மேல் மாடத்தில் தென்றல் காற்று வருகிறது. படுக்கையறையில் பலகணியில் உலாவுதலைத் தவிர்த்தனர். வலிமையான நன்கு பொருந்துகின்ற கதவுகளும் தாளிடப்பட்டுக் கிடந்தன.

வெயில் காலத்தில் மன்னர்கள் தங்கிய மாடத்திற்கு 'இளவேனிற் பள்ளி' என்று பெயரிட்டனர். வேனிற் காலத்தில் தென்றல் காற்றைத் தென்திசையில் இருந்து கொண்டுவரும். தற்போது கூதிர்க்காலமாதலால் சாளரங்களின் கதவுகள் நன்றாக மூடப்பட்டு தாழிடப்பட்டு பயனின்றி இருந்தன.

 ISBN Number: 978-81-983005-5-3

**நேர்வாய்க் கட்டளை திரியாது திண் நிலைப்**
**போர் வாய்க் கதவம் தாழொடு துறப்பக்**
**(நெடுநல்வாடை, பா. 62-63)**

கட்டடத் தொழில் நுட்பத்தில் உச்சமாக பல மாடிக்கட்டடங்கள் இருந்ததையும், அவற்றில் கோடைகாலம், குளிர்காலம் என பருவநிலைக்கேற்ப உறையும் தலங்கள் வடிவமைக்கப்பட்டக் கட்டடங்கள் கட்டப்பட்டிருந்ததையும்

**வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்**
**வேனில் பள்ளித் தென்வளி தரூஉம்**
**(நெடுநல்வாடை, பா. 60-61)**

நெடுநல்வாடை வழி அறியமுடிகிறது. கட்டடக்கலையில் திருமகள் நிலையாக தங்கும் குற்றமில்லாத சிறப்புடைய அரண்மனை முற்றம் விளங்கும். ஆற்று நீரினால் கொண்டு தரப்பட்ட புது மணலால் பரப்பப் பெற்றதாக அம் முற்றம் காட்சியளிக்கும் நெடிய மயிரினையுடைய தூய நிறம் கொண்ட கவரிமான்களும், குறுகிய கால்களைக் கொண்ட அன்னப்பறவைகளும், அரண்மனை வாயில் முற்றத்தில் தாவி விளையாடும்.

**... தரு மணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து**
**நெடுமயிர் எகினத் தூநிற ஏற்றை,**
**குறுங்கால் அன்னமோடு புகழும் முன் கடை**
**(நெடுநல்வாடை, பா. 88-92)**


ISBN Number: 978-81-983005-5-3

**வானுயர் மாடங்கள்**

பொதுமக்கள் வாழ்கின்ற வீடுகள் பல, மாடங்களுடன் கூடிய மாளிகைகளாக இருந்துள்ளன. கதவுகள் சாத்தப்படும் முறையில் இரட்டைக் கதவுகளாகத் தாழ்ப்பாள், கைப்பிடி முதலியன அக்கதவுகளில் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் நெடுநல்வாடையில் கட்டடக்கலைக் குறித்துக் கூறியுள்ள செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**ஓவியக்கலை**

ஏனைய கலைகளைக் காட்டிலும், மென்மையும், மேன்மையும் ஓவியக்கலையில் திகழ்கின்றன.வெறும் பொறியளவில் நின்று ஓவியத்தைக் கண்டால், பல்நிறக்கலவை என்று தான் கூறுவர். ஆனால் அவ்வோவியம் தாங்கி நிற்கும் உணர்ச்சி நம்மால் புரிந்து கொள்ளப்படும் பொழுது, ஓவியம் தோன்றிய பயனை விளைவிக்கிறது. ஓவியம் மனிதனின் குறிக்கோள் உணர்ச்சியை நன்கு காட்டும் களமாகும். மனிதனின் மனதில் தோன்றிய விருப்பு, வெறுப்புகள், உணர்ச்சிகள், ஆசைகள், முதலியவற்றை வெளியிட இதுவே சிறந்த சாதனமாகும். ஓவியம் கீற்றாலும், வண்ணத்தாலும் அமைவது. கண்ணால் நுகரத்தக்கது. அகலம், நீளம் என்ற அளவுகள் உடையது. நமது நாட்டு ஓவியங்கள் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே. ஓவியத்தைப் பற்றிய


ISBN Number: 978-81-983005-5-3

பல செய்திகள் சிந்தாமணி, பெருங்கதை, மணிமேகலை போன்ற காவியங்களில் விளக்கப்பட்டுள்ளன.

உலகத்திலேயே காணப்படுகின்ற எல்லாப் பொருள்களின் உருவத்தையும், உலகத்தில் காணப்படாத கற்பனைப் பொருள்களின் வடிவத்தையும் பலவித நிறங்களால் இயற்கை அழகு பொருந்த எழுதப்படுகின்ற படங்களே ஓவியக் கலையாகும். கண்களால் உணர்ந்து இன்புறக்கூடியது. எண்ணங்களின் எழுச்சியைப், பல வண்ணங்களின் துணை கொண்டு எழுதுபவர் 'ஓவியர்' என்றும், கண்ணுள் விளைஞர் என்றும், வித்தகர் சித்திரகாரர் என்றும் பலவாறாக அழைக்கப்பட்டனர். ஓவியம் ஓவியர், கண்ணில் விளைஞர், வட்டிகைச் செய்தி, துணையாக ஓவியம், எழுது நிலை மண்டபம், சித்திரக்கூடம், சித்திர மாடம், ஓவிய மாக்கள், துகிலிகை இன்ன பிற சொற்கள் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன, ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்று புலமைப் பெற்ற பின்னரே, சிறந்த ஓவியனாக முடியும். அவனை 'ஓவியப்புலவன்' என்றும், அவனது குழாமை 'ஓவியமாக்கள்' என்றும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஓவியம் பல வண்ணக் கலவையால் துகிலியைக் கொண்டு படைக்கப்பட்ட கண் கவர்க் காட்சிகள். ஓங்கு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி என்றும் அழைக்கப்படுகின்றன.


ISBN Number: 978-81-983005-5-3

**சுவர் ஓவியம்**

ஓவியம் வரையப்பட்ட இடங்கள் சித்திரக்கூடம், சித்திர மாடம், எழுது நிலை மண்டபம், எழுது எழில் அம்பலம் என்று அழைக்கப்படுகின்றன.

**ஓவம்**

ஓவியத்தைக் குறிக்க ‘ஓவம்’ என்ற சொல் சங்க இலக்கியத்தில் கையாளப்பட்டுள்ளது. வீடு, நகர், கட்டடம் ஆகியவற்றை ஓவத்திற்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர்.

**ஓவத்தன்ன வுருகெழு நெடுநகர் (பதிற்., பா. 88:28)**
**ஓவத்தன்ன இடனுடைவரைப்பில் (புறம்., பா. 251)**
**ஓவத்தன்ன வினைபுனை நல்லில் (அகம்., பா. 98)**

சிறந்த ஓவியர்கள் காண்பவர் கண்களில் தாம் வரைந்த காட்சியை நிறுத்தும் திறன் படைத்தவர்கள் என்பதை அறியமுடிகிறது.

**புனையா ஓவியம்**

ஓவியர், ஓவியம் வரையும் முன்பு தான் வரையும் உருவங்களைக் கோடுகளால் உருவமாக முதலில் வரைவர். இதற்குப் ‘புனையா ஓவியம்’ என்று பெயர்.பின்பே வண்ணங்களைக் கொண்டுத் தீட்டுவர். நெடுநல்வாடையில், தலைவனைப் பிரிந்த தலைவி பாண்டிமாதேவி வருத்தத்தில் இருந்ததால். அழகிய ஆடை, ஆபரணங்கள் எதுவும் இல்லாமல் இருந்தாள்


ISBN Number: 978-81-983005-5-3

என்பதைப் புனையா ஓவியம் போலிருந்தாள் என்று குறிப்பிடுகிறது. **‘புனையா ஓவியம் கடுப்பப் புனைவு இல்’ (நெடுநல்வாடை, பா. 147)** புனையா ஓவியத்தை ‘புனையா ஓவியம் கடப்ப புனைவில்’ என்று நக்கீரரும், ’புனையா ஓவியம் போல நிற்றலும்’ என்று சீத்தலைச் சாத்தனாரும் கூறுகின்றனர். அரண்மனையில் அந்தப்புரச் சுவரில் செம்பினை உருக்கிச் செய்தது போன்று உறுதியாக இருந்த அந்தச் சுவரில் வெள்ளியைப் போன்று வெண்மையான சுதைப் பூசிய அச்சுவர்கள் மீது, மலர்கள் பூத்துக் குலுங்கும் கொடிகள் வண்ண ஓவியமாக வரையப்பட்டிருந்தது.

**வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ**
**மணி கண்டன்ன மாத்திரள் திண்காழ்**
**(நெடுநல்வாடை, பா. 110-111)**

அந்தப்புரக் கட்டிலுக்கு மேலேயும் சுவரில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. மேசராசி உருவங்கள் இருந்தன. சந்திரன், ரோகிணியோடு சேர்ந்திருக்கும் காட்சியும் அழகாகத் தீட்டப்பட்டிருந்தன. இவ்ஓவியத்தைக் கண்ட பாண்டிமாதேவி தானும் அவ்வோவியத்தைப் போல், காதல் கணவனோடு சேர்ந்திருக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டாள்.

**விண் ஊர்பு இழிதரும் வீங்கு செலல் மண்டிலத்து**
**முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய**


**ISBN Number: 978-81-983005-5-3**

**உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா,**
**மா இதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப்பனி**
**(நெடுநல்வாடை, பா. 161-164)**

சோழர் அரண்மனையில் வெளிப்புறச்சுவரில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள், சாலையில் செல்லும் தேர்களால் தூசி எழும்பி அந்த ஓவியங்கள் மீது படிந்திருந்தன.

**நீறு ஆடி களிறுபோல**
**வேறுபட்ட வினை ஓவத்து**
**வெண்கோயில் மாசு ஊட்டும்**
**(பட்டினப்பாலை, பா. 48-50)**

சங்க இலக்கியப் பத்துப்பாட்டு பட்டினப்பாலையில் சுவரில் ஓவியம் வரைந்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**சுவர் ஓவியம்**

சுவற்றிலே எண்ணங்களைத் தீட்டுவதற்கு முன் சுண்ணாம்பும், மணலும் சேர்ந்த கலவையைக் கொண்டு, சுவர்ப் பூச்சு செய்யப்படுகிறது. அதன் மேல் குலைந்த வெண் சாந்தைக் கொண்டு மேல் பூச்சு பூசப்படுகிறது. இவ்வாறு பூசப்பட்ட சுவர் மீது, ஓவியங்கள் தீட்டுவர். இத்தகைய சுவர்கள் செம்பைப் போன்ற உறுதிப்படைத்ததும், கலை அழகு கொண்டும் அமைந்தன. இத்தகைய சுவர் ஓவியங்கள் சங்க காலத்தில் இருந்தன. இதனை வெள்ளி, வெண்சுதை என்றும்,

 ISBN Number: 978-81-983005-5-3

வெண்சுதை விளக்கத்தை வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியம் என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. இந்தக் கலை மரபு தமிழகத்தில் வழிவழியாகப் பின்பற்றப்பட்டுள்ளது.

**வண்ண ஓவியம்**

ஓவியர்கள் பல வண்ணக் கலவையின் துணைகொண்டு ஓவியங்களைத் தீட்டினர். அத்தகைய வண்ணம் தீட்டும் கோலைத் தூரிகை என்றும், துகிலிகை, வட்டிகை என்றும் அழைத்தார்கள். இதனைத் துகிலிகை அன்ன துளித்தலை பாதிரி என்றும், வட்டிகைச் செய்தி எண் வரைந்த பாதையின் என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. இத்தகைய வண்ணக் கலவையால் வரைந்த ஓவியத்தை 'வட்டிகைச் செய்தி' என்றும் அழைத்தனர். ஓவியத் தொழிலுக்கு வட்டிகைச் செய்தி என்றும், ஓவியம் எழுதும் போது வண்ணங்களைக் குழைக்கும் பலகைக்கு 'வட்டிகைப் பலகை' என்று பெயர். இதன் மூலம் நெடுநல்வாடையில் ஓவியக்கலைக் குறித்துக் கூறியுள்ள செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**சிற்பக்கலை**

சிற்பக்கலை போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கு வழிபாடு செய்ய ஒரு கல்லைத் தேர்ந்தெடுத்தல் மரபு. அக்கல்லில் வீரரின் உருவத்தைப் செதுக்குவர். அதில் வீரனின் பெயரும், பெருமையும்

 ISBN Number: 978-81-983005-5-3

பொறிப்பர் என்று வரும் தொல்காப்பிய செய்தியால், அன்றே சிற்பக்கலைக் குறித்துக் குறிப்பிட்டுள்ளார். ’மண்ணிலும், கல்லிலும், மரத்திலும், சுவரிலும் கண்ணிய தெய்வம் காட்டுறார் வகுக்க’ என்று மணிமேகலைக் குறிப்பிடுகிறது. சிற்பங்கள் எப்பொருள் துணைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன என்பதை உணர்த்துகிறது. சிற்பக்கலை என்பது கண்ணையும், மனதையும் ஒருங்கே ஈர்க்கவல்ல கலைவடிவம் ஆகும். கற்பனை உருவங்களே தெய்வ வடிவில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. உலோகம், கல், மண், மரம், செங்கல், தந்தம், மெழுகு, அரக்கு முதலியவற்றைக் கொண்டு சிற்பங்கள் செய்யப்படுகின்றன. 'கந்துடைப் பொதி' என்பது கல்லால் வடிவமைக்கப்பட்ட இறை உரு ஆகும்.

**தந்தச் சிற்பங்கள்**

தந்தத்திலும் சிற்பங்கள் செய்திருந்தனர் என்பதனை நெடுநல்வாடை அரசி படுத்திருக்கும் கட்டில், பல வெற்றிகளைப் பெற்ற வயது (40 வயது) யானையின் தந்தத்திலிருந்து செய்யப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. தெய்வங்களின் உருவங்களைப் பல்வேறு நிலைகளில் சிற்பங்களாகச் செதுக்குவதற்கும், சுதையினால் செய்வதற்கும் வண்ண ஓவியங்களாக வரைவதற்கும், வழிகாட்டியாக அமைந்த நூல்களே சிற்ப நூல்களாகும்.


ISBN Number: 978-81-983005-5-3

காஸ்யபம், சாரஸ்வதம், ப்ராம்மீயம் முதலியவை சிற்ப நூல்களாகும். நுற்பக்கலைகளில் சிற்ப கலையும் ஒன்றாகும். மிகவும் நுட்பமானது. கல், சுதை, உலோகம், மரம் முதலான பொருள்களினால் மனிதர், விலங்கு, பறவை, தாவர முதலான இயற்கைப் பொருள்களின் வடிவத்தையும், கற்பனையாகக் கற்பித்து அமைக்கப்பட்ட பொருள்களின் உருவத்தையும் அமைப்பதுதான் சிற்பக்கலை. சிற்பக் கலையைக் கண்ணால் கண்டு மகிழ்கின்றோம். உருவங்களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை தெய்வத்திருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், பிரதிமை உருவங்கள் என்பவை ஆகும்.

**1. தெய்வ உருவங்கள்**

சிவன், பெருமாள், கண்ணன், இராமன், பலராமன், நாராயணன், மாதவன், ஆனந்த சயனன் உள்ளிட்ட பல இறை உருவங்கள் வரையப்பட்டன.

**2. இயற்கை உருவங்கள்**

மனித உருவங்களில் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் உள்ளிட்டோர் மிருகங்கள், பறவைகள் அவற்றின் உருவங்கள்.

**3. கற்பனை உருவங்கள்**

கற்பனை உருவங்கள் என்பவற்றில் இயற்கையில் இல்லாதகற்பனையாகக் கற்பிக்கப்பட்ட உருவங்கள்

 ISBN Number: 978-81-983005-5-3

கற்பனையாக அமைக்கப்பட்ட பல வகை பூக்கள், வள்ளிக் கொடிகள், இரு தலைப் பட்சி, மகரம், கின்னரம், குக்குட சர்பம், (கோழிப் பாம்பு) நாகர் புதர், புருஷா மிருகம், காமதேனு முதலியவை கற்பனை உருவங்கள் ஆகும்.

**4. பிரதிமை உருவங்கள்**

உண்மையில் வாழ்ந்தவர்களின் தத்ரூபமான உருவம், அரசியல் பெரியவர் உருவங்களை, அதேத் தோற்றத்தோடு வரைவதாகும். மற்ற சிற்பங்களை விட, இது அமைப்பது கடினமானது. கைத் தேர்ந்த சிற்பிகளால் மட்டுமே பிரதிமை உருவங்களை வரைய முடியும். அயல்நாட்டு சிற்பங்களுக்கும், நம் நாட்டு சிற்பங்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன என்று மயிலை சீனி வேங்கடசாமி கூறுகிறார். பொருள்களின் இயற்கை உருவத்தை அப்படியேக் காட்டுவது அயல்நாட்டு சிற்பக்கலையின் நோக்கமாகும். உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் உருவங்கள் மூலம் வெளிப்படுத்துவது நமது நாட்டு சிற்பக்கலையின் நோக்கம் எனும் உண்மையை மறவாமல் மனதில் கொள்ள வேண்டும் என்கிறார். (நுண்கலைகள், ப. 9) யவன நாட்டிலிருந்து பாவை விளக்குகள் கொண்டுவரப்பட்டன. அரண்மனைப் பகுதிகளில் இரவுப்பொழுதில் ஒளி வேண்டி பாவை விளக்குகள் ஏற்றப்பெறும். அவற்றில் நெய் ஊற்றித் தூண்டி விடும் பணியைக் குற்றேவல் மகளிர் புரிவர்.


ISBN Number: 978-81-983005-5-3

**யவனர் இயற்றிய வினை மாண் பாவை**
**கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து**
**பரூஉத்திரி கொளீஇப் குரூஉத்தலை நிமிர் எரி**
**(நெடுநல்வாடை, பா. 101-103)**

இதன் மூலம் நெடுநல்வாடையில் சிற்பக்கலைக் குறித்துக் கூறியுள்ள செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**இசைக்கலை**

நுண்கலைகளில் மிகவும் முக்கியமானக் கலை இசைக்கலை. மனிதர்கள் மட்டுமல்ல கொடிய காட்டு மிருகங்களும் இனிய இசைக்கு மயங்கும். பாணர்கள் இசை பாடுவதிலும், யாழ் வாசிப்பதிலும் வல்லவர்களாக இருந்தனர். ஆதலால் 'பாணர்' எனப்பட்டனர். பாணனுடைய பெண் மக்களுக்குப் 'பாடினி' என்று பெயர். இவள் இசையிலும், நடனம் ஆடுவதிலும் வல்லவளாய் இருந்துள்ளாள். அடியார்க்கு நல்லார் முருவல் முதலாக இசை நுணுக்கம் ஈராக பழந்தமிழ் இசை நூல்களைக் குறிப்பிடுகிறார். அவை இப்பொழுது இல்லை அழிந்து விட்டன.

**இசைக்கருவி**

மிகப் பழைய காலத்தில் உலகம் முழுவதும் இசைக்கருவியாக இருந்தது யாழ். வில் எனும் போர்க்கருவியிலிருந்து யாழ் எனும் இசைக்கருவி கண்டுபிடிக்கப்பட்டது என்பர் (நுண்கலை-மயிலை

 ISBN Number: 978-81-983005-5-3

சீனிவேங்கடசாமி ப 79) முற்காலத்தில் மனித இனத்திற்காக வேட்டையாடவும், போர் செய்யவும் முக்கிய ஆயுதமாக இருந்தது. நாணை பலமாக இழுத்து, அம்பை விசையாகச் செய்தவுடன் நாணிண் அதிர்ச்சியால், ஒருவிதமான ஓசை உண்டாயிற்று. மனிதர் அந்த ஓசை உண்டான காரணத்தை நுட்பமாக ஆராய்ந்து, அதன் பயனாக வில் யாழ் எனும் இசைக்கருவியை உண்டாக்கினார்கள் (நுண்கலைகள், மயிலை சீனிவேங்கடசாமி ப.79) கொடிய போர்க்கருவி மனிதனின் அறிவினாலும், இசை ஆராய்ச்சினாலும் நல்லதோர் இசைக்கருவியாக மாறிற்று. 1947 இல் யாழ் நூலை விபுலானந்த அடிகள் இயற்றினார்.

நெடுநல்வாடையில் யாழ் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆடல் மகளிர்க்குப் பாட்டுப்பாட வேண்டிய நிலை வந்தபோது, பாடலுக்கு யாழிசைக் கூட்ட வேண்டிய நிலையில், யாழ் நரம்பு குளிர் ஏறிக் கிடந்ததால், அவற்றைச் சூடாக்கும் பொருட்டு, யாழ் நரம்புகளை மகளிர் தம் குவிந்த திரண்ட முலை முகடுகளில் தேய்த்துச் சூடேற்றிக் கொண்டனர்.

**தண்மையின் திரிந்த இன்குரல் தீம் தொடை,**
**கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ**
**கருங் கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப**
**(நெடுநல்வாடை, பா. 67-69)**

 ISBN Number: 978-81-983005-5-3

இசைக்கருவியின் துணைகொண்டு சங்ககாலத் தமிழர்கள் இசைக்கலையை வளர்த்தனர். இசைக்குரிய இலக்கணங்களையும் படைத்தனர். இசை ஆராய்ச்சிக்கான ஏழிசைச்சங்கம் கண்டனர். இசைக்கு அடிப்படையான சுரங்களையும், ஸ்ருதிகளையும் பண் உண்டாக்கும் முறையையும் ஆராய்ந்துகண்டனர். பழந்தமிழர் பாடி வந்த இசை 12,000 ஆகும்.

**இசை நூல்**

பெருநாரை,பெருங்குருகு,சிற்றிசை,பேரிசை,இசை மரபு, இசைநுணுக்கம், பஞ்சமரபு, பஞ்சபாரதியம் என்று இசைக் குறித்தப் பல்வேறு நூல்கள் இருந்ததாக சிலப்பதிகாரத்தில் அடியார்க்குநல்லார் கூறுகின்றார்.

**இசைக்கருவிகள்**

தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்று பலவகைப்படும். பேரியாழ், சீறியாழ், மகரயாழ், செங்கோட்டுயாழ், பாலை யாழ், குறிஞ்சி யாழ், மகரயாழ், நெய்தல் யாழ் என்று பல யாழ்கள் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது.

**இசைப்பண்கள்**

தமிழிசையில் பண்கள் என்றும், திறங்கள் என்று 2வகை உண்டு. பண்கள் 7குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப்பெயர் பெற்றன.

 ISBN Number: 978-81-983005-5-3

இவற்றிலிருந்து பிறப்பன திறங்கள் எனப்பட்டன. அவை பண்களுக்கு இனமானவை. இதன் மூலம் நெடுநல்வாடையில் இசைக்கலைக் குறித்துக் கூறியுள்ள செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**ஒப்பனைக் கலை**

ஒப்பனைக் கலை அழகுக் கலைகளில் ஒன்று. இவ்வழகுக் கலையில் பண்டைத் தமிழர்கள் ஆர்வம் காட்டினர். ஆடை ஒப்பனை, குளியல் ஒப்பனை, கூந்தல் ஒப்பனை, முக ஒப்பனை, நக ஒப்பனை, என்று பல ஒப்பனைகள் செய்து தம்மை அலங்கரித்துக் கொண்டனர்.

**முக ஒப்பனை**

முகத்தில் தான் கண், காது,மூக்கு,புருவம், நெற்றி, உதடுகள் முதலியன உள்ளன.

**ஒப்பனைக்கலை மகளிர்**

ஒப்பனைக் கலையில் வல்லவராகவும், அத்துறை கல்வியைக் கற்றவராகவும், அழகு மிக்க தோற்றம் உடையவராகவும், மங்கலமகளிராகவும் விளங்கினர். பாண்டிமாதேவி முத்துக்கள் பதித்த கச்சு ஆடையை அணிய வேண்டியவள். அதைத் தவிர்த்தாள். கணவனைப் பிரிந்து இருந்ததால், மங்கல நாண் மட்டுமே அணிந்திருந்தாள். பொன்னாலான மகரக்குழை, அணியப் பெறாமல் தாளுருவிகள் போன்ற அணிகலன்களை அணிந்திருந்தாள். நெற்றிப்பகுதி ஒப்பனை செய்யப்


ISBN Number: 978-81-983005-5-3

படவில்லை. கூந்தல் சிலவாகப் பிரிந்தும், மென்மையாகவும் வறண்டும் காணப்பட்டது. பொன்னால் செய்யப்பட்ட வளையல்களை அணிந்தமையால் ஏற்பட்ட தழும்பினையுடைய மயிர் ஒழுங்கினைக் கொண்ட முன் கைகளில் இப்பொழுது வலம்புரிச் சங்கினை அறுத்து செய்யப்பட்ட வளையல் அணிந்து காப்பு நாண் கட்டியிருந்தாள்.

**நெடுநீர்வார் குழை களைந்தென, குறுங்கண்**
**வாயுறை அழுத்திய வறிது வீழ் காதின்**
**பொலந்தொடி தின்ற மயிர் வார் முன்கை**
**வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து**
**(நெடுநல்வாடை, பா. 136-142)**

கோடைகாலத்து அரைத்துப் பூசிய சந்தனத்தையும், குளிர்காலம் என்பதால் அதை யாரும் நாடவில்லை. அதனால் வடநாட்டிலிருந்து வாங்கி வந்த சந்தனக்கல்லும், சந்தனக் கட்டைகளும் பயன்படுத்தப்படாமல் கிடந்தன. பெண்கள் காதிலே குழை அணிந்திருந்தனர். பூங்குழை (38), வார்குழை (139) கைகளில் தொடி அணிந்திருந்தனர். (141) கைவிரல்களில் நெளி மோதிரத்தைச் செருகியிருந்தனர்.

**ஆடை ஒப்பனை**

ஒப்பனைக்குரிய ஆடைகள் அழுக்குப்போக நன்கு வெளுக்கப்பட்டன. பெண்கள் மார்பிலே கச்சியினைக்

 ISBN Number: 978-81-983005-5-3

கட்டி இருந்தனர். முன்பு பூ வேலைப்பாடுகளைக் கொண்ட துகிலை, உயர்ந்த வளைவினையுடைய அல்குலில் அணிந்திருந்தனள். இப்போது நூலால் ஆகிய ஆடை, மாசுபடிந்து உடலில் கிடந்தது. பலவகையான பூக்கள் நிறைய வேலைப்பாடுடைய ஆடைகளை நெய்து தம்மை அலங்கரித்துக்கொண்டனர். பூந்தொகையில் 145 பூ வேலை பாடமைந்த பட்டாடையையும், அபிர் நூல் கலிங்கம் என்ற நூலால் ஆடையையும் அணிந்திருந்தனர்.

**கொள் உறழ் நறுங்கல், பல கூட்டு மறுக**
**வடவர் தந்த வான் கேழ் வட்டம்**
**தென்புல மருந்தில் சாந்தொடு துறப்ப**
**(நெடுநல்வாடை, பா. 51 - 52)**

மேனியில் பூசுவதற்காக குற்றேவல் செய்வோர் கத்தூரி முதலிய நறுமணப் பொருட்களை அரைத்தனர். சிலவகை மணப்பொருட்களை நெருப்பிலிட்ட போது, அவற்றினின்று தோன்றிய புகை, நறும்புகையாக இருந்தது. எனவே அப்படிப்பட்ட பொருட்களைப் புகைத்துப் பயன் கொண்டனர் தமிழர். ஆரம், அகில், தவிர வேறு சில பொருட்களும் புகைத்தற்குரியது.

**படுக்கை விரிப்பாக ஒப்பனை**

காடி கொண்ட கழிவுறு கலிங்கத்து (நெடுநல்வாடை, பா. 134) கஞ்சி இட்டு துவைத்து மடித்த ஆடையினைப் படுக்கை விரிப்பாகப் பயன்படுத்தினர்.


**ISBN Number: 978-81-983005-5-3**

**கூந்தல் ஒப்பனை**

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம். சிரசுக்குக் கூந்தலேப் பிரதானம். அழகு என்றாலே பெண்கள். பெண்களுக்கு அழகு தருவது அவர்களின் கூந்தல். கூந்தலையும், மகளிரையும் நம் முன்னோர்கள் ஒன்றாகவேக் கருதினார்கள்.

**கோவலர்கள் ஒப்பனை**

ஆடு, மாடுகளை மேய்க்கும் கோவலர் காந்தளின் நீண்ட இதழ்களால் கட்டிய மாலைகளைத் தங்கள் தலையில் சூடிக்கொண்டனர். அம் மலர் மாலைகளில் மழை நீர்ப் பட்டு, உடம்பில் தெறிப்பதால், உடம்பில் குளிர்ச்சி ஏற்பட்டது.

**நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாப**

**(நெடுநல்வாடை, பா. 6)**

**படலைக்கண்ணி பரு ஏர் எறுழ் திணித்தோள்**

**(நெடுநல்வாடை, பா. 31)**

**… மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல்**
**பூங்குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக்கண்,**
**மடவரல் மகளிர் பிடகைப் பெய்த**
**செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து**

**(நெடுநல்வாடை, பா. 36-40)**

மகளிர் தங்களுடைய கூந்தலைக் கண்ணும் கருத்துமாகப் பேணிக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்கள். மகளிர்


ISBN Number: 978-81-983005-5-3

நிறைந்த பூக்கள் கொண்ட மாலைகளை தம் தோளில் அணியவில்லை. சிலவாகிய ஓரிரு பூக்களையே தம் தலையில் செருகிக் கொண்டனர். வெண்மையான சங்கினால் செய்யப்பட்ட வளையல் இறுகின முன் கையை உடைய பெண்கள், மூங்கிலைப் போன்ற தோளினை உடையவர். மென்மையான மேனியை உடையவர். காதிலே அணிந்துள்ள அழகிய காதணிக்குப் பொருத்தமிக்க அழகுடன் கூடிய கண்களை உடையவர்.

**தகரம்**

தகரம் என்பது மரவகைகளில் ஒன்று. இதனைச் சுட்டுக் கரியாகப் பண்ணி அரைத்து முடிக்குப்பூசிக் கொண்டனர். இதனை ’மயிர்ச்சந்தனம்’ என்றும், ’மயிர்ச்சாந்து’ என்றும் கூறினர். தகர விறகை நெருப்புமூட்டி அதில் அகில்கட்டைகளையும், அயிரையும் இட்டுப் புகைத்துக் கொண்டனர். மழைக்காலம் ஆதலால் அவர்கள் வாசனைப் புகையும், நெருப்பு அமைத்து குளிர்க் காய்ந்தனர்.

**அணிகலன்கள்**

காதணி, கடிப்பு மகளிர் காதினை வளத்தற்கு இடப்படுவதோர் அணிகலனாகும்.

**வளையல்கள்**

கைகளில் அணியப்படும் அணிகலன். அனைவர் பார்வைக்கும்படும். கைகளில் வளையல்கள் அணிந்து

 ISBN Number: 978-81-983005-5-3

கொள்வது ஒப்பனையில் முக்கியமானதாகும். வலம்புரி சங்கால் வளை செய்து அரசி அணிந்திருந்தாள்.

**கால் ஒப்பனை**

அலத்தகம், செம்பஞ்சி என்றும், செம்பஞ்சிக் குழம்பு என்றும் கூறப்பட்டுள்ளது. பாதங்களுக்குப் பஞ்சியூட்டினர் என்பதை, **"அஞ்செஞ் சீறடிப் பஞ்சி ஊட்டியும்' (அகநானூறு 389; 7)** அரசமாதேவியின் கால்கள் கழுவப்படாமலும் செம்பஞ்சுக் குழம்பு பூசப்படாமலும் பூண்கள் அணியப் பெறாமலும் இருந்தன.

**கூந்தல் தொடர்பான உவமைகள்**

புலவர்கள், அடர்ந்த கூந்தலை மயிலின் கலாபத்திற்கும், கொன்றையின் தலைக்கும், இருண்டு கருத்துள்ள கூந்தல் மை, மேகம், இருள் ஆற்றின் அறல், நீலமணி முதலியவற்றிற்கு உவமையாகக் கூறியுள்ளனர்.

**நறும்புகை**

சில வகை மணப்பொருள்களை நெருப்பிலிட்ட போது, அதில் தோன்றிய புகை நறும் புகையாக இருந்தது.

> **நேர் கட்டி, செந்தேன், திரியாசம் பச்சிலை**
> **ஆரம் அகிலுறுப் போயிறு உர" (அடியாருக்கு நல்லார் சிலப்பதிகாரம், 5: 14)**

**புழுகு**

இதனைப் புழுகு நெய் என்பர் அடியார்க்கு நல்லார். இவர் உரையால் புழுகு நெய் என்பது

 ISBN Number: 978-81-983005-5-3

கூந்தலுக்குப் பூசப் பெறுவது என்பது தெரிகிறது. (சிலப்பதிகாரம், 4: 56)

**சீப்பும் உரையும்**

கூந்தல் ஒப்பனைக்கு மிகவும் தேவையானது சீப்பு. யானைத் தந்தத்தால் செய்யப்பட்டது. பெரிதாயும், வெண்மையாய் இருந்த அச்சீப்பில் ஓவியம் பொறிக்கப்பட்டிருந்தது. (பெருங்கதை, 1- 34: 189 – 90) அரச யானைகளின் வலக்கொம்பை அறுத்து சீப்பாகச் செய்து அதில் பொன்னைப் பதித்து, மணியை அழுத்தி, மணமும் ஊட்டி செய்யப்பட்ட மங்கல மணி சீப்பு பயன்படுத்தப்பட்டது. இதனை உரையில் இட்டு வைக்கும் பழக்கமும் இருந்தது. (சீவக சிந்தாமணி, 24- 36)

**கட்டிலில் செய்யப்பட்ட ஒப்பனை**

மூட்டு வாய் நன்கு பொருந்த கட்டிலோடு சேர்த்துக் கட்டப்பட்ட முத்துமாலைகளை நுண்ணிய நூலால் அழகாகத் தொடுத்துக் கட்டி, சுற்றி சாளரம் போன்று தொங்கவிட்டனர்.

**கட்டில் கால்**

கட்டிற்காலில் உருண்டு திரண்டிருக்கும் குடம் போன்ற உறுப்பை,

**தூங்கு இயல் மகளிர் வீங்குமுலைக் கடுப்ப**
**புடைதிரண்டிருந்த குடைத்த. (நெடுநல்வாடை,**
**பா. 119-120)**


ISBN Number: 978-81-983005-5-3

என்று கூறினர். காதல் கொண்டு இணைபிரியாத துணைகளாய் இருந்து இணைந்திருந்த அன்னப்பறவைகளின் வெண்மை நிறமுடைய மென்மையான உயிர்களை ஒன்றோடு ஒன்றாக இணைந்து, பெண் அன்னத்துடன் சேர்ந்து மகிழ்ந்த ஆண் அன்னத்தின் மெல்லிய தூவியைப், பூ விரிப்புக்கு மேலாக பாய் விரிப்பாக இட்டு, அதற்கும் மேலாகக் கஞ்சி நீக்கக் கழுவிய தூய்மையான மடித்து விரித்த ஆடையைப் பரப்பி வைத்தனர்.

**துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி**
**இணை அணை மேம்படப் பாய், அணை இட்டு**
**(நெடுநல்வாடை, பா. 132-134)**

### மதில் ஒப்பனை

அரண்மனை மதிலின் கதவுகளில் அரக்கு வண்ணம் பூசப்பட்டு அழகு செய்யப்பட்டக் காட்சியை, செவ்வரக்கு உரீஇ துணை மான் கதவம் பொருந்தி. (நெடுநல்வாடை, பா. 80- 81) என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் நெடுநல்வாடையில் ஒப்பனைக்கலைக் குறித்துக் கூறியுள்ள செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

### நடனக் கலை

சங்ககாலத்தில் ஆண்களும், பெண்களும் நடனக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். பெண்கள் குரவைக்


ISBN Number: 978-81-983005-5-3

கூத்து, ஆய்ச்சியர்குரவை, துணங்கை போன்ற கூத்து வகைகளையும், பரதநாட்டியம் போன்ற நாட்டிய வகைகளையும் அறிந்திருந்தனர். உள்ளக் குறிப்பை புறத்தேத் தோன்றும் வகையில் நடனமாடியவர்கள் இருந்தனர். நடனக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் விறலி என்றும், ஆடுமகள் என்றும் அழைக்கப்பட்டனர். நெடுநல்வாடையில் ஆடல் தொழிலில் திறமை வாய்ந்த மகளிர், தாங்கள் பாடும் பாடலுக்குப் பொருத்தமாக, யாழின் நரம்புகளை மீட்ட முற்பட்டனர். **“ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்” (நெடுநல்வாடை, பா.** 67) இதன் மூலம் நெடுநல்வாடையில் நடனக்கலைக் குறித்துக் கூறியுள்ள செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**இலக்கியக்கலை**

மனித வாழ்வில் சிறப்பியல்பாக உள்ள மொழியால் அமையும் காரணத்தாலும், வழிவழியாக விளங்கி நிலைத்தப் பயனளித்ததாலும் இலக்கியமே சிறந்தது என்பர். மனிதன் படைத்துக் கொண்ட நாகரீகக் கருவிகளில் மிகச் சிறந்தது மொழி என்பது. பேசுவதற்கும், எழுதுவதற்கும் உரியதாக மனிதன் படைத்துக் கொண்ட மொழி இல்லையாயின், இன்றைய நாகரீக வளர்ச்சியே இல்லை எனலாம். ஆகவே மன்பதையின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் அடிப்படையான மொழி மிகச் சிறந்த


ISBN Number: 978-81-983005-5-3

நாகரீகக் கருவி எனலாம். அத்தகைய மொழியை, மொழியின் சொற்களையே ஊடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியமாகும். அது கலைகளில் சிறந்தது என்பது பொருந்தும். மொழி அறிந்தவரே இலக்கியக் கலையை முழுவதுமாக நுகர முடியும் இலக்கியம் முழுதும் சொற்களால் ஆகிய கலை ஆகையால், அந்த மொழி பயின்றவர் மட்டுமே நுகர முடியும். காலத்தால் அழியாமல் நின்று நிலைத்து நிற்கும் மற்ற கலைகளை விட இலக்கியக் கலை இடத்தால் வரையறுக்கப் பெறும் கலையாகும். இலக்கியம் ஒலியால் அமையும் கலையே. இலக்கியத்தில் வழங்கும் ஒலி பொருளுடைய சொற்களால் ஆகியது. இலக்கிய வகையில் சிறந்தது பாட்டு. இசையின் இயல்பும் உடையது. இலக்கியக் கலையானது மொழியைப் பயன்படுத்துதல், கதை சொல்லல் மற்றும் கற்பனை வெளிப்பாடு ஆகியவற்றை அர்த்தத்தை வெளிப்படுத்துவதற்கும், உணர்ச்சியைத் தூண்டுவதற்கும் கவனம் செலுத்துகிறது.

இலக்கியத்தில்தான் கலை முழுவதும் குறிக்கோள் தன்மையை அடைகிறது. கலையின் பின்புறப்பகுதியும், அகப்பகுதியும் ஒன்றாகி விடுகின்றன. புறப்பகுதியாக அமைந்துள்ள சொல்லும் அகப்பொருளால் தோன்றும் அனுபவமும் ஒன்றாகவே அமைந்துள்ளன. சொல்லைப் படித்து இன்புற்றப் பிறகு நமக்கு அனுபவம்


ISBN Number: 978-81-983005-5-3

ஏற்படுவதில்லை.அதற்குப் பதிலாக இரண்டுமே ஒன்றாகவேத் தோன்றுகின்றன. இரண்டும் வெவ்வேறானவை. எனினும் பிரிக்க முடியாதபடி அவை ஒன்றாய்க் கலந்துள்ளன. கவிஞன் தன் மனதில் இயற்கை தோற்றுவிக்கும் காட்சிகளையேக் கவிதையாக வடிக்கிறான்.இயற்கையில் அன்றாடம் நடைபெறும் இதேக் காட்சி கவிஞனுக்குப் புதிய கருத்தை நல்குகிறது. கண்ணால் பார்ப்பதை மனம் எவ்வாறு ஏற்றுக் கொள்கிறதோ அவ்வாறே பாடும் இயல்பு அன்று இருந்தது. கவிஞன் கண்ட சில காட்சிகளைக் கொண்டு காணாதவற்றை எவ்வாறு இருக்கும் என்று கற்பிக்கின்றான். கவிஞன் குளிர் காலத்தை வர்ணிக்கின்றான். இதில் ஒன்றாவது நடைபெறாதது அன்று. ஆனால் எல்லா இடத்திலும் ஒரே நேரத்தில் நடைபெற்றவை என்று கூற இயலாது.

நெடுநல்வாடையில் மாடுகள் மேய்ச்சலை மறப்ப, குரங்குகள் குளிரால் குந்தி இருக்க, பறவைகள் குளிரால் வீழ, மாடுகள் கன்றுகள் பால்க்குடிப்பதை விரும்பாமல் உதைக்க, மலைகளும் குளிரால் நடுங்கும் நாளில், முசுண்டை பூக்க, பீர்க்கம் பூ புதர்தோறும் மலர, பசிய காலையுடைய கொக்கின் கூட்டம் ஈர மணலில் செவ்வரியிணையுடைய நாரையுடன் இருந்து மீன்களைக் கவர என்று பாடியுள்ளார்.

 **ISBN Number: 978-81-983005-5-3**

**மா மேயல் மறப்ப, மந்தி கூர**
**பறவை படிவன வீழ, கறவை**
**கன்று கோள் ஒழியக் கடிய வீசி,**
**குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள்**
**புன் கொடி முசுண்டைப் பொதிப்புற வான் பூ**
**பொன் போல் பீரமொடு புதல் புதல் மலர**
**(நெடுநல்வாடை, பா. 9-14)**

இக்காட்சி எங்காவது காணக்கூடிய ஒன்று தான் என்றாலும், இதில் உயிர்த்துடிப்பு உள்ளது. இதன் மூலம் நெடுநல்வாடையில் இலக்கியக்கலைக் குறித்துக் கூறியுள்ள செய்திகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**முடிவுரை**

மன்னனைப் பிரிந்து வருந்தும் அரசிக்கு, செவிலியர் கொற்றவையை வேண்டுவதாக அமைந்த இந்நூலில், கூதிர்க் காலத்தின் நிலை, வருந்தும் உயிர்கள், உறக்கமில்லாமல் தவிக்கும் தலைவி, கண்ணீரோடும், கவலையோடும் அவள் படுத்திருக்கும் கட்டில், பாசறையில் இருக்கும் தலைவன் என்று பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. என்றாலும், அவற்றுள் கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஒப்பனைக்கலை, நடனக்கலை, இலக்கியக்கலை குறித்து இக்கட்டுரையில் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.


**ISBN Number: 978-81-983005-5-3**





## குறிப்புகள்

[1] ஆலிஸ் (உரை. ஆ). *பதிற்றுப்பத்து மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[2] *சீவகசிந்தாமணி.* இரண்டாம் தொகுதி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2010.

[3] செயபால். இரா. (உரை. ஆ). *அகநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[4] பாலசுப்பிரமணியன், கு. வை. (உரை.ஆ) *புறநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட் சென்னை, 2004.

[5] மகாமகோபாத்தியாய. *பெருங்கதை பகுதி I உஞ்சைக் காண்டம்.* உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1968.

[6] மயிலை சீனிவேங்கடசாமி, *நுண்கலைகள்.* சாரதா மாணிக்கம் பதிப்பகம், சென்னை, 2010.

[7] மயிலை சீனிவேங்கடசாமி. *தமிழர் அழகுக்கலைகள்.* சாரதா மாணிக்கம் பதிப்பகம், சென்னை, 2010.

[8] மோகன், இரா. *பத்துப்பாட்டு, மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[9] விசுவநாதன், அ. *கலித்தொகை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[10] ஸ்ரீ சந்திரன், ஜெ. *மணிமேகலை மூலமும் தெளிவுரையும்.* தமிழ் நிலையம், சென்னை, 2012.

 ISBN Number: 978-81-983005-5-3

[11] ஸ்ரீ சந்திரன், ஜெ. *சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும்*. தமிழ் நிலையம், சென்னை, 2012.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-81-983005-5-3

# Architecture in *Nedunalvadai*

**Dr. G. Lingamoorthy,** Assistant Professor of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0008-9637-3712**
**DOI: 10.5281/zenodo.14580298**

## Abstract

*Sangam literature is the ancient literature of the Tamil language. All such literature is full of creative sources that evince Tamil culture and society. Sangam Tamil literature is a collection of beautiful songs. Pattupatuu is one among them. Nedunalvadai, one of the collections from Pattupatuu is a mixture of internal and external values of Tamil people's lives. It was composed by Nakkerar. It reflects the living realities of the ancient Tamils. Many Tamil scholars call it as 'Sirpappattu'. The information about sculptures, paintings and the beauty of the palace are elegantly described in the collection. The description of sculptures and paintings enhances the beauty of the buildings and reveals their beauty in the collection of poems. This chapter paper has been written to understand the culture, lifestyle, civilization and lifestyle of the ancient Tamils and to understand their artistic talent in architecture.*

**Keywords:** Architecture, *Nedunalvadai*, Tamil Culture.

## References

[1] Rasu Poun Durai. *Tamilaga Nattupurak Kattadakkalai* Marabu. Tamil University, Thanjavur.

 ISBN Number: 978-81-983005-5-3

[2] Dakshinamoorthy, A. *Tamilar Nagarigamum Panbadum*. Jaffna Publications, Chennai - 600 040.

[3] Dharmaraj, J. *Indiak Kattadakkalai Varalaru*. Tensi Publications, Sivakasi.

[4] Deivanayagam, K. *Tamilar Katidakkalai*. New Century Bookhouse (P) Ltd., Chennai - 600 098.

[5] Balasubramanian, S. V. *Sanga Ilakkiyam Moolam Muluvathum*. Manivasagar Publishing House, Chennai - 600 108, Second Edition, 2011.

[6] Mayilai Seeni. Venkatasamy. *Tamilar Valartha Alagukkalaigal*. Shanthi Library, Chennai - 600 001, Third Edition, 1967.



**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.


**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.



ISBN Number: 978-81-983005-5-3

# நெடுநல்வாடையில் கட்டிடக்கலை

**முனைவர் கு. லிங்கமூர்த்தி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0008-9637-3712**
**DOI: 10.5281/zenodo.14580298**

## ஆய்வுச்சுருக்கம்

*தமிழ் மொழியின் தொன்மை பேசும் இலக்கியமாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. அத்தகைய இலக்கியங்கள் யாவும் கற்பனை வளங்கள் நிறைந்தவை. அவை, படைப்பாளின் உள்ளுணர்வை வெளிப்படுத்துகின்றன. சங்கத் தமிழ் இலக்கியங்கள் பாட்டும் தொகையும் ஆகும். இதில் பாட்டு என்பது பத்துப்பாட்டு ஆகும். அவற்றுள் அகமும் புறமும் கலந்த இலக்கியமாக, நெடுநல்வாடை காணப்படுகின்றது. இது நக்கீரரால் இயற்றப்பட்டது. இது பழந்தமிழர்களின் வாழ்வியல் யதார்த்தங்களைப் பிரதிபலிக்கின்றது. அறிஞர்கள், இதைச் 'சிற்பப்பாட்டு'' என்று அழைக்கின்றனர். அத்தகைய அளவிற்கு சிற்பங்கள், ஓவியங்கள், அரண்மனையின் அழகு ஆகியவைப் பற்றியத் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. கட்டடங்களின் அழகியலைச் சிற்பங்களும் ஓவியங்களும் பன்மடங்கு உயர்த்திக் காட்டுவதோடு அவற்றின் அழகியலையும்*

 ISBN Number: 978-81-983005-5-3

*வெளிக்காட்டுகின்றன. பழந்தமிழரின் பண்பாடு, வாழ்வியல், நாகரீகம், வாழ்வியலை உணர்ந்து கொள்ளும் நோக்கோடும் கலை உணர்வை அறிந்து கொள்ளும் நோக்கோடும் இவ்ஆய்வு அமையப்பெற்றுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** கட்டிடக்கலை, *நெடுநல்வாடை*, தமிழ் கலாச்சாரம்.

**முன்னுரை**

நவீன தமிழிலக்கிய ஆய்வு உலகில் பல்வேறு தளங்கள் காணப்படுகின்றன. பழந்தமிழரின் வாழ்வியலைச் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. அவற்றுள் நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை இலக்கியம் ஒன்றாகும். இது தமிழர்களின் கட்டடக்கலை தொடர்பான செய்திகளை உள்ளடக்கிய பெட்டகமாக விளங்குகின்றது. இப்பெட்டகத்தின் உள்ளே கட்டிடக்கலை சார்ந்த கூறுகளின் முக்கியத்துவம், மனை அமைத்த பாங்கு, கட்டிடம் கட்டிய முறைகள், தச்சு வேலையில் பின்பற்றப்பட்ட கலைக் கூறுகள், அரண்மனையின் முன்புறத் தோற்ற அமைப்பு, மழைநீர் சேகரிப்பு முறைகள் இடம்பெற்றுள்ளன.

மனித வாழ்வின் இன்றியமையாத தேவையாக இருப்பவை உணவு, உடை, உறையுள் ஆகும். இதில் மனிதன் பாதுகாப்பாக வாழ்வதற்கு ஓர் இருப்பிடம்

 ISBN Number: 978-81-983005-5-3

வேண்டும். இத்தகைய மனித எண்ணம் தான் கட்டடக்கலையின் தோற்றத்திற்கு வித்திட்டது. ஒரு சமுதாயத்தில் பிற கலைகளும், தொழில்களும் நடைபெற இடமளிக்கக் காரணியாகக் கட்டடக்கலை இருக்கின்றது. பழங்காலத் தமிழகத்தில் நேர்த்தியுடனும் ஒருங்குடனும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அவை உருவாக்கப்பட்ட முறைகள் அறிய முடிகின்றன. பழந்தமிழர் பல்வேறு விதமான கட்டடங்களை அமைத்து வாழ்ந்தனர். என்பதனையும், அவை சிறந்த கலை நுட்பத்துடன் அமைந்திருந்தன. அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப வசதிகள் நிறைந்து அமைந்திருந்தன. இவற்றையெல்லாம் வெளிக்கொண்டு வரும் நோக்கில் நெடுநல்வாடையில் கட்டிடக் கலை என்னும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகின்றது.

**நெடுநல்வாடை**

நெடுநல்வாடை நக்கீரர் இயற்றியது. இது நீண்ட, நல்ல வாடை என்னும் பொருளில் தலைப்பு அமைந்துள்ளது. வாடை காற்று என்பது வட திசையில் இருந்து வருவதாகும். இக்காற்று எத்தகைய தன்மை உடையது? அதன் குளிர்ச்சி எத்தகையது? என்பதை இவ்விலக்கியம் உணர்த்துகின்றது. இது 188 அடிகளைக் கொண்டமைந்துள்ளது.


ISBN Number: 978-81-983005-5-3

இவ் அடிகள் கோவலர்கள் குளிர்ந்த காற்றினால் பெற்ற துன்பம், தலைவியின் துயர நிலை, மன்னன் வாடைக்காற்றிலும் வீரர்களுக்கு ஆறுதல் கூறுகின்ற பாங்கு இடம்பெற்றுள்ளன. மேலும், இதில் கட்டிடக்கலை குறித்த செய்திகளும் உள்ளடங்கி உள்ளன. கட்டிடங்களின் அமைப்பு, அதன் மரபு குறித்த செய்திகள் காணப்படுகின்றன. தமிழர்களின் கட்டிடக் கலையில் சிற்பங்கள், ஓவியங்கள் இணைந்துள்ளன. இவை, கட்டிடங்களின் அழகியலை பன்மடங்கு உயர்த்திக் காட்டுகின்றன. அரண்மனைக் கட்டப்பட்ட முறை, அது கால்கோள் செய்யப்பட்ட நாள் முதல் நெடுநல்வாடையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அரண்மனை வாயில், முற்றம், அந்தப்புரத்தின் அமைப்பு, அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில், கட்டிற்கால்கள் உருண்டு குடம் போன்ற அமைக்கப்பட்டிருப்பதை, ‘தூங்கு இயல் மகளிர் வீங்குமுலை கடுப்பப் புடைதிரண் டிருந்த குடத்த” என்று நுட்பமாக நக்கீரர் உணர்த்துகிறார். அங்குள்ள அந்தப்புர வாயிலில் பதுமைகள் இருந்ததையும், அவற்றில் விளக்குகள் ஏற்றி வைக்கப் பட்டதையும் மிக அழகாக விவரிக்கிறார். அரண்மனை வாசல் நிலையில் குவளை மலரேந்திய யானைகளுக்கு நடுவில் திருமகள் உருவம்


**ISBN Number: 978-81-983005-5-3**

செதுக்கப்பட்டுள்ளது. நீரூற்றும் சிங்கங்கள் அரசரின் நிலாமுற்றத்தில் இருந்தது வியப்பினைத் தருகிறது.

**கலைகள்**

மனித மனம் சோர்வு அடையும் பொழுது, மன மகிழ்ச்சி பெற கலைகள் உதவுகின்றன. மனித மனத்தை மகிழ்விக்க எண்ணற்ற கலைகள் காணப்படுகின்றன. இலக்கியங்கள் கலைகளின் கூடாரமாக விளங்குகின்றன. இலக்கியப் படைப்புகளில், படைப்பாளர்களின் மன எண்ணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. கலைகள் மனித நாகரிகத்தின் வளர்ச்சி நிலை ஆகும். இதனை,

> **மனிதன் நாகரிகம் பெறுவதற்றுப் பேருதவியாக இருந்தவை அவன் சிறிது சிறிதாகக் கற்றுக் கொண்ட பலவகையான தொழில்களேயாகும். ஓவ்வொரு தொழிலையும் கற்றுத் தேர்வதற்கு அவனுக்குப் பல நூற்றாண்டுகள் கழிந்தன. மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம்.**
>
> **(தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 1, 2)**

என்னும் கூற்றின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

மனிதன் என்பவன் அறிவு நிறைந்தவன். அவனின் அறிவைப் பகுத்தறியும் ஆவணமாகக் கலைகள் விளங்குகின்றன.


ISBN Number: 978-81-983005-5-3

**அழகுக் கலையை விரும்பாத மனிதனை அறிவு நிரம்பாத விலங்கு என்றே கூற வேண்டும்; அவனை முழு நாகரிகம் பெற்றவன் என்று கூற முடியாது (மு.கூ.நூ, ப. 3)**

என்னும் கருத்தின் வழியாகக் கலைகள் மனித அறிவின் வெளிப்பாடாக இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

மக்கள், தங்களின் உள்ளத்து உணர்வுகளைக் கலைகள் வழியாக வெளிப்படுத்துகின்றனர். கலைகள் என்பது ஒரு நாட்டின் பன்முகப் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கின்றன. அவை யாவும் மக்களின் பழக்கவழக்கம், வாழ்வியல் முறை மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்தும் காரணிகளாக இருக்கின்றன. கலைகள் அழகு வெளிப்படும் இடங்களாகத் திகழ்கின்றன. அழகும் மக்களின் பார்வையைப் பொறுத்து தான் அமையும். ஒருவரின் பார்வையில் அழகாகத் திகழ்கின்ற ஒரு பொருள், மற்றவருக்கு அழகாகத் தெரிவதில்லை. மக்களிடம் இயல்பாக உள்ள அழகியல் உணர்ச்சியின் வெளிப்பாடு அழகுக்கலை என்பதாகும். கலைகளைக் கவின்தரு கலை என்றும் பயன்தரு கலை என்றும் பிரித்துள்ளனர். மக்களின் கண்ணையும் செவியையும் கவர்ந்து அவற்றின் வாயிலாக, அவர்களின் மனதிற்கு இன்பம் ஊட்டும் கலைகள் கவின்கலை ஆகும். இக்கலையை அழகுக்கலை என்றும் நுண்கலை என்றும்

 ISBN Number: 978-81-983005-5-3

அழைக்கப்படும். இதில் இசை, நடனம், ஓவியம், சிற்பம், நாடகம் போன்றவை அடங்கும். இவை, மக்களின் வாழ்க்கையை மகிழ்ச்சி உடையதாக்குகின்றது.

மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை உருவாக்கப் பயன்படும் கலைகள் பயன்தரு கலைகள் எனப்படும். உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் உழவர், நூல்களைத் திரித்து ஆடைகளை நெய்யும் நெசவாளர், மண்ணைக் குழைத்து மட்பாண்டங்களைச் செய்யும் குயவர், பொன்னை உருக்கி வண்ண அணிகலன்களைச் செய்யும் பொற்கொல்லர் போன்றவர்கள் பயன்தரு கலைகளைப் பயின்று பணி செய்கின்றனர்.

**கட்டிடக்கலை**

தமிழில் கட்டிடம், கட்டடம் என்னும் இரு சொற்கள் காணப்படுகின்றன. கட்டிடம் என்பது தான் சரியான சொல். கட்டிடம் என்னும் சொல்லுக்குரிய இன்னொரு சொல் கட்டடம் என்ற சொல் காணப்படுகிறது. 'கட்டடம்' சொல்லாட்சி இன்று தமிழில் அதிகமாகக் காணப்படுகிறது. இருப்பினும் இரு சொற்களும் ஒரே பொருளை மையப் பொருளாகக் கொண்டு விளங்குகின்றன. கட்டிடக்கலை என்பது கட்டிடங்களின் வடிவமைப்பு, தொழில்நுட்பம் கட்டிடம் பார்ப்போர் மனத்தை மகிழ்விக்கும் தன்மையாகும்.

 ISBN Number: 978-81-983005-5-3

கட்டிங்கள் அழகியல் தன்மை பார்த்து வியக்கும் வண்ணம் காணப்பட வேண்டும். “கட்டிடக்கலை நடைமுறை என்பது பரந்த இடத்தின் ஒட்டுறவுகள், கட்டிட அமைப்பு, ஒரு குறிப்பிட்ட சூழலுக்குள் நிலவ வேண்டிய இணக்கமான நடவடிக்கைகள், கட்டிடப் பொருள்களின் ஒருங்கமைவு மற்றும் தோற்றம், பொலிவு ஆகியவற்றைக் கட்டுமான ஒருங்கமைவுகளின் தன்னியல்பான திட்டத்திலிருந்து மாறுபடுத்தி வலியுறுத்துகிறது” என்கிறது பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம்.

தமிழர் கட்டிய வீடு, மாளிகை, அரண்மனை, கோயில்கள் போன்றவை கட்டிடக் கலைக்குச் சான்றுகளாக இருக்கின்றன. இவற்றுள் கோயில்கள் காலத்தைக் கடந்து தமிழரின் கட்டிடக்கலைக்குச் சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன. சங்ககாலத்தில் இருந்தே முறையாகக் கட்டிடங்களை அழகுற அமைப்பதற்கான மனை நூல்கள் இருந்துள்ளன. 'நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம்’ (சிலம்பு., 98) என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். பழங்காலக் கட்டிடங்கள் மரத்தினால் கட்டப்பட்டன. பின்னர் களிமண், சுட்டசெங்கல், கற்கள் கொண்டு கட்டிடங்கள் அமைக்கும் முறைகள் தோற்றம் பெற்றன. தமிழகக் கட்டிடக்கலை வரலாற்றில் சோழர் காலம் பொற்காலம் ஆகும். இக்கால மன்னர்கள் செங்கற்களால் கட்டிங்கள்,

 ISBN Number: 978-81-983005-5-3

கருங்கற்களான கட்டிடங்கள் கட்டினர். இராசராச சோழன் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயில் கட்டிடக் கலையின் மணிமகுடமாக விளங்குகின்றது. நாயக்கர் காலக் கட்டிடக்கலையில் நூறுகால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்புதல் தனிச்சிறப்பாக இருந்தன. திருமலை நாயக்கர் மகால், இராமேசுவரம் இராமசுவாமி கோயில் ஆயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் புது மண்டபம், திருச்சி மலை மீது கட்டப்பட்டுள்ள தாயுமானவர் கோயில் ஆகியன எடுத்துக்காட்டுகளாகும். தமிழர்கள் கட்டிடக்கலையின் நீண்ட வரலாறு என்பது அவர்களின் பழமை, வளமை உலகிற்கு எடுத்துரைக்கின்றன.

**நிலா முற்றம்**

சங்க காலத் தமிழர்கள் வீடுகளின் மேல் தளத்தில் நிலா முற்றங்களும், திறந்த வெளி மாடங்களும் அமைத்திருந்தனர். அங்கு அமைத்த திறந்த வெளி மாடங்கள் வழியாக நிலவைக் கண்டு, அதன் பயனை இரசித்து மகிழ்ந்தனர். இக்கருத்தை, “நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றம்” (நெடுநல்வாடை, 95) வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது. நிலா மாடம் அமைத்த செய்தியை மதுரைக் காஞ்சியும் எடுத்துரைக்கின்றது. இக்கூற்றினை, “நிரைநிலை மாடத்து அரமியம் தோறும்” (மதுரைக்காஞ்சி, 451)

 ISBN Number: 978-81-983005-5-3

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. வானின் வெப்பத்தைப் போக்கவும் வீட்டிற்குள் காற்று வந்து செல்லவும் ஏற்ற வகையில் நிலா முற்றங்கள அமைக்கப்பட்டன.

**கட்டிடக் கலைஞர்கள்**

கட்டிடக் கலைஞர்கள் 'மனைநூல்' இலக்கணங்களைக் கடைபிடித்துக் கட்டிடங்களைக் கட்டினர். இச்செய்தியை,

**மாதிரம் விரிகதிர்**
**பரப்பிய வியல்வாய் மண்டிலம்**
**இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு**
**ஒருதிறஞ்சாரா அனைநாள் அமயத்து**

**(நெடுநல்வாடை, பா. 72 – 75)**

என்னும் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. கட்டடக் கலைஞர்கள், நாள் செய்த பின்னரே அரண்மனையைக் கட்டத் தொடங்கினர் என்பதை இதன் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. அவர்கள் நல்ல நாள் பார்த்து, கோள்களின் நிலை பார்த்து, நல்ல வேளை பார்த்து கட்டிடம் கட்டத் தொடங்கும் மரபு இருந்ததை அறிய முடிகின்றது. பழந்தமிழர் வாழ்வில் பின்பற்றப்படும் மனை சார்ந்த வழக்கங்கள் தற்காலத்திலும் கடைபிடிக்கப்படுகிறதை *நெடுநல்வாடை* உறுதி செய்கின்றது.


ISBN Number: 978-81-983005-5-3

மனையடி சாத்திரத்தில் வீடு கட்ட மிகச் சிறந்த மாதமாகச் சித்திரைக் கூறப்பட்டுள்ளது. இச்சிந்தனையை நெடுநல்வாடை இயற்றிய நக்கீரரும் உறுதி செய்கிறார். கொத்தனார்களிடம் நூலைப்பிடித்து அளவும் திசையும் பார்க்கும் வழக்கம் இன்றும் உள்ளது. தொழிலாளிகள், கட்டிடக்கலையின் தொழில் நுட்பம் அறிந்திருந்தனர். அவர்கள் மன்னரின் மனநிலை அறிந்து, அதற்கு ஏற்றக் கட்டிடம் அமைக்கப்பட்ருப்பதை,

**நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டு**
**தேயங் கொண்டு தெய்வ நோக்கிப்**
**பெரும்பெயர் மன்னர் கொப்ப மனைவகுத்து**
**(நெடுநல்வாடை, பா. 76-78)**

என்னும் பாடல் அடிகள் வழியாக அறிய முடிகின்றது. கட்டிடத் தொழில் நுட்பம் சார்ந்த புலவர்கள் அறிவு நுட்பம் கொண்டு, தெய்வங்களை வணங்கி, கட்டிடங்களை (அரண்மனையை) உருவாக்கியுள்ளனர்.

**மரபு வழி வந்த கட்டிடம்**

மரபு என்னும் சொல் பழமை என்னும் பொருளைத் தருகின்றது. பழமையான ஒரு பொருள், பிற்காலத்தில் கலை வடிவமாகக் காட்சியளிக்கிறது. அக்கட்டிடம் மன மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இத்தகைய கட்டிடம் மரபு சார்ந்து அமைகின்றது. அது போன்று பழமையான கட்டிடம், அதன் தொழில் நுட்பத் திறனால் பிற்கால

 ISBN Number: 978-81-983005-5-3

மனிதனுக்குக் கலையாகத் தெரிகின்றது. பண்டைத் தமிழர்களின் கட்டடக்கலை தொடர்பான கருவூலமாக நெடுநல்வாடை இலக்கியம் இருக்கின்றது. கற்பனைத் திறனோடு அமைக்கப்பட்ட மாடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் இதற்குச் சான்றாகக் காணப்படுகின்றன. அக்கால மக்களிடம் கட்டிடக்கலை தொடர்பான கலைநயம் இருந்தது என்பதை,

**மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்**
**ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்....**
**படலைக் கண்ணி பரு ஏர் எறுழ் திணி தோள்**
**முடலை யாக்கை முழு வலி மாக்கள்**
**வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ் சிறந்து**
**துவலைத் தண் துளி பேணார், பகல் இறந்து**
**இரு கோட்டு அறுவையர் வேண்டுவயின் திரிதர**
**(நெடுநல்வாடை, பா. 29 – 35)**

இப்பாடல் அடிகள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**தொழில்நுட்பம்**

தொழில் என்பது மக்களின் வாழ்வாதரத்திற்கான ஒன்றாக அமைந்துள்ளது. அதில் தொழில் நுட்பம் என்பது மனத்திற்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகும். மனிதனுக்குத் தேவையான பணியை விரைவாகவும் எளிமையாகவும் செய்து கொடுக்கும் கருவி தொழில்நுட்பம் ஆகும். இது


**ISBN Number: 978-81-983005-5-3**

அறிவியல் சிந்தனைகளோடு தொடர்பு கொண்டுள்ளது. ‘கலைநோக்கு’ என்பது தொழிலுக்கு அப்பாற்பட்டு மனித மனதை ஈர்க்கும் தன்மை உடையதாக விளங்கியது. “கட்டிடத்தை வடிவமைக்கக்கூடிய கலையே கட்டிடக்கலை எனப்படும். கட்டிடத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்வது கூரை, வளைவுகள், சுவர்கள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் ஆகும். ‘ஆர்கிடெக்சர்’ என்ற வார்த்தை ‘ஆர்க்’ என்ற வார்த்தையிலிருந்து தோன்றியது ‘ஆர்க்’ என்றால் வளைவு அல்லது வளைவான நுழைவாயில் எனப்படும். கட்டிடக்கலை தொடர்பான இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பதை,

> **இந்திய அறிஞர்களாலே வடமொழியில் எழுதப்பட்டவை இவற்றை சிற்ப நூல்கள், வாஸ்து நூல்கள் அல்லது சாஸ்திர நூல்கள் என்பர். இவை பலவானாலும் இன்று நமக்கு கிடைப்பவே சிலவே. அவை யாவனமானசாரம், மயமதம், விஸ்வர்மீயம், ஐந்திரமதம், மனுசாரம், காஸ்யபம் இவை சிற்பக்கலை, கட்டிடக்கலை ஆகிய இரண்டையும் பற்றிப் பேசும் வாஸ்து நூல்கள் (இந்திய கோவில் கட்டிடக்கலை வரலாறு, ப. 34)**

என்று கட்டிடக்கலை இலக்கணமுறைகள் குறித்து நூல்கள் உள்ளன என்பதை ஆர்.வி.ராமன் கூற்று மெய்ப்பிக்கின்றது.


ISBN Number: 978-81-983005-5-3

அறிவியலின் பயன்பாட்டிலும் தொழில்நுட்ப முறைகள் இடம் பெற்றிருக்கின்றன. நெடுநல்வாடையில் அறிவியல் தொடர்புடைய தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்பதையும் அறியமுடிகின்றது. மனை அமைத்த முறையில் ஜோதிடமுறைகள் பின்பற்றி 'திருமுளைச் சாத்து' என்னும் சடங்கு செய்யப்பட்டதை,

**விரிகதிர் பரப்பியவியல்வாய் மண்டிலம்**
**இருகோல் குறிநிலைவழுக்காதுகுடக்குஏர்பு,**
**ஒருதிறம் சாராஅரைநாள் அமையத்து,**
**நூல் அறிபுலவர் நுண்ணுதின் கயிறு இட்டு,**
**தேஎம் கொண்டுதெய்வம் நோக்கு...**

**(நெடுநல்வாடை, பா. 72 – 77)**

என்ற பாடல் அடிகள் வடக்குத் தெற்காக இரு கோல்கள் நடப்பட்டு, அதில் கிழக்கு, மேற்காகத் தாரையாக ஓடும் சூரியனின் கதிர்பட்டு நிழல் உண்டாகும். அது ஒரு பக்கமாக விழாமல் நேராக விழும் நேரம் குறித்து கொள்ளப்படும். அப்பொழுது அரண்மனை அமைப்பதற்கான 'திருமுளைச் சாத்து' (வாஸ்து) செய்யப்படும். கட்டிடப் பணிகளும் அந்நாளில் தொடங்கப்படும்.

**அரண்மனை வாயிலின் தொழில்நுட்பம்**

அரண்மனை வாசல் என்பது மிகுந்த தொழில்நுட்பம் கொண்டு அமைந்துள்ளது. தற்காலத்தில்


ISBN Number: 978-81-983005-5-3

கட்டக் கூடிய வீடுகளிலும் கூட வாசல் கதவு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. மக்களின் வாழ்வாதாரங்களில் மிக முக்கியமான ஒன்று வாசல் மற்றும் கதவு ஆகும். தச்சன், கைத்திறனுடன் சேர்ந்த கலைநயத்துடன் அரண்மனைக்குக் கதவுகள் அமைத்துள்ளான். இன்றைய காலத்தில் பெரும்பாலான வீடுகளின் நிலைகளுக்கு மேலே காணலாகும் ‘கஜலெட்சுமி’ வடிவம் இழைத்த உத்தரம் நெடுநல்வாடையிலே இடம் பெற்றுவிட்டது.

உத்திரத்தின் மேலே அதாவது நிலைக்கு மேலே கற்பலகையில் குவளையின் புதிய மலர்களை உயர்த்தித் தங்கள் துதிக்கைகளால் ஏந்திய பிடிகளின் உருவங்களும் அதன் நடுவில் திருமகள் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். இத்தகைய தொழில்நுட்பங்கள் யாவும் சங்ககால மக்கள் வழங்கிய கொடை எனலாம். சிறந்த கலைக் கூறுகளோடு மனிதர்களால் செய்யப்பட்ட தொழில் நுட்பங்கள் யாவும் கணினி உதவியுடன் இன்றைய காலத்தில் உருவாக்கப்படுவதால் கலைநேர்த்தி இன்றி கட்டிடக்கலை, தச்சுக் கலை தரம் மாறிவிட்டது. கலைக்கூறுகளில் கைகளால் இழைத்து செய்யப்படும் தரம் குறைந்து அழகியல் நோக்கும் சிதைந்து வரும் அவல நிலையில் தொழில்நுட்பக் கூறுகள் மாறி முடங்கிக் கிடக்கின்றன. நெடுநல்வாடைக்கு

 **ISBN Number: 978-81-983005-5-3**

உரைவகுத்த நச்சினார்கினியர் கஜலெட்சுமி உருவம் பொறித்த கற்பலகைக்கு விளக்கம் தரும் போது, “நடுவில் திருமகளும், இருபுறத்தும் இரண்டு செழுங்கழுநீர்ப்பூவும், இரண்டு பிடியுமாக வகுத்த உத்தரக் கற்கலி” என்று அழகுபட உரைக்கின்றார். இக்கருத்தை உணர்த்தும் நோக்கில்,

**ஒருங்கு உடன் வளைஇ, ஓங்கு நிலை வரைப்பின்**
**பரு இரும்பு பிணித்து, செவ்வரக்கு உரீஇ,**
**துணை மாண் கதவம் பொருத்தி, இணை மாண்டு**
**நாளொடு பெயரிய கோள் அமை விழு மரத்து**
**போது அவிழ் குவளைப் புதுப்பிடி கால் அமைத்து,**
**தாழொடு குயின்ற போர் அமை புணர்ப்பில்**
**கை வல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்ந்து**
**ஐயவி அப்பிய நெய்யணி நெடு நிலை**
**வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக,**
**குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்**

**(நெடுநல்வாடை, பா. 78-88)**

என்னும் பாடல் அடிகள் இடம்பெற்றுள்ளன. இதில் கதவின் அமைப்பு குறித்த செய்திகள் உணர்த்தப்படுகின்றன. கதவானது, ஒரு சேர இடங்களையெல்லாம் வளைத்து, உயர்ந்த நிலையையுடைய மதில் அருகில் அமைந்துள்ளது. அது பருத்த ஆணியால் கட்டப்பட்டு, சிவப்பு அரக்கைத் தடவி


ISBN Number: 978-81-983005-5-3

அமைக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்குச் சிறப்புமிக்க இரட்டைக் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கதவுகளில் உத்திரம் என்னும் விண்மீனின் பெயர் பெற்ற மரத்தின் பலகையைக் கதவுக்கு மேலே வைத்து (உத்தரக்கட்டை), கதவில் மலரும் குவளை பூப் போன்ற புதிய கைப்பிடிகளை அமைத்து, தாழொடு சேர்த்த, பொருந்துவதாய் அமைந்த, கைத்தொழிலில் வல்லமை உடையவன் இணைத்ததால் இடைவெளி இல்லாது இருந்தது கதவு. அதில் வெண்கடுகின் சாந்தும் நெய்யும் கலந்த கலவை தடவப்பட்டது. போரில் வெற்றி பெற்று வரும் உயர்த்திய கொடியுடன் யானைகள் புகுமாறு, மலையில் குடைந்தது போல் உயர்ந்து அரண்மனையின் வாயில் அமைந்திருந்தது. இத்தகைய காட்சி கலித்தொகையில் (44) ஆம் பாடலிலும் காணமுடிகின்றது.

**அரண்மனை முற்றத்தின் தொழில்நுட்பம்**

அரண்மனையின் முன் பகுதியில் மணல்கள் பரப்பி முற்றம் அமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய முற்றமானது செல்வத்தை நிலைபேறு உடையதாகக் காவல் காத்துள்ளது. தற்காலத்தில் வாஸ்து வருவதற்குக் காரணியாக வீட்டின் முற்றம் கருதப்படுகின்றது. கட்டிடக்கலையின் கூறுகளில் முக்கியமானது முன்புறத் தோற்ற வேலைப்பாடாகும். மனையாகிலும், பொது கட்டிடங்களாகிலும், கோயிலாகிலும் முன்புறத்

 ISBN Number: 978-81-983005-5-3

தோற்றத்தை வைத்தே அக்கட்டிடத்தின் அழகுத் தன்மையை உணரமுடியும். அந்தவகையில் பாண்டிய மன்னனின் மனைவி பாண்டிமாதேவி தங்கி இருக்கும் அந்தப்புரத்தின் முன்புற மதிலின் தோற்றம் கலை நேர்த்தி கொண்டதாக இருப்பதை நெடுநல்வாடையில்,

**திரு நிலைபெற்ற தீது தீர் சிறப்பின்**
**தருமணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து**
**(நெடுநல்வாடை, பா. 89 – 90)**

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. வீட்டின் செல்வம் நிலைப்பெற முற்றம் சிறப்புடையதாக அமைகின்றன. செல்வம் தங்கும் இடம் என்று கருதி வீட்டின் முற்றம் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. கலைநயம் கொண்ட நோக்கில் வீட்டின் முற்றம் அமைக்கப்பட்டிருந்தது.

**அந்தப்புரம் அமைப்பில் தொழில்நுட்பம்**

அரண்மனை அந்தப்புரத்தின் அமைப்பு சிறப்பு மிக்க தொழில் நுட்ப வல்லுநர்களால் அமைக்கப்பட்டுள்ளது. யவனர்களால் செய்யப்பட்ட பாவை விளக்குகளால் அந்தப்புரம் பாவை விளக்குகளால் மின்னியது. தற்காலத்தில் வீடுகளில் பயன்படுகின்ற மின்சார விளக்குகள் போன்று அவை விளங்குகின்றன. இக்கருத்தினை,

**… பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர் எரி**
**அறு அறு காலைதோறு அமைவரப் பண்ணிப்**


ISBN Number: 978-81-983005-5-3

**பல் வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க,**
**பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது**
**ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்**
**(நெடுநல்வாடை, பா. 95-107)**

என்னும் வரிகள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது. இதில் அமைந்துள்ள கருத்துகள் வழியாக இருளை நீக்கிய கலைவடிவமாக, அரண்மனை அந்தப்புரம் திகழ்வதையும் பெண்கள் மாலைப் பொழுதில் இல்லத்தில் கடவுளைத் தொழும் பொழுது நெல்லும், மலரும் தூவி வணங்கிய செய்தியைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. அதற்கு ஏற்ப, கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கலைநுட்பம் வாய்ந்த விளக்குகள் பழங்காலத்தில் இருந்துள்ளன என்ற கருத்தும் இதன் வழி அறியக் கிடைக்கின்றது.

**அரசன் இருப்பிடத்தின் தொழில்நுட்பம்**

அரசன் இருப்பிடத்தைக் கருவறை என்றே மக்கள் கருதி வந்தனர். கடவுளுக்குக் கொடுக்கும் சிறப்பினை அரசனுக்கும் கொடுத்தனர். இதனால் அரசன் தங்கியிருக்கும் இருப்பிடம் கருவறை என்று அழைக்கப்பட்டது. கருவறை இடமும் மிகுந்த தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்டிருந்தது. மனிதன் நாகரிக வளர்ச்சி அடைய புதிய புதிய உத்திமுறைகளைக் கண்டு பிடித்து அவற்றை உலகிற்குக் கொடையாக வழங்கியுள்ளான். அவ்வகையில் தான் வாழும்


ISBN Number: 978-81-983005-5-3





வாழ்விடத்திற்குத் தகுந்தது போல இயற்கை தந்த கொடைகளைக் கொண்டு கலைநயம் மிக்கச் சூழலை உருவாக்கி அதனுடன் தன்னையும், தன்னைச் சார்ந்தோரையும் இணைத்து பழமையில் புதுமையை உருவாக்கத் தலைப்பட்டான்.

சங்ககால மன்னர்கள், எதிரிகளின் தாக்குதலில் இருந்து தன்னைக் காத்துக் கொள்ள மிகவும் வலிமையான போர்க் கதவுகளைத் தன்னுடைய கோபுர வாயிலில் அமைத்திருந்தான். அத்தகைய கோபுரவாயிலின் கதவுகள் ஆணிகள், பட்டைகள் யாவும் பருத்த இரும்புகளால் பிணிக்கப் பெற்றவை. அதில் தாழ்ப்பாழ்கள் மிகவும் வலிமையானதாக விளங்கின. இவை யாவும் "கைவல் கம்மியன்" என்று கூறப்படும் தச்சு வேலையில் நேர்த்தி உடையவர்களால் செய்யப்பட்டது.

**வரை கண்டன்ன தோன்றல, வரை சேர்பு**
**வில் கிடந்தன்ன கொடிய பல் வயின்,**
**வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ,**
**மணி கண்டன்ன மாத்திரள் திண் காழ்**
**செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்,**
**உருவப் பல் பூ ஒருகொடி வளைஇ,**
**கருவொடு பெயரிய, காண்பு இன் நல் இல்**

**(நெடுநல்வாடை, பா. 108-114)**


ISBN Number: 978-81-983005-5-3

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. கருவறையின் தோற்றம் உயர்த்திருப்பது மலையோடு ஒப்பிடப்பட்டுள்ளது. தூண்கள் அழகிய தொழில்நுட்பத்துடன் காட்சியளித்தன. அவை, நீலமணியுடன் திகழ்வதை அறிந்து கொள்ள முடிகின்றது. சுவர்கள் செம்பினால் செய்யப்பட்டிருந்தன. சுவர்கள் எங்கும் அழகிய பூங்கொடிகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. மக்களின் நவீனத்தும் வாய்ந்த கட்டடக்கலை 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கொண்டிருந்தன என்கிற வழக்காறுகளை அறிந்து கொள்ள முடிகின்றது. ஒருவரின் இல்லற இன்பம் என்பது கட்டிடக்கலையின் தொழில்நுட்பத்தில் அடங்கியுள்ளது.

அந்தப்புரத்தின் உட்பகுதி சாந்து பூசப்பட்டு தூண்களை உடையதாக, பலவள்ளி சாதியாகிய கொடிகள் எழுதப் பெற்று அழகுடன் விளங்குவதாகக் காட்சியளித்தது என்று அந்தப்புரத்தின் புறத்தோற்றத்தைக் கூறுவதன் வழியாகக் கட்டமைப்புகளில் சீரான அழகியல் கூறுகள், தொழில்நுட்ப கூறுகள் பின்பற்றப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. இத்தகைய முன் சுவர் பற்றிய செய்திக்குறிப்பு மதுரைக் காஞ்சியில் "செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து" என்று சுட்டப்பட்டுள்ளது.

 ISBN Number: 978-81-983005-5-3

**மரப்பொருட்கள்**

கட்டடங்களின் சிறப்பை வெளிக்கொண்டும் தன்மையில் அதில் இடம்பெறுகின்ற மரப் பொருட்கள் அமைகின்றது. மரப்பொருட்களின் அமைப்பு, அவற்றின் பயன்பாடு, அப்பொருட்களின் தன்மை இவற்றையெல்லாம் மைய ஆதரமாகக் கொண்டு கட்டிடங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அரசன் மிகச்சிறந்த தொழில்நுட்பம் கொண்ட தன்மையில் அரசி துயில் கொள்ளும் கட்டிலும் அமைக்கப்பட்டிருகின்றது. இச்சிந்தனையை அடியொற்றி,

**தச நான்கு எய்திய பணை மருள் நோன் தாள்,**
**இகல்மீக் கூறும் ஏந்து எழில் வரி நுதல்**
**பொருது ஒழி நாகம் ஒழி எயிறு அருகு எறிந்து,**
**சீரும் செம்மையும் ஒப்ப வல்லோன்**
**கூர் உளிக் குயின்ற ஈர் இலை இடை இடுபு,**
**தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்பப்**
**புடை திரண்டிருந்த குடத்த இடை திரண்டு**
**உள்ளி நோன் முதல் பொருத்தி அடி அமைத்து,**
**பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில்**

**(நெடுநல்வாடை, பா. 115-123)**

என்னும் அடிகள் இடம்பெற்றுள்ளன. இதில் கட்டிலானது, யானையின் தந்தத்தால் செய்யப்பட்டுள்ளது. 40 வயது கடந்த யானைகள் தந்தம் இற்று விழும் அல்லது யானை


ISBN Number: 978-81-983005-5-3

இறந்து விடும். அதனைக் கொண்டு கட்டில் அமைத்தனர் என்று நக்கீரர் கூறியுள்ளார். யானையின் கால் போன்று திண்ணிய, உறுதியான கால்களால் கட்டிலின் கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தச்சனின் தொழில்நுட்பம் பாராட்டப்படுகின்ற விதத்தில் அமைந்துள்ளது.

பாண்டில் பற்றி மலைப்படுகடாமில் "நுண் உருக்குற்ற விளங்குஅடர்ப் பாண்டில்" என்று கூறப்பட்டுள்ளது. கால்கள் மேற்புரத்தில் திரண்டு காணப்படுகின்ற சூல் கொண்ட பெண்ணின் மார்பகம் போன்று இருப்பதாக வருணிக்கிறார். அத்தகைய தன்மை கொண்ட நோக்கில் கட்டில் அழகுற செதுக்கப்பட்டுள்ளது என்று கட்டிலின் ஒப்பனையை அழகுற வருணிக்கிறார் நக்கீரர். ஓர் இல்லற மேன்மையின் சிறப்பைக் கட்டில் வடிவிலும் ஒப்பனையிலும் அமைந்து காணப்படும். மனித வாழ்வின் சிறப்பு என்பது உணவு உண்டு வாழ்கின்ற உயிர் வாழ்விலும் இன்பம் கொண்டு ஆளுகின்ற இல்லற வாழ்விலும் இன்றியாமையாதது இக்கருத்தினை,

**… நுண் இழை பொலிய தொடை மாண்டு**
**முத்துடைச் சாலேகம் நாற்றி குத்துறுத்து,**
**புலிப் பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்**
**தகடு கண் புதையக் கொளீஇத் துகள் தீர்ந்து**
**ஊட்டுறு பல் மயிர் விரைஇ, வய மான்**
**வேட்டம் பொறித்து, வியன் கண் கானத்து**

 ISBN Number: 978-81-983005-5-3

**முல்லைப் பல் போது உறழப் பூ நிரைத்து,**
**மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்**
**துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி**
**இணை அணை மேம்படப் பாய் அணை இட்டு,**
**காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்**
**தோடு அமை தூ மடி விரிந்த சேக்கை**

**(நெடுநல்வாடை, பா. 124-135)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன் கட்டிலைச் சுற்றிலும் முத்துக்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. இது பாண்டிய நாட்டின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. கட்டிலின் மேற்கூரையாகப் புலியின் பொறிகளைப் பொறித்த அழகிய நிறத்தையுடைய தட்டம் போன்ற தகடுகள் பொருத்தி அமைந்துள்ளன. பாண்டிமாதேவியின் சேக்கையாகிய படுக்கை விரிப்பிலும் தொழில்நுட்பத்தைக் காணமுடிகின்றது. பழங்காலத்தில் பின்பற்றப்பட்ட தொழில் முறைகள் இன்றும் பின்பற்றப்படும் போது தொழில் நுட்பங்கள் மாறவில்லை. தொழில்நுட்பக் கருவிகளே மாறி உள்ளதை அறியமுடிகின்றது. அன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் மனித சக்தியும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் கணினி அறிவியலும் விஞ்சி நிற்கின்றது. படுக்கை விரிப்பானது கஞ்சி போடப்பட்டு கசங்காமல் இருந்தது என்ற குறிப்பை நெடுநல்வாடை கூறுகின்றது இதே


**ISBN Number: 978-81-983005-5-3**





செய்தியை, **சோறு அமைவுற்றநீர் உடைக் கலிங்கம் (மதுரைக் காஞ்சி, பா. 721)** என்று மதுரைக்காஞ்சியும் எடுத்துரைக்கின்றது. மேலும் 3 முதல் 6 அடி பேரெல்லை கொண்ட குறுந்தொகையில்,

**நலந்தகைப் புலத்திபசை தோய்த்து எடுத்துத்**
**தலைப்புடைப் போக்கித் தண் கயத்து இட்ட**
**நீரிற் பிரியாப் பரூஉத்திரி (குறுந்தொகை, பா. 330)**

என்று புலத்தி பசைப் போட்டு, எடுத்து குளிர்ந்த ஆடையைக் கயிற்றில் இட்டாள். ஆடைக்குக் கஞ்சி பசைப் போட்டு, பயன்படுத்தும் முறை கடைபிடிக்கப்பட்டதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இக்கருத்தை நெடுநல்வாடை, குற்றமற்ற, பல நிறங்கள் ஊட்டப்பட்ட பல மயிர்களை உள்ளே வைத்துப் போர்த்திய போர்வையின் மேல் சிங்கத்தை வேட்டையாடுதல் போன்ற உருவங்களையும் அதில் அகன்ற காட்டில் மலர்ந்த முல்லை மலர்களின் உருவங்களையும் எனப் பல வேறுபட்ட மலர்களின் உருவங்களையும் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது அன்னத்தின் தூய மயிரினையுடைய அணையை மேன்மையுண்டாக விரித்துள்ளார். அதன் மேல் தலையணைகளை இட்டு, கஞ்சியைக் கொண்ட துவைத்த துணியில், மலர் இதழ்களுடன் விரித்த தூய படுக்கை


ISBN Number: 978-81-983005-5-3

கொண்டதாக, அரசியின் கட்டில் அமைந்துள்ளதை இதன் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**சாளரத்தின் தொழில்நுட்பம்**

கட்டிடத்தின் தொழில்நுட்பம் மரப்பொருட்கள் வழி காணக்கிடைக்கின்றது. சாளரம் (சன்னல்) மக்களுக்குக் காற்று வருவதற்கான வழி வகை செய்வதாகவும் வேனிற்காலங்களில் அவர்களுக்குப் பயன்தருவதோடு, இதமான வாழ்விற்கு அடிப்படை காரணியாகவும் சாளரம் விளங்குகின்றது. இக்கருத்தை உணர்த்தும் விதமாக,

**வான் உற நிவந்த மேனிலை மருங்கின்**
**வேனில் பள்ளித் தென் வளி தரூஉம்**
**நேர்வாய்க் கட்டளை திரியாது, திண் நிலைப்**
**போர்வாய்க் கதவம் தாழொடு துறப்பக்**

**(நெடுநல்வாடை, பா. 60 - 63)**

என்னும் பாடல் அடிகள் வழியாக சன்னல் வானத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்த மேலான இடத்தில் அமைந்துள்ளது. அது வேனிற்காலத்துப் படுக்கை அறைக்குத் தென்றலாகக் கொண்டு வரும் திண்மையானது. அது நிலையையுடைய நன்கு பொருந்திய கதவுகள், காற்று நுழைய முடியாத படி திறமையாக மூடப்பட்டுத் தாழிட்டுக் கிடந்தன என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

 ISBN Number: 978-81-983005-5-3

### மழைநீர் சேகரிப்பு

மனிதன் உயிர் ஆதாரமாகத் திகழ்வது தண்ணீர் ஆகும். மனிதனின் உயிர் ஆற்றலை விரைவில் கொடுக்கக் கூடியதும் இதுவே ஆகும். ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்றவை மக்களின் நீர் ஆதாரமாக விளங்குகின்றன. மக்கள் தங்களின் இல்லங்களில் உள்ள தண்ணீரைச் சேகரிக்க பல்வேறு வழி வகைகளை அரசும் மக்களும் ஏற்றப் படுத்த வேண்டும். பழங்காலத்தில் பல்வேறு வகைகளில் நீர் சேகரிப்பு முறையை ஏற்படுத்தினார். ‘நிலாமுற்றம்’ எனப்படும் பால்கனியிலிருந்து மழைநீரை வெளியேற்றும் குழாய் கலைத்திறத்துடன் மகரமீனின் வாய் போல வடிவமைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறது என்பதை,

**நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து**
**கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய**
**கலித்துவீழ் அருவிப் பாடுவிறந்து அயல**

**(நெடுநல்வாடை, பா. 95 – 97)**

என்று மாடங்களில் விழும் நீர் சேமிக்கப்பட்ட செய்தியை நெடுநல்வாடை சுட்டிக்காட்டுகின்றது. மீன்வாய் வடிவம் கொண்ட நீர் வடியும் குழாய் அமைப்பு கூறப்பட்டுள்ளது. இது பாண்டிய மன்னனின் அடையாளச் சின்னத்தை நினைவுகூரத் தக்கவகையில் அமைந்துள்ளது. பழந்தமிழ் இலக்கியத்தில் கட்டிடம் தொடர்பான பல்வேறு

 ISBN Number: 978-81-983005-5-3

கருத்துக்கள் புதையலைப் போன்று குவிந்து காணப்படுகின்றன. ஆய்வாளர்கள், தங்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தேடிக் கண்டறிந்து, மக்களுக்கு உணர்த்துகின்றனர். அந்த வகையில் நெடுநல்வாடை இலக்கியத்தில் காணலாகும் கட்டிடக்கலை குறித்த செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**தொகுப்புரை**

*நெடுநல்வாடை* பழந்தமிழரின் கட்டடக்கலை பற்றி பேசும் இலக்கியமாகத் திகழ்வதற்கு முக்கியக் காரணமாக, நக்கீரர் படைப்பாற்றல் காரணமாகும். பண்டைய பாண்டிய மன்னர்களின் கலைத்திறனை நன்கு கண்டறிந்து, இலக்கியப் படைப்பில் ஈடுபட்டுள்ளார். பழந்தமிழர் கட்டிடக்கலையின் நுட்பங்களை நன்கு அறிந்தினர். அவர்கள் முன்னோர்கள் கூறுகின்றவாறு மரபு வழியில் கட்டிடங்கலை அமைத்துள்ளனர். கட்டிடங்கள் கட்டுவதற்கு என்று பல்வேறு நூல்களைப் பழந்தமிழர்கள் படைத்துள்ளனர். இவற்றையெல்லாம் கற்றறிந்தும் கேட்டறிந்தும் கட்டிட வடிவமைப்பை ஏற்படுத்தினர். கட்டிடம் அமைக்க சிறந்த மாதமாகச் சித்திரை மாதம் கருதப்படுகின்றது. பல்வேறு தொழில்நுட்பங்களோடு நிலா முற்றத்துடன் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டிடங்களில் விழுகின்ற தண்ணீர் கூட மீன்வடிவம் கொண்ட குழாய்கள் வழியாகச்


ISBN Number: 978-81-983005-5-3

சேகரிக்கப்பட்டுள்ளன. அரண்மனை முற்றங்கள் செல்வத்தின் இருப்பிடமாகத் திகழ்வதால் நிலைப்பேறு உடைய தன்மையில் அரண்மனை முற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மனித வாழ்வின் இனிமைக்கும் உடைமைக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக, வீட்டின் கதவு கருதப்படுகின்றது. நெடுநல்வாடை இலக்கியத்தில் கூறப்படுகின்ற கதவும் பகைவர்களிடமிருந்து தற்காத்துக் கொள்ளவும் பல்வேறு தொழில்நுட்பம் கொண்ட தன்மையோடும் அமைக்கப்பட்டுள்ளன. கட்டிடத்தில் மிகச் சிறப்புமிக்கத் தொழில்நுட்பம் கொண்டதாக, மரவேலைகள் கருதப்படுகின்றன. கதவு, சாளரம், நிலைகள், கட்டில் போன்றவை மரத்தினால் அன்றும் இன்றும் கட்டடங்களில் அமைக்கப்படுகின்றன. அதன் தொழில் காலத்தினால் வேறுபட்டுள்ளன. எனினும் அதன் தொழில்நுட்பம் இன்றும் புதிய வடிவில் வந்து கொண்டு தான் இருக்கின்றன. பழந்தமிழர் பின்பற்றிய மரபு சார்ந்த செயல்களும் இன்றைய கட்டடங்களில் வெளிப்படுகின்றன.

## குறிப்புகள்

[1] இராசு பவுன் துரை. *தமிழக நாட்டுப்புறக் கட்டடக்கலை மரபு*. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

 ISBN Number: 978-81-983005-5-3

[2] தட்சிணாமூர்த்தி, அ. *தமிழர் நாகரீகமும் பண்பாடும்.* யாழ் வெளியீடு, சென்னை - 600 040.

[3] தர்மராஜ், ஜே. *இந்தியக் கட்டிடக்கலை வரலாறு.* டென்சி பப்ளிக்கேஷன்ஸ், சிவகாசி.

[4] தெய்வநாயகம், கோ. *தமிழர் கட்டிடக்கலை.* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 600 098.

[5] பாலசுப்பிரமணியன், ச. வே. *சங்க இலக்கியம் மூலம் முழுவதும்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 108, இரண்டாம் பதிப்பு, 2011.

[6] மயிலை சீனி. வேங்கடசாமி. *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்.* சாந்தி நூலகம், சென்னை – 600 001, மூன்றாம் பதிப்பு, 1967.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-81-983005-5-3